செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௯. புரட்.	பகுதி
௬௪	செப்டம்பர்—1968	௩

அருங்கலத்துள் ஓர் ஆரம்

—*—

கி. நாச்சிமுத்து, பி. ஏ. (எம். ஏ.)
தமிழாய்வுத் துறை, கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

அருந்தமிழ்ப் புலவராகிய அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலத்தின் செய்யுளியல் 24-ஆம் நூற்பா உரையில் எண்சீர் ஆசிரிய மண்டில விருத்தத்திற்குக் காட்டாகக் கீழ்க்கண்ட பாடல் காட்டப்பட்டுள்ளது.

"வெறிவிரவு புன்சடைமேல் வெள்ளம் பரக்கும்
விறல்விசயன் ஆகத்து வெள்ளம் பரக்கும்
றைவிரவு நஞ்சுண்டு கண்டங் கறுக்கும்
கழலடைந்தார் தீவினையைக் கண்டங் கறுக்கும்

பொறிவிரவு பூண்முலையாள் போகத்த னாகும்
பொதுநீக்கித் தன்னடைந்தார் போகத்த னாகும்
நெறிவிரவு காஞ்சிநெறிக் காரைக் காட்டான்
நிழலடைந்தார் தம்மைநெறிக் காரைக் காட்டான்."

இப்பாடல் எங்கிருந்து எடுக்கப்பட்டது என்ற குறிப்புத் தமிழக அரசின் யாப்பருங்கலப் பதிப்பில் கொடுக்கப்படவில்லை. காஞ்சிநெறிக் காரைக்காடு என்ற தலத்தில் எழுந்தளியிருக்கும் சிவபெருமானைப் போற்றுகிறது இப்பாடல். இதனுடைய அமைப்பையும் போக்கையும் நோக்கினால் "இது தேவாரப் பாடலோ?" என்ற ஐயம் தேவாரத்திற் பயிற்சியுடையவர்கட்கு எழுவது இயல்பு. தேவார ஆசிரியர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பதிதோறும் சென்று பரமனைப் பாடி வழிபட்டவர்கள். அவ்வாறு வழிபடும் பொழுது தாங்கள் பாடும் ஒவ்வொரு பாடலிலும் பதிகளின் பெயர்களை வைத்துப் பாடும் வழக்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகினர். இப்பாடலில் காஞ்சி நெறிக்காரைக்காடு என்ற பதியின் பெயர் காணப்படுதலால் மூவரில் யாரோ ஒருவர் இதைப் பாடியிருக்கவேண்டும் என்று கருத இடமுண்டு. ஆனால் இப்பாடல் தேவார அடங்கன் முறையில் யாண்டும் காணப்படவில்லை ஒருவேளை செல்லரித்துப்போன தேவாரங்களில் ஒன்றாக இஃது இருந்திருக்கலாம். இக்கட்டுரையுள் இப்பாடல் தேவாரத்தைச் சேர்ந்ததுதானா? அப்படியானால் யார் பாடியிருக்கலாம் என்பன போன்ற செய்திகளை ஆராய்வோம்.

யாப்பருங்கலத்தின் ஆசிரியர் சமண சமயத்தைச் சேர்ந்தவர். தமிழறிஞர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை கருத்துப்படி (இலக்கிய வரலாறு- இரண்டாம் பாகம் பக்: 359) உரையாசிரியர் சைவர் ஆயினும் உரையில் காணப்படும் எடுத்துக்காட்டுப் பாடல்கள் பெரும்பாலும் சமண சமயத்தைச் சார்ந்தனவாகவே காணப்படுகின்றன. சிந்தாமணி, சூளாமணி போன்ற சமணச் சார்புடைய இலக்கியங்களில் உள்ள பாடல்களும், அருகனைப் போற்றுபவையாக இயற்றப்பெற்ற பாடல்களுமே பெரும்பான்மையும் எடுத்துக்காட்டுக்களாகக் காட்டப்பட்டுள்ளன. மேற் காட்டிய பாடலும், திருமூலர் திருமந்திரமும், நக்கீரர் திருவெழு கூற்றிருக்கையும் (பதினோராந்திருமுறை), இன்னும் ஒரு சில பாடல்களும் பிற சமயப் பாடல்களாக இருக்கின்றன. இங்கு

இவைகளைக் கூறுவதன் நோக்கம், அவை இடம் பெறுவதற்கு என்னகாரணம்என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கன்று; பிறமதப் பாடல்களும் இந்நூலில் காட்டப்பட்டுள்ளன என்பதை விளக்கவேயாம்.

யாப்பருங்கலத்தின் காலம் கி. பி. 12–ஆம் நூற்றாண்டின் முற்பகுதி (இலக்கிய வரலாறு 2–ஆம் பகுதி பக்கம 359–கா. சு. பிள்ளை). தேவார காலம் கி. பி. 6 முதல் 9 வரை. எனவே இப் பாடலைத் தேவாரத்துள் ஒன்றாகக் கொண்டால் கால முரண்பாடு ஒன்றும் எழவில்லை.

இனி இங்குக் குறிக்கப்பெற்றுள்ள "காஞ்சி நெறிக் காரைக்காடு" என்ற பெயரினை நோக்குவோம். இதற்குக் "கச்சி நெறிக் காரைக்காடு" என்ற மாற்று வடிவமும் வழக்கிலுண்டு. காஞ்சி, கச்சி எனத் தொன்று தொட்டு வழங்கிவருவது எல் லோர்க்கும்தெரிந்தஒன்று. கச்சிப்பேட்டு (இளந்தச்சனர் நற்:266) கச்சிப் பேட்டுக் காஞ்சிக்கொற்றனர் (குறுந் 213, 216)-ஆகியோர் இவ்வூரில் வாழ்ந்த சங்ககாலப் புலவர்களாகக் கருதப்படு கின்றனர்.

நகரங்களில் சிறந்ததாகப் போற்றப் பெறும் காஞ்சியில் பல சிவன் கோவில்கள் உள்ளன. அப்பரடிகளும் சேத்திரக் கோவைத் திருத் தாண்டகத்தில் 'கச்சிப்பலதளியும்' என்று பாடுவார். (1) கச்சி அநேகதங்காவதம், (2) கச்சி ஏகம்பம், (3) கச்சி நெறிக்காரைக் காடு. (4) கச்சித் திருமேற்றளி, (5) ஒண காந்தன் தளி ஆகியவை காஞ்சியிலுள்ள சிவத் தளிகளாகும்.

கச்சி நெறிக் காரைக் காடு என்பது இக்காலத்தில் திருக்காலீசுவரன் கோயில் என்று வழங்கப்படுகின்றது. காரை மரங்கள் மிகுதியாயிருந்தமையால் காரைக் காடு எனப் பெயர் பெற்றுள்ளது.

அப்பர், காஞ்சியிலுள்ள கச்சி ஏகம்பம், திருமேற்றளி ஆகியவைகளைப் பாடிய பாடல்களே இன்று கிட்டுகின்றன. கச்சிக்கு வந்தவர் அருகிலுள்ள அனேகதங்காவதம், கச்சி நெறிக் காரைக் காடு, ஒணகாந்தன் தளி ஆகிய தலங்களையும் வழிபடாமல் சென்றிருக்க மாட்டார். ஒருவேளை அப்பர் பாடிச் செல்லரித்துப்

போன தேவாரங்களில் காரைக் காட்டுக்குரிய தேவாரமும் ஒன்ருக இருந்திருக்க வேண்டும்.

சுந்தரர் அநேகதங்காவதம், ஏகம்பம், திருமேற்றளி ஓணகாந்தன் தளி ஆகிய பதிகளைப் பாடியிருக்கிருர். அவர் கச்சி நெறிக் காரைக் காட்டிற்கும் வந்து வழிபட்டுப் பாடாமல் இருந் திருக்க மாட்டார். அவருடைய காரைக் காட்டிற் குரிய பதிகம், கிடைக்காமல் போன பதிகங்களில் ஒன்ருக இருக்க வேண்டும். சம்பந்தர் கச்சியி லுள்ள எல்லாத் தளிகளையும் பாடியிருப்பினும், இன்று, திருமேற்றளி, அனேகதங்காவதம், ஓணகாந்தன் தளி ஆகியவைகளுக்குரிய பதிகங்கள் கிடைக்கவில்லை: கச்சி நெறிக் காரைக் காடு, ஏகம்பம் ஆகியபதிகளுக்குரிய பாடல்களே இன்று கிட்டுகின்றன.

மூவரில் அப்பரும் சுந்தரரும் காரைக் காட்டைப் பாடி யிருக்கலாம் என்று உய்த்துணர மட்டுமே முடியும்; ஆனல் சம்பந்தர் காரைக்காடு வந்திருக்கிருர் என்பதற்கு அவர் பதிகமே சான்ருக இருக்கிறது.

சம்பந்தர் ஒரே பதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதிகங்கள் பாடும் இயல்புள்ளவர். காட்டாகக் கட்சி ஏகம்பத்திற்கு நான்கு பதிகங்கள் பாடியுள்ளதைக் கூறலாம்.

கச்சி நெறிக் காரைக் காட்டுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பதிகங்களைச் சம்பந்தர் பாடியிருக்கலாம். அப்படிப் பாடி, மறைந்து போன பதிகங்களில் உள்ள பாடலாக "வெறிவிரவு" என்று தொடங்கும் இப்பாடல் இருந்திருக்க வேண்டும். அப்படி யெனில் இப் பாடலையும், ஏனைய சம்பந்தர் பாடல்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நம் ஆய்வுக்கு மிகுந்த துணை செய்யும்.

இப்பாடல் இயமகம் அல்லது மடக்கு என்னும் சொல்லணி வகையைச் சேர்ந்ததாகும். 'வெள்ளம் பரக்கும்.' 'கண்டங் கறுக்கும்' 'போகத்தனுகும்', 'நெறிக் காரைக் காட்டான்' போன்ற சீர்கள் மடங்கி வந்து சிலேடையாய் நின்று சொல்லின்பமும் பொருளின்பமும் தருகின்றன.

இப்பாட்டின் பொருள் பின்வருமாறு:-

"நறுமணம் கமழும் இறைவன் சடைமேல் கங்கையாற்

ஸ்ரீ

துரைத் தமிழ்ச் சங்க வெளியீட்டின் மறுபதிப்பு (எண்: 1)

திருக்குருகூர்

சிறிய இரத்தின கவிராயர்

இயற்றிய

புலவராற்றுப்படை

இது

சேதுசமத்தான வித்துவான்

ரா. இராகவையங்காரவர்களாற்

பரிசோதிக்கப்பெற்றது.

வெளியீடு:

மதுரைத் தமிழ்ச் சங்கம்,

தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை-1.

புலவராற்றுப்படை

முகவுரை

இவ்வாற்றுப்படை இயற்றியவர் திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரியிலிருந்த சிறிய இரத்தினகவிராயர் என்ப இவர் இற்றைக்கு முந்நூறு வருடங்கட்கு முன் விளங் செந்தமிழ்ப் புலவரும், மாறனலங்கார வுரையாசிரியருமா திருமேனி. இரத்தின கவிராயரின் வழித்தோன்றலாவர். இ இருநூறு வருடங்கட்கு முன் கல்வியுஞ் செல்வமும் ஒருங்கே விளங்கிய வள்ளலும், மச்ச புராணம், நீடூர்த்தலபுராண முத நூல்களியற்றியோருமாகிய இரசை-வடமலையப்ப பிள் கள்பேரில் இவ்வாற்றுப்படைபாடினர் இந்நூல் திருச்சி ரியிலே கொல்லமாண்டு அ௬அ-இல் அரங்கேற்றப்பட் க அவ்வேட்டில் எழுதப்பட்டுள்ளது. வடமலையப்பவள்ளலி பினர் திருநெல்வேலியில் இன்றும் சிறப்புற்றிருக்கின்றன வாற்றுப்படை சொற்சுவை பொருட்சுவை பெரிதுமை யப் படிப்போர்க்குப் பேரானந்தம் பயப்பது.

பத்திராசிரியர்.

திருக்குருகூர்
சிறிய இரத்தின கவிராயர்
இயற்றிய

புலவராற்றுப்படை

—○—

காப்பு

ற்றுப் படையை நரிப்படை யாக்கித்தன் வேற்படைக்குங்
ற்றுப் படைக்கும் விருந்தூட்டும் வீரன் கொழுங்கருணை
றுப் படைக்கும் வடமலை மால்ரை யூர்ப்புலவ
ற்றுப் படைக்குமுன் னிற்பான்செங் தூரிலறுமுகனே.

அரச வடமலையே யாதுலர்தம் வாழ்வே
பிரசையர சேயரச ரேறே—முரசப்
புலவராற் றுப்படையும் போர்வேலோய் நின்மேற்
புலவராற் றுப்படைபொற் பூண்.

பாயிரம்

ன்ன னநவரத கல்யாணன் பார்புரக்கு
ன்ன னிரசை வடமலைமேற்—பன்னுதமி
மற்றுப் படைக்கு மிரத்நகவி ஞன்புலவ
ற்றுப் படைபாடி னன்.

நூல்

ர்புகழ் தெய்வப் பசுந்துமாய் பூத்த
முகின் மேனிக் கருணையங் கடவு
டமு மசண்டமு மனைத்துர் பூத்த
பி முளைத்தெழும் பிரம

மலையப்பன் கவிராயர் பாடியது' என
தப்பட்டுள்ளது.

னிசைமுகப் பழமறை யீர்ந்தே னுவட்டெறி
திசைமுகப் பரிமளச் செந்தா மரையினு
மேனிலா வியமுகை மென்முலைக் குடைந்த
பானிலா வெள்ளிதழ்ப் பங்கே ருகத்தினும்
வெண்டுகில் வெண்பணி வேய்ந்துவீற் றிருந்த
பெண்டகை வெண்ணிறப் பேடை யோதிம
மறுபா னென்கென வமைத்தசொற் கலையா
யுறுபாற் கடலக டுதித்தெழுந் திங்க
ளல்வழிப் புகுமென தகவிருண் மாற்றுபு
நல்வழி காட்டிய நந்தா விளக்கங்
காவிலை யாடுங் களிமயில் கடுப்ப
நாவிலை யாடு நற்றமிழ்க் கவிஞன்
கவியொடு வாதி கமகன் வாக்கியெனப்
புவியிடம் பழிச்சிய புலமை யாள
னறம்பொரு ளின்பம்வீ டாமெனு நான்குந்
திறம்பட வுணர்ந்து செப்புநூ லறிஞ
னெண்பெயர் முதலா வீரைந் தெழுத்தும்
பண்புற வகுத்த பதங்க ளிரண்டு
மொருமூன்று புணர்ச்சியு மிருமூன்று விகாரமும்
வேற்றுமை யாறுந் தோற்றிய வல்வழி
தொழின்முத லாகத் தழுவுமீ ரேழுஞ்
சாரியை யுருபுஞ் சேருமிரு திணையுஞ்
செய்யுளும் வழக்குமென் றெய்துமிரு திறனு
மொருவகை தழீஇய விருவகை யெச்சமும்
வினைமுற்றுக் குறிப்புமுற் றெனுமிரு குறிப்பு
மூவகை யிட னு மூவகைக் காலமு
நால்வகைச் சொல்லும் பாலோ ரைந்துந்
தொகையோ ராறு மிகைவழு வேழ
தொகுத்திடு மெட்டு வகைப்பெ
மிடைச்சொ லுரிச்சொலென்

காட்சி முதலாங் கைக்கிளைப் பகுதியு
மாட்சி யியற்கை மணத்தன் முதலாக்
களவிற் குரிய கிளவித் தொகையு
முற்புணர் மகிழ்ச்சி முதலா வுரைத்த
கற்பின் வகையுங் கட்டுரை யொழிபு

மெழுத்தசை சீர்தளை யியைந்த வடிதொடை
வழுத்துபாப் பாவினம் வண்ணமீ றாகக்
கோப்புற வகுத்த யாப்பின் விதியு
முத்தகங் குளக மெய்த்தொகை தொடர்நிலை
யென்னநால் வகைத்தாய் மன்னிய செய்யுளுஞ்

செறிவுமுத லாக நிறைகுணம் பத்துடை
வைதர்ப்ப பாகமு மெய்திய கவுடமுந்
தன்மை யுவமை தானமுத லாக
வன்மையில் பாவிகம் வரைபொரு ளணியுந்
தேமூற் றிருந்த கோமூத் திரிமுத

லக்கரச் சுதகமீ றானசொல் லணியு
மிக்குள மடக்குமென வேறுவே றிசைத்த
தொல்காப் பியமுத லொல்காப் பனுவலுட்
கருவி செய்கையென் றிருவகைத் தாய
வெழுத்துச் சொற்பொரு ளியாப்பணி யெனத்துறை

பழுத்த விலக்கணப் பவ்வங் கடந்து
மிலக்கிய மெனுங்கட லெளிதினிற் கடந்துங்
சலக்கும்வெங் கலிக்கடல் கடப்பரி தாகி
யீகை யென்னு மிரும்புணை யேற்றி
யோகைசேர் செல்வமென் றோர்பெருந் தீவினிற்

சேர்த்தியுயிர் காக்குந் தியாகி யென்றோர்
கீர்த்திபெறு மீகான் கிடைத்தலின் மையினாற்
றொல்லையும் வினையாஞ் சுழிசுழித் தலைப்பச்
செல்லல்கூ ரவாவெனுந் திரையெடுத் தெறிய
வன்பசி யென்னு மகரமீன் விழுங்கத்

துன்ப மென்னுஞ் சுறவெதிர் பாயக்
கவலை யென்னுங் கடுங்கரா மீர்ப்பத்
துவளுபு மேனி சோர்ந்துநடு நடுங்கியு
மன்புள சிந்தைய ராகுநட் டோரெனும்
வன்பிலா வோட்டை வங்கத் தேறலு

மப்புறத் தியங்கா தலைதலை மீதுறக்
குப்புறத் தாழ்ந்து கூட வமிழ்ந்தியு
மெவ்வழி யேனு மினிமுயன் றுய்துமென்
றவ்வழி யுஞற்று மருந்தொழிற் பாசியைப்
பற்றெனப் பற்றிப் படர்தலு நைந்துநைந்

தற்றிடை சிதைப்ப வலக்கணுற் றிரங்கியு
மாக்க மென்னு மக்கரை சேர்துமென்
றாக்கமி விரவெனு மோர்பசு மட்குடங்
கைக்கொடு நீந்தக் கரைந்துகரைந் தேகலு
மச்குடம் போல வகங்கை கரைந்து

நல்குர வென்னு நடுக்கான் புகுந்து
மல்குவெந் துயஃராம் வனத்தி வளைப்பக்
கிளையெனுந் தூறுகாற் றளையெனச் சுற்ற
மாயா விரவெனும் வன்பேய் தொடர
வீயா வன்கண ரெனுந்தேள் கொட்ட

நெடும்பசி யென்னுங் கொடும்புலிக் கிரையாய்
மானமுங் குலமும் வண்மையும் பொறையு
ஞானமுந் தருமமு நன்மையுங் குடிபோய்க்
கருத்துறு பயமுங் கவ்வையும் பழியும்
வருத்தமும் பிணியும் வதியுமா லயமாய்ப்

படல்கொடு சாத்து மிடனிலா மனையுங்
காய்ந்தபுத் தோலை வேய்ந்திடாக் கூரையும்
வெளியறக் கற்றை விரித்துவான் முகட்டிற்
றளிவிழா திறுக்கிச் சுற்ரு முகடும்
பொருக்கறத் தெளித்துப் பெருக்கா முன்றிலும்

புரையறத் தீற்றிப் புதுக்காச் சுவருந்
தரையலான் மெத்தை தழுவாச் சேக்கையு
மெழுகிமென் கோல மெழுதாத் திண்ணையுங்
கழுநீர் கலந்து பொழியாத் தொட்டியும்
பொக்கா வடுப்பும் புகையா வட்டிலு

மங்கார் பதம்வைத் தடுக்காக் குழிசியு
மயன்மனை புகுதாச் செயன்மனை யாட்டி
மஞ்சணீ ராடி வயிங்கா மேனியு
மஞ்சனந் தீட்டா வயில்விழிக் கடையுஞ்
செம்பஞ் செழுதா வம்புயப் பாதமும்

வரிவளை புனையா விருகைக் காந்தளுந்
திலகம் பொறியாத் திங்கள்வா ணுதலு
மிலகுவெண் டுகில்பொறா திடுகுநூ லிடையு
மைம்முகிற் காடென வகிர்ந்துசிக் கறுத்து
மொய்ம்மலர் செருகி முடியாக் கூந்தலு

நயனிலா நடையு நகையிலா முகமும்
பயனிலா மொழியும் பரிவிலா வுளமும்
பாலொடு வறந்து பசியொடு வெதும்பித்
தோலொடு திரங்கிச் சுருங்கிய முலையு
மம்முலை நெருடி யரும்பசி பொறாது

விம்முசெங் கனிவாய் மென்பசுங் குழவி
சுவைத்தலு மொருபாற் சுவைத்துளி பெறாது
நெடிதுயிர்த் தயர்ந்து துடிதுடித் தேங்கி
நோய்முக நோக்கிய தாய்முக நோக்கி
யிரித ழுண்க ணீர்கரைந் தொழுக

மூரல்வெள் ளெயிற்றின் முளைநிலா வொழுக
மழலையந் தொனிவிடுத் தழுமிளங் குரலு
முற்பட முதிர்ந்த பொற்புடைச் சிறாஅ
ரொருபொழு தாயினு மூண்சுவை காணா
திருபொழு தேமாந் திணைக்கவு ளதைப்ப

வெண்ணெய் காணாது தண்முடி காய
மிளகு காணா தொளிமுக மழுங்க
நரம்பெழுந் தென்பு நிரம்பமெய் தோன்ற
வெக்கிய வயிரு விலைபோற் குழைய
நக்கிய கடைவாய் நாவொடு பிசுக்குறக்

கழுங்கெனப் பசிய கண்களுட் குழியப்
பழந் துணிக் கந்தை பறந்திடை நால
வாயே யாயே யீயாய் கூவென
முகிற்றலைப் பருவ முழக்கெழுந் தேரையிற்
றுகிற்றலை பற்றித் தொடர்ந்தழு தரற்றலுங்

காண்டொறுங் காண்டொறுங் கவலுறு சிந்தைய
னீண்டினி யென்செய் தூஉ மென்செய் தூஉ மென்னப்
பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருளெனத் துணிந்துந்
திரைகட லோடியுந் திரவியந் தேடென

வுரைசெயு மவ்வை யுரைபகுத் துணர்ந்தும்
வாழ்ந்தார்க் குறவு வழியினு முளதாந்
தாழ்ந்தார்க் குறவிலைத் தமரினு மென்றுங்
கல்லா வறிவுடைப் பொல்லா மூர்க்கரைக்
கைப்புறப் பழுத்த காஞ்சிரை போன்று

முப்புநீர் போன்று மூவர்ப்புறு செல்வரை
நீரினுட் கிடப்பினு நெட்டிபோற் சிறிதுள்
வீரமு மிரக்கமு மில்லாப் புல்லரை
யுயர்குடிப் பிறந்து முளைக்கரும் பதடியிற்
பெயர்பெறுந் திறனிலாப் பேதை மாந்தரை

மாங்கனி தொடாது வளைக்குமுள் வேலியிற்
றுங்கொடா விடினுந் தடுக்கு நீசரை
முற்புரி தவத்தா லற்பவாழ் வெய்தி
யிந்திரப் பட்டம் வந்தது தமக்கென
வொருவரை யெண்ணா திருசெவி செவிடாய்

விழிகண் குருடாய் மொழியுமூங் கையுமாய்
மெய்யுங் காலுங் கையு மெழாது
முன்பொரு சொல்லும் பின்பொரு மொழியுங்
கண்டா லொன்றுங் காணா தொன்று
முண்டா லொன்று முண்ணா தொன்றும்

பலபல பிதற்றிக் கலகலென் றொலித்துச்
சட்டஞ்செய் துலகைத் திட்டஞ்செய் பவர்போன்
முன்னிறை யிரட்டி பின்னிறை யேற்றி
யடுங்கோ லென்னக் கொடுங்கோல் செலுத்தி
யடியடி யென்ன வடித்தடித் தெளிய

குடியலைத் தோட்டுங் கொடியபா தகரை
யப்பிறப் பினிலே யளித்தன மதனா
லிப்பிறப் பினிலே யிப்பொருள் படைத்தே
முற்றவர்க் கின்னு முதவின் மேன்மேலு
மற்றுள பிறப்பினும் வருநமக் கென்று

சொல்லவந் தவர்மனச் சூழ்ச்சி யறியாது
செல்வநிலை யன்றெனுஞ் செய்கை குறியா
தீதலே யறமெனு நீதி கருதா
துரனார் பசுவா யுணர்விலாக் காகமுங்
கரவா கரைந்துணக் கண்டு தெளியாது

வாரறப் புடைத்து வட்டமிட் டெழுந்து
பூரண குடம்போற் புளகிதஞ் செறிந்த
கொங்கையும் வாள்வளைச் செங்கையுங் காட்டி
வாடையு மருந்து மஞ்சளுங் கூட்டி
மேடைமே னின்று வெண்ணகை கோட்டிச்

சொக்கிடு மாய மைக்கணான் மருட்டும்
பாசிலைமு யல்குல் வேசையர்க் கலது
தனம்பெரி தளிக்க மனங்கூ டாது
படிறுபல விளைத்துக் கொடிறுக வுடைக்குங்
கூர்ங்கை யல்லவர்க் கீர்ங்கை விதிராது

வறியவர்க் காணின் மொறுமொறுத் திகழ்ந்து
பகைத்தவ ரென்னத் திகைத்தெதிர் நோக்கி
யிஞ்சி தின்ற வெஞ்சினக் குரங்கென
வகங்கெட வாளா முகங்கடு கடுத்துக்
கல்லெறிந் தன்ன வல்லுரை கூறி

நாய்போற் குரைத்துப் பேய்போற் குலித்துத்
தள்ளெனத் தள்ளித் தலைக்கடை யடைத்துத்
தண்டிய குண்டோ தரன்போற் றெருந்தியும்
பண்டியும் பாவமும் பருக்கப் பருத்து
நமரிவர் நமக்கிவர் நண்பின ருரிய

தமரென வடுத்தோர் தமக்கு மெள்ளளவும்
பாத்துணு தலவில் பழம்பொருள் புதைத்துவைத்
தீத்தொகு தேன்போ லிழக்கு மூடரை
வேனிலிற் றளர்ந்து விடாய்கெட நுகர்வான்
கானலை நீரெனக் கருதுபு சென்றெனக்

கற்பசு முலைப்பால் கறப்பான் புக்கென
வற்யுறு மணனெய் வடிப்பா னிசைந்தென
வறிதினி லடுத்துப் பெறுபயன் வேண்டி
யிரவலர்க் கொருகா சீயாக் கைகளை
வரைவிலா தளிக்கு மழைமுகி லென்றும்

பொய்யொழிந் துரையாப் புரைகொள்பாழ் முகத்தை
மையொழிந் திலங்கும் வாண்மதி யென்று
மொருவரைத் தாங்கா வுரனிலாப் புயங்களை
யிருவரைச் சிகரத் திகலுடைத் தென்றும்
வழுவறத் தேர்ந்து வடித்துநன் மதுரந்

தழுவிய நவரசத் தண்டமிழ்ப் பாகைக்
காட்டுக் கெறித்த கதிர்நிலா வென்ன
மேட்டுக் கிறைத்த விழுப்புன லென்னப்
போதமில் செவிடர்முன் னூதுசங் கொலியெனக்
கயரிடை யுகுத்த வமிர்தென வாங்கவர்

தொள்ளா மரச்செவி யுளளே தூஉய்
வேளையன் றின்று நாளைவம் மென்ன
வழிபல தேய்ந்து குழிபட நடந்து
நூல்கொளுந் தமிழை நுவன்றிடும் வாய்போற்
கால்களுஞ் சலித்துக் கருந்தழும் பேற

வூர்தரு சகடத் துருளே போலவும்
பேர்தரு மூசற் பிறழ்வடம் போலவும்
போவதும் வருவது மாவதே தொழிலாய்
நாட்செல நாட்செலத் தாழ்ச்சியாய்ப் பலமும்
பஞ்சியாய்க் கழிய விஞ்சினீள் கலியா

விரைமுகக் கீரிமுன் வருபொறிப் பாந்தளப்
பாந்தள்வாய்ப் பட்டு மாந்து தேரை
கொடிச்சிறு தூண்டில்வாய்த் துடித்தெழு கெண்டை
பருந்துவாய்க் கவ்வ வருந்தும் பார்ப்புத்
தொகப்படு மொட்டில்வந் தகப்படும் பறவை

யானைவாய்க் கரும்பு வேலைவாய்த் துரும்பு
வலைவாய்ப் புகுமொரு மானெனத் தியங்கி
யுலைவாய் மெழுகென வுருகிவெய் துயிர்த்துச்
சிதலை தின்ற முதுமரம் போலவும்
புல்லுரிஇ படர்ந்த சில்லி போலவு

மிளங்களி றுண்ட விளங்கனி போலவுந்
தும்பி குடைந்த தம்பம் போலவு
முள்ளுற மெலிந்து வெள்ளுடற் கோதாய்ச்
சலமதி யெனமதிச் சஞ்சலம் பெரிதுற
நாழிகை யொருமா ஞளொரு மாதம்

வாழிய மாதமோர் வருடமாய் நீடத்
திரிதரு நாளோ ரிரவிடைச் சலியா
வொடுங்கிய மெய்யன் கொடுங்கை யணையாக
வொருசிறி தாங்கே யிருவிழி முகிழ்ப்பக்
கனவுகண் டிதுவோர் நனவென விழித்தனன்

யாதோ வென்னின் மாதே கேளாய்
குடதிசைப் புறத்தோர் நெடுவரை முகட்டி
லாறாப் பசிக்கனன் மாறா துமூன்று
தாகமுந் துயருஞ் சோகமும் பெருகித்
தளர்வுறு மஞ்சிறைச் சாதகச் சேவல்

கிளையொடும் பார்ப்பொடுங் கீழ்த்திசை நோக்கி
யெழுந்துசெல் பொழுதி லினவளை கொழிக்குங்
கொழுந்திரைப் படுகரைச் செழுந்திணை மருதத்
திங்கிலங் குளிர்ப்புற மின்னரம் பெழுகூற்
கருமழைக் கொழுந்து பெருமழை பொழிய

வருந்துளி யமுதம் விருந்துகூட் டருந்தி
யெல்லையின் மகிழ்வொடு மொல்லையின் மீண்டன
னீண்டிவண் வரும்வழி யாண்டொரு நெறிக்க
ணறைமலர்க் கூந்தற் பிறைமலி வாணுதற்
பவளமென் கனிவாய்க் குவளையங் கடைக்க

ணிணைத்தடித் திரண்டு பணைத்தெழு கொங்கை
யிறுமிறு மென்ன மறுகுநான் மருங்குற்
சிலம்புபொற் சதங்கை யலம்புஞ் சீறடித்
தாயினு மன்பிற் சேயிழை யொருத்தி
கருநிறப் புயல்போன் மருவுமோர் தலைவன்

நன்மொழி மாறா தென்முன மெய்தி
விளங்குதங் கையின்மா துளங்கனி யொன்று
நன்கொடு பெறுகென வென்கையி லீந்தனன்
வாங்கினன் வல்லையி லீங்குவந் தடைந்தே
னங்கதற் குறுபய னிங்குநின் றெளியே

னத்திசைக் கேக வவனியேழ் புரக்கு
மைத்தகு நிறத்தோர் மன்னர்மன் னவனு
லின்புறு பெருவள மெய்துவ துளதென
வன்புறு மனையாட் கறிவுறப் பகர்ந்து
களிப்பொடு மெழுந்து வெளிப்புறப் படுதலு

மந்தண ரிருவர் வந்தது கண்டனன்
பிறைவடந் திகழ்முலைப் பெண்ணணங் கனையவர்
நிறைகுடஞ் சுமந்து நேர்வரக் கண்டனன்
கரிக்குரீஇ யிடம்பாய்ந் திருக்குதல் கண்டனன்
கருடன்வந் திடமா யருடரக் கண்டனன்

நன்றிகூர் நிமித்தமீ தென்றுகொண் டாடினன்
றிசழும்வெண் டரளமுஞ் செம்பொனும் வரன்றி
மொகுமொசென் றருவி முழங்கிவீழ் குன்று
மாரமுந் தேக்கு மசோகமு நாகமும்
வேரலு மைவனம் விளையுஞ் சாரலுஞ்

சிறையடித் தகவுஞ் செழுங்களித் தோகையுங்
கறையடித் திரளுங் கடும்போர் மடங்கலு
முறப்புலி யெதிர்பாய் மறப்புலிக் குழாமும்
விடாவடி வள்ளுகிர்க் குடாவடித் தொழுதியும்
பெறுகுடிக் குறவர் சிறுகுடிக் குரம்பையு

நிரம்பிய குறிஞ்சிப் பெரும்புலங் கடந்தனன்
விராவரும் பராரைக் குராவு மராவுங்
காரையுங் கரிந்த சூரையு மிருப்பையுஞ்
சருகுபட் டுலர்ந்த கருகுபைங் கள்ளியும்
விடரெழுந் தெங்கணும் படர்வெயிற் கானலு

முரிசிறைக் கழுகும் விரிசிறைப் பருந்து
முன்னாய் வெகுண்டிகல் செந்நாய்க் கணமு
மிடைந்தவெம் பாலைக் கொடுந்திணை கடந்தனன்
பைங்குலை முல்லையுஞ் செங்குலைக் காந்தளு
நறுஞ்சினைக் குருந்துங் குறுஞ்சுனைக் கலுழியுந்

தாற்றுக்கதிர் வரகு மேற்றுத்தொறு நிரையு
மதுவியல் கூந்தற் பொதுவியர் குரவையு
மன்னிய முல்லை நன்னிலங் கடந்தனன்
தடம்பணைச் செந்துண ரடம்பின் கானமும்
விரும்புவெண் முகைமுத் தரும்புபுன் னாகமுங்

தாங்குலைங் குடக்காய் தூங்குமுட் கைதையுந்
திவள்சிலைப் பணிலமுந் தவழ்கழிக் கானலு
முடைப்புலால் பகருங் கடைப்படு களமு
மப்பள வளாய வுப்பள வளமுஞ்
சைவலப் படலையுங் கைவலத் திமிலும்

பாய்மரம் விரித்து வேய்மரக் கலமும்
பட்டின வளாகமு மட்டிலா திசைந்த
நெய்தலஞ் சூழ ணெய்தினிற் சாருமுன்
மற்றதன் மருங்கில் வான்முக டளந்து
சுற்றிய பளிக்குச் சுவர்மணி மாடமுந்

தோரண நாற்றுந் துகிற்கொடி மறுகு
மாரண வேதியர்க் கக்கிர காரமுஞ்
சித்திர முகப்புந் தேவரா லயமு
நித்திலப் பெருந்தூ ணிறைத்தகா வணமு
நித்தலும் பொழியன சத்திர சாலையு

மாடகத் திரண்மூலைப் பாடகச் சிறடிச்
சூடகக் கையினர் நாடகத் தரங்கும்
வாழையும் பலாவு மடற்பசும் பூகமுந்
தாழையு மாவுந் தழைத்தபூங் காவுங்
குவளையுங் கமலமுங் குமுதமுஞ் செறிந்து

தவளையுங் கயலுந் தாவும்வா விகளு
மடைகரைப் புளினமுங் குடையுநீர் மதகு
மாற்றுநீர்ப் படுசையு மூற்றுநீர்க் கேணியுங்
கன்னலம் படப்பையுஞ் செந்நெலங் கழனியு
முழுதொழின் மாரு பழுவ ரோதையு

மாலையு மிளமரச் சாலையு மெங்கணுஞ்
சூழ்ந்து விண் ணிமையவர் வாழ்ந்தபொன் னுலக
நவநிதி யொடுபோந் தவனியில் வந்தெனத்
தரையூர் சிறப்புடை யிரையூர் புகுந்தனன்
றிருந்துபொற் கோயிற் செழுமணி முகப்பிடை

யிருந்தன னக்கணத் தெறிகடன் முழக்கென
வல்லியங் குறுங்கண்வார்ப் பல்லியங் கறங்கத்
தண்கதிர் மதியென வெண்குடை கவிப்பத்
தேமரு மெல்லிதழ்த் தாமரை முகத்தியர்
காமரு கற்றைவெண் சாமரை யிரட்ட

வெள்ளடை நாசியர் வெள்ளடை யுதவ
வாளஞ்சு கண்ணியர் காளஞ்சி யேந்த
வொருதனித் தடக்கை யிருபிறைக் கோட்டு
மும்மதஞ் சொரியும் வெம்மத நால்வாய்
முகபட மிலகிய புகர்முக விகடப்

போதகக் கழுத்தின் மீதிலோர் புலவ
னெதிர்ந்தனன் மன்னோ வெதிர்ந்தனன் மன்னோ
வதிர்ந்தன யானையீண் டடைகுநர் யாரென
வத்திசை நோக்கலு மித்திசை நோக்கினன்
யானெதிர் செலவவன் றானெதி ரணுகின

னொருவ ரோருட லோருயி ரிவரென
விருவரு மிருமார் பிணைசந்துறத் தழுவினம்
விள்ளருங் காதன்மீ தூரமீ தூர
வுள்ளமும் வாய்மையு மொன்றுபட் டுவந்தன
நலிந்தவெங் கலியா னாடொறும் புலவ

மெலிந்தனை கொல்லோ மெலிந்தனை கொல்லோ
முற்றிய வுன்றுயர் முழுவது நீங்குதற்
குற்றது கால முரைக்குவல் கேளாய்
மாரிசூழ் குடுமி நேரிமால் வரையான்
கரைபொரு தரங்கத் தரளமா நதியா

னியலிசை முத்தமிழ் யாவரு முணர்ந்து
பயிலிருங் கோளப் பாண்டிநன் னாட
னிரையூர் வளைதவ ழிரையூர்க் கதிப
னுரங்கெழு நடன துரங்க மிவர்ந்தோன்
மருவலர் வயிர மணிமுடி யிடறுங்

கருநிறக் கரடக் கடாக்களிற் றுதய
ஞலமு மமுதமு மளவிய மாதர்கண்
ணீலமு நீலமு நீங்கா மார்பினன்
பரசிய மூவகை முரசதிர் முன்றில
ஞழிகும் புவிபுகழ் மேழியங் துவசன்

பொருதிரைத் தலறுந் திரைதிரைத் தெறிந்த
நந்தூர் கடல்வாய்ச் செந்தூர் முதலாந்
தலமோ ராறுஞ் சிரமோ ராறு
மின்னவிர் முடியும் பன்னிரு கரமு
மழகுறப் பொலிந்த மழகளி றனைய

கந்தனை யுமையாண் மைந்தனைக் குறமான்
மோகன வடிவேன் முருகனை மயூர
வாகனை யநுதினம் வழுத்துபே ராணையன்
றெள்ளிய கலைபயில் பள்ளியி லரிவரி
கற்குமு னேகொடை கற்றறி நிபுணன்

சற்குண லளிதன் சரசசல் லாபன
செவியினுங் கையினுஞ் செல்பவர்க் கினியநாற்
கவியெனு மமுதமுங் கனகமு மிறைப்போன்
றன்முகங் கண்டவர் தாங்கள்பின் புல்லர்பேய்
வன்முகங் கண்டு மலங்கா தருள்வோ

னருமையும் பெருமையு மடுத்தவ ரெளிமையு
முரிமையும் பழமையு முண்மையு மறிந்தோன்
மருண்டுசொப் பனத்து மிரண்டுரை யாத
சத்திய வசன னித்தியகல் யாணன்
வரையா தெவர்க்கும் வழங்குபொன் மேகங்

கரைசடந் தொழுகுங் கருணைத் தடங்கட
லியலவைப் பரிய நடகுணக் குன்ற
மன்பு கனிந்த வின்பக் கொழுங்கனி
பெருமைக் களஞ்சியந் தருமக் கொள்கல
மாதுலர் திரவியம் வேதியர் தாபரங்

கற்றவர் கண்மணி யுற்றவர் பிராண
னுவலர் கற்பக மேவலர் கூற்ற
மேற்றவர் கலிநோய் மாற்றுசஞ் சீவி
தரைமுழு தாளுந் துரைகள் சிகாமணி
தந்திர விவேகி மந்திர யூகி

யொருதனி வீரப் பொருதிறற் சேவகன்
பொறுமையி லுயர்ந்த பூமி பாலகன்
சிறுமையில் பெருநிதி சேரள தேசன்
சைவசித் தாந்தங் கைவரு குரிசின்
முல்லையம் பதிசூழ் நெல்லையம் பதிவாழ்

பிடிநடைப் பூரணக் குடமுலைச் சிறடித்
துடியிடைக் கோதையெம் வடிவுடைத் தாயொடும்
வரைவனப் பெருமா னரசுவீற் றிருப்ப
மனைத்தளங் கண்ட மணிநெடுங் கோயி
லனைத்தழ குங்கண் டமைத்தது மன்றிப்

பாவியற் றமிழ்தேர் காவியப் புலவர்
கரகம் பிதத்துடன் சிரகம் பிதஞ்செயத்
தேனூற் றிருந்து செவிதொறுங் கனிய
நானூற்றுக் கோவையு நாற்கவி வண்ணமும்
பலர்புகழ் நீடூர்த் தலபு ராணமு

மிருநிலம் புகழு மொருகலம் பகமு
நீடுல குவப்பப் பாடிநிலை நிறுத்துங்
கூறுசொற் கவிதா சாருவ பௌமன்
வாரணக் கொடைபயில் காரணக் கொடையான்
றருவொப் பெனவெழு தாரணி புரக்கு

மிருவப் பன்பெறு மிர்ச குமாரன்
றெரிதமிழ்க் கூடற் பெரியகர்த் தாக்கள்
வரிசைப் பெயர்பெறும் வரிசைத் துரைமகன்
சிங்காச னத்துரை மங்கா மைக்குமுன்
சூரிய மூர்த்திதன் காரண வரத்தாற்

பேர்பெற வுதித்த சூரிய மூர்த்தியோ
டரசர்க் கரசென வவனியேழ் புரக்கு
மிருவப் பனுக்கு மின்னுயிர்த் தாதை
கருவுடை மேகக் கடுஞ்சிறை தவிர்த்த
பருவுடைப் பெருமான் றிருமலைக் கொழுந்துதன்

ஒருதவக் கொழுந்தென வருசிவக் கொழுந்து
ஞான கரனபி மானு பரணன்
செந்தமிழ்க் குதவுந் தியாக வாரிதி
வந்தவினை தீர்த்த மகாரா சனுக்கும்
வாரிசூழ் கிடந்த மகிதலம் புரக்குங்

காரிகூ டற்றுரை கல்விக் களஞ்சியந்
தாயகத் துணையெனு நாயகப் பெருமாள்
மேகவார் குழலியர் விழிமனங் கவரு
மோகநா யகனெனு மேகநா யகவேள்
விறள மணிய காரர்சட் டம்பி

வைத்தவா ரமுமபி மானமும் பொறுமையுஞ்
சத்தியவா சகமுந் தமிழறி புலனும்
பத்திசா துரியமும் பொலிவுறு நிபுணன்
முத்துநா யகமலர் மூவேந் தருக்கும்
பெருமைபெற் றுயர்ந்த வருமைமைத் துனவேள்

இரசைப் பதிவள ரிருவப் பனையருள்
வரிசைப் பெரியவன் வடமலை யப்பனைத்
தஞ்சமென் றடைந்தே னஞ்சலென் றளித்தா
னித்திறம் பாரவன் கைத்திறம் பாடின
னுதலா ரியு மவனையே பாடிப்

போதியென் றுரைப்பப் புகழ்ந்தவற் பணிந்து
சிந்தையி லெழுந்த சிறுகளி முதிரத்
தந்தனை செல்வந் தமிழ்வலோ யென்னச்
சென்றனன் பொற்குடஞ் செறிந்தொளி ராடகக்
குன்றென வுயர்ந்த கொடிநெடு மாளிகைப்

பச்சொளி நீலப் பருக்குமிழ் செறித்த
வச்சிர கபாடம் வகுத்தநின் முன்றிலிற்
குடகமு மீழமுங் கடகரி நிரைப்பக்
காம்பிலி யாரியம் வாம்பரி வஃகுப்ப
வல்லமுந் தளுவமு மணிமுத் தளப்பக்

கொல்லமுங் கவுடமுங் குடநிதி யிறைப்ப
மகதமுங் கடாரமுங் குகுதமும் வளைந்து
கவிகையுஞ் சுடர்மணிச் சிவிகையுங் குவிப்பத்
தென்கலிங் கந்தினம் பொன்கலிங் கந்தரக்
கருநட மாளுவங் குருமணி சொரிய

வங்கஞ் சிங்கள மணிமுடி யேந்தக்
கங்கங் குலிசங் கவசம் வழங்க
மையலங் களிற்று மணிமுடி யரசர்
கொய்தபட் டாடைக் குறும்பாய் விரித்துக்
கையணை நாப்பண் செய்யகண் முகிழ்ப்ப

முறையிடுந் தெவ்வர் முறைமுறை முத்தந்
திறையிடுந் துழனி செறிந்தபொன் வாசலி
னின்றனன் சமையய்யா தென்று வினைதலு
மாதுலர் வறியோ ரடுத்தவ ருற்றவ
ரேதிலர் பெரியவர் யாரையு மழைத்து

வரிசையின் முறைமுறை நிரைபெற விருத்திக்
கனியுமுக் கனியு மினியபாற் குழம்பு
மிறுகுவெண் டயிரு நறியவா னெய்யு
மறுவிலா வடிசிலு மலிந்துதேக் கெறிய
வறுசுவைக் கறியொடு மன்பொடு மருத்தி

மனந்துணிந் தெவர்க்கும் வரையா தம்பொன்
றினந்தினம் பொழியுந் தியாக மண்டபத்துச்
சூரிய படத்தாற் றிலங்குபூந் தழுவணைச்
சீரிய தமனியச் சிங்கா தனத்து
வேதிய ரொருபால் விருந்தின ரொருபால்

வாதிய லேழிசை வல்லவ ரொருபாற்
காவல ரொருபாற் கவிமழை பொழியும்
பாவல ரொருபாற் பதிந்துசூழ்ந் திருப்ப
விருந்தவன் விரைந்தாங் கெழுந்தெதிர் வந்தனன்
பரிந்துமுன் னெடுநாட் பழகுநண் பினர்போன்

முற்றவத் துறுபய னுற்றதின் றென்றனன்
வருகவென் றொருகை யிருகையிற் றாங்கினன்
வியப்புட னுள்ளே பயப்பயக் கொடுபோய்த்
திருத்திக ழாசனத் திருத்தி யிருந்தனன்
முளரியின் மலர்மகள் முகமலர் குடிகொள

வொளிபெற வெனதுட லுளமொடு புளகெழ
விதிவிளை தெறுகலி விடைகொள வருண்மழை
குதிகொள விணைவிழி குளிர நோக்கினன்
குருமணி மகரக் குழைக்கா தழக
வருள்பரி மளிக்கு மம்புய விலோசன

சுந்தர சீதள சந்திர வதன
மடலவிழ் குவளைமேல் வரியளி துளிநறை
யிடையிடை பொதுளிய விருபுய பூதர
கொடியிடை மடவியர் குடமுலை மிருகமதம்
வடிபுழு கொடுகமழ் வரைநெடு மார்ப

தியாகவை போகபூ லோகதெய் வேந்திர
பலகலை நிபுண பார்த்திப சேகர
கல்யுக கன்ன கருணை கடாட்ச
மதுரித வசன விதரண சூர
விரவலர் தவமே மருவல ரிடியே

சுற்றவர் துணையே யுற்றவ ருயிரே
முதியபாட் டமுதே மதுரைவீட் டரசே
யிரசையம் பதிவாழ் கருணையங் கடலே
வடமலை சாயினுந் திடமலை யாயெனக்
கடமலை யழைப்ப வுடன்மலை வகற்றித்

தடமலை யேந்தும் வடமலை வேந்த
வென்றுசொன் மதுர வியற்றமி ழிசையொடுந்
துன்றுநற் பொருளொடுஞ் சுவைபெறக் கேட்டனன்
பெருகிய வுவகை கரைகடந் தேற
மூட்டுபொற் கஞ்சுகப் பூட்டற நிமிர்ந்து

வென்றிகொண் மணிப்புயம் வீங்குறப் பலகா
னன்றுநன் றென்ன நன்முடி யசைத்தனன்
பொருக்கென வெழுந்து சரக்கறை திறந்தனன்
பகைத்திடு மரசர் திகைத்திட நாளுந்
திறைகொணர்ந் தளித்த நிறைபசுங் கனகஞ்

செய்யபட் டாடை துய்யமென் றூசு
மின்னிய சரப்பணி பின்னுபொன் னரைஞாண்
மணிவிர லாழி யணிமணிக் குண்டல
நித்தில மாலை சித்திர மகுட
நவமணிப் பதக்கங் கவின்மணித் தண்டிகை

வேண்டுவ வேண்டுவ விரைந்திவை முதலா
வாண்டகை கொள்கென வன்பொடும் வழங்கினன்
போற்றுசெந் தமிழ்முரு காற்றுப் படைக்காச்
செந்தில்வாழ் முருகன் வந்துநக் கீரன்
வன்சிறை தவிர்த்தென வென்சிறை தவிர்த்தனன்

றன்கட னுமென் றென்கடன் றீர்த்தனன்
மாடுந் தொழுவும் வயலுந் தோட்டமும்
வீடும் விளக்கும் விளங்குறச் செய்தன
னொருகுறை யில்லா துயர்ந்தன னெளியேன்
பெருகிய சுற்றமும் பெண்டிரு மக்களும்

கற்றபா வலருஞ் சுற்றவா துலருஞ்
சூழ்ந்துவாழ் வுறவினி தூழி
வாழ்ந்தவன் புவிமேல் வாழி வாழியவே.

முற்றும்.

1 கோதிச்சிக் கின்றி முடிக்கின்ற மாலைக் குழலிவிடு
தூதிச்சிக் கின்றுசெங் காவிரல் காய்துணைக் கண்கறுத்து
மோதிச்சிக் கென்று பணைத்திறு மாந்த முகிழ்முலைப்பூ
மாதிச்சிக் கின்றபொன் மார்பா விரசை வடமலையே.

2 ஆலைக் குவளைக்கும் விற்கரும் பான்கணை யைந்தும்வந்தென்
சேலைக் குவளைக் கிடர்செய்யு மோதிரை நீர்படிந்த
வேலைக் குவளைக்கங் காந்தாய் நறுமறை வெள்ளந்துள்ளு
மாலைக் குவளைப் புயத்தா யிரசை வடமலையே.

3 மேல்வளைக் கும்பனி ஏழ்வளைக் குங்கடல் வேள்கரும்பைக்
கால்வளைக் குந்தொறுங் கைவளைக் கேபயங் காமர்மள்ளர்
சால்வளைக் குங்கொழுக் கால்வழி போய்முத்தந் தட்டுகுட
வால்வளைக் கஞ்ச வயல்சூ ழிரசை வடமலையே,

4 ஈர்க்கிடை போகப் பொருமுலை மாலை யிளம்பிறையாற்
பார்க்கிடை யானது பார்க்கிலை யேயெதிர் பாறிட்டொன்னார்
நீர்க்கிடை போனெகி ழாமனம் பேதிக்க நேரிடும்போர்
வார்க்கிடை வேற்கை யபங்கா விரசை வடமலையே.

5 படைத்தலை வாளை நிகர்போ மலர்க்கணை பாயநொந்து
சடைத்தலை வாளை முகம்பார்க் கிலாயலை தத்துதெண்ணீ
ருடைத்தலை வாளை விரிமுத்த ராசி யொதுக்கியவாய்
மடைத்தலை வாளை குதிபா யிரசை வடமலையே.

6 முடக்கால் வளைக்கும் பிறை'கீற்றுக் கண்டபின்
மோகமென்னை
லடக்கா வரைகை கடந்ததெண் ணைமர்க் குந்தமிழ்க்கு
மிடக்கா லெனினு மொருக்கான் மனங்கொண் டெடுத்தவடி
மடக்கா முழுவல் லமையா விரசை வடமலையே.

7 கூலிக்கு நான்சொல்வ தோவெம்ம னோர்நின் கொழுங்கருணை
வேலிக்கு ணின்ற பயிரல்ல வோவெறுங் கான்புகுந்த
நீலிக்கும் ராவணன் மோலிக்குங் கும்ப நிகும்பனுக்கும்
வாலிக்கும் வாளிதொட் டாயிரை யூரில் வடமலையே,

8 பொரிந்தது முத்தம் புகைந்தது சாந்தம் பொருக்கெழுந்தே
கரிந்தது பூவணை யேதுப டாள்பனிக் கால்பரப்பி
விரிந்தது வான நிலாவெள்ளங் காணுன்னை விட்டொருநாட்
பிரிந்ததற் கித்தனை யுண்டோ விரசைப் பெரியவனே.

9 இரசைப் பதியில் வடமலை ராயன் சிறப் வேந்த்ரனென்னப்
புரசைக் களிற்றிற் பவனிதந் தான்வந்த போதிலென்பெண்
ணரசைக் குறித்தின்று போர்க்கோலங் கொண்ட வனங்கன் வெற்றி
முரசைப் பறித்துடைப் பாரிலை யோவமர் மூளுமுன்னே.

10 ஏர்விற்றுப் பள்ளிற் றுடைமையெல் லாம்விற் றிருந்தமனைச்
சீர்விற் றனமுன்னைக் காணாத முன்றெரி சித்தபின்பு
போர்விற் றடக்கை யிரையூர் வடமலைப் பூபதிரின்
பேர்விற்று முன்விற்ற தெல்லா மறுபடி பெற்றனமே.

வேறு

பொருந்து திக்கைக் கருங்கங்குல் யானையான்
புறப்ப டும்படைப் போர்க்கிலக் காய்மலைத்
திருந்து திக்குத் திகையறி யாதுவின்
ணெழுந்து திக்கு மிளம்பிறைக் கேங்குமோ
வருந்து திக்கற் புடையா ளசோதைமுத்
தாடும் ரத்ந முழுமணி யேயனை
வருந்து திக்கப் புகழ்படைத் தாய்சின்ன
வடம லேந்திர மகராச ராசனே.

வேறு

இங்கணையு மொருகணைவிட் டிருகணையுந்
துயிலவொட்டா திரவெல் லாம்வந்
தைங்கணைவேள் பொருவதெல்லா மறுகணைவே
ணியனறிவான் யாரை நோவேன்
கொங்கணையும் பங்கயமேற் குருகணைய
முருகணையும் குமுதந் தோறுஞ்

சங்கணையும் வளவயல்சூ ழிரசைவட
மலையேமுத் தமிழ்வல் லோனே.

வேறு

13 முடிக்கு மருப்புக் கிருந்தபைங் கோதைப்பெண் மூரிவில்வே
பிடிக்கு மருப்புக் கணைக்கிலக் கோசிறைப் பேரிட்டொன்று
குடிக்கு மருப்புக் கடலேற்றி விற்பக் கொடிமதில்பாய்ந்
திடிக்கு மருப்புக் களிற்று யிரசை யிருப்பவனே.

14 பாடுவன பாடுவ தல்லாமற் பாவலர் பாடலுங்கொண்
டாடுவன் செய்வ னிரையூர் வடமலை யன்றிப்புல்லன்
றேடுவன் றேடிப் புதைப்பா னவனுக்குச் செந்தமிழென்
வேடுவன் சேரியி லெவ்வாறு நானம் விலைசொல்வதே.

---○---



இந்தியக் குடியரசுத் தலைவர்

டாக்டர் சாகீர் உசேன் அவர்கள்

தோற்றம்: 1897 மறைவு: 1969

நம் சங்கத்தின் தலைமைப் புரவலர் (Patron-in-Chief), இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு. டாக்டர் சாகிர் உசேன் அவர்கள், 3–5–69 முற்பகல் 11-20 மணியளவில், புதுதில்லியில், திடுமென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக இம்மண்ணுலக வாழ்வை நீத்தனர் என்ற செய்தி, இந்தியப் பெருமக்களாகிய நம்மனைவர்தம் உள்ளத்தையும் வருத்தும் கொடுஞ் செய்தியாகும்.

டாக்டர் சாகிர் உசேன் அவர்கள் 1897-இல் ஐதராபாத்தில் பிறந்தார். அலிகார் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்புப் படித்த பின், பெர்லின் பல்கலைக் கழகத்தில் பி.எச்.டி. பட்டமும்பெற்றார். அண்ணல் காந்தியடிகளோடு அணுக்கத் தொடர்பு கொண்டு இந்திய விடுதலை இயக்கத்திற் பங்குபெற்றார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாகப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகப் பணிபுரிந்திருக்கிறார். அமைதியான முறையில், ஆடம்பரமில்லாமல் கல்விப் பணிபுரிந்த இந்நல்லாருக்குப் 'பத்ம விபூசன்' 'பாரத இரத்தினா' முதலான பட்டங்கள் கிடைத்தன. 1957-இல், பீகார்மாநில ஆளுநராகவும் பணிபுரிந்துள்ளார் 1962-இல், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 1967-இல் குடியரசுத் தலைவர் பொறுப்பேற்றுத் தாம் இறக்குந்துணையும், இந்திய மக்களின் நல்வாழ்வுக்குத் துணையாய் நின்றார். அழியாத இலக்கியங்களை உருவாக்கிய பெருமையும் இவர்க்குண்டு. அமைதியும் அடக்கவுணர்வும் உடையவர்; அறிவாற்றல் நிறைந்தவர்; எளிய வாழ்வு மேற்கொண்ட ஏந்தல்; இந்து முசுலிம் ஒற்றுமைக்காக உழைத்த உரவோர். இந்நற்பண்புகளைக்கொண்ட டாக்டர் சாகிர் உசேன் அவர்களின் மறைவு-ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு. இத்தகு சான்றோரை இழந்து வருந்தும் குடும்பத்தினருக்கு இத்தமிழ்ச் சங்கம் தன் ஆழ்ந்த துயரைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவர்களின் நல்லுயிர், இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவும் வேண்டுகின்றது.

நின்வெள்ளம் பரந்து பாயும்; இறைவனால்எய்யப்பட்ட அம்புகள் வீரனாகிய அர்ச்சுனனின் மார்பில் பாயும்; (வெள் + அம்பு + அரக்கும்). பாற்கடலில் வந்துகலந்த நஞ்சினை உண்டு அவன் கண்டம் கறுக்கும்; தன்னுடைய திருவடியை அடைந்தவர்கள் மேல் அருள் நோக்கம்செய்து அவர்கள் தீவினையை அறுப்பான்: (கண்டு + அங்கு + அறுக்கும்). அறிவுருவாம் பூண்முலையை உடைய உமையம்மையோடு இன்பத்துள் திளைப்பான்; ஒப்புநீக்கித் தன்னை உயர்வாக நினைந்து வழிபடுபவர்களுக்குப் போகும்வழியாயிருந்து வீடுபேற்றை அருளுவான்; (போகு + அத்தன் + ஆகும்). ஒழுக்கங்கள் நிறைந்த காஞ்சிநாட்டில் காரைக்காடு என்னும் தலத்தில் எழுந்தருளி யிருப்பான்; தன் திருவடி நீழலை அடைந்தவர்களுக்கு நரக வழியாகிய இருளை என்றும் காட்டமாட்டான்.'' (நெறி + கார் + ஐ + காட்டான்).

இங்ஙனம் மடக்கும், ஏனைய இருக்குக்குறள், ஏகபாதம், கோமுத்திரிபோன்ற சொல்லணி வகைகளையும் பயன்படுத்தியவர் சம்பந்தரேயாவார். அப்பரும் சுந்தரரும் அவைகளைப் பயன் படுத்தவில்லை. இதுபோன்ற மடக்குப்பாட்டு ஒன்றேனும் அவர்கள் தேவாரத்தில் யாண்டும் காணப்படவில்லை. சம்பந்தர் சீர்காழி, காஞ்சி ஆகிய இரண்டு பதிகளைப் பற்றிய பாடல்களில் மட்டுமே சொல்லணிகளைப் பயன்படுத்துகிறார்.

சம்பந்தர் இவ்விரண்டு இடங்களில் மட்டும் சொல்லணிகளைப் பயன்படுத்திப் பாடுவதன் காரணம் என்ன என்பதனை ஆய்வோம்.

ஒரு பதிக்கண் நீண்ட நாள் தங்கியிருக்கும் போது அங்குள்ள இறைவனை ஒவ்வொரு வேளையும் சென்று வழிபடுதல் அவர் மரபு. அப்போதெல்லாம் புதுப்புதுப் பாமாலை இயற்றிப் பரவுவார். சீர்காழி அவருடைய சொந்தப் பதி எனவே தோணியப்பரை நாடோறும பன்முறை சென்று வழிபடும் போது ஓய்வும் காலமும் இருந்தமையால் சொல்லணி மாலை புனைய அவருக்கு நிறைய வாய்ப்பிருந்தது.

மதுரையில் சம்பந்தர் நீண்டநாள் தங்கியிருப்பினும் அங்கு அவருக்குச் சமணருடன் வாது செய்யவே பொழுது

சரியாய் இருந்திருக்கும். மதுரையில் வேறு பல பதிகங்கள் பாடியிருப்பினும், சொல்லணிப் பதிகம் புனைந்து ஆலவாய்ப் பெருமானை வழிபடும் அளவுக்கு அவருக்கு அங்கு ஓய்வு நேரம் கிட்டியிருக்காது.

அடுத்துக் காஞ்சியிலும் அவர் சொல்லணிகள் அமையப் பாடியதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. காஞ்சியில் சம்பந்தர் இருந்ததைப் பற்றிச் சேக்கிழார் பாடுமிடங்கள் உற்று நோக்கத்தன.

"திருவேகம் பத்தமர்ந்த செழுஞ்சுடரைச் சேவடியில்
ஒருபோதும் தப்பாதே உள்ளுருகிப் பணிகின்றார்
மருவுதிரு இயமகமும் வளர்இருக்குக் குறள்மற்றும்
பெருகும்இசைத் திருப்பதிகத் தொடைபுனைந்தார்
பிள்ளையார்"

–பெரியபுராணம்-சம்பந்தர் புராணம்–999

என்று சேக்கிழார் பாடிவிட்டு, அடுத்த பாடல்களில்

"மாடுதிருத் தானங்கள் பணிந்தேத்தி வைகுநாள்"

ஷை 1000

என்றும்,

"... ... ...தொல்விடம் உண்டிருண்ட
கண்டர்மகிழ் மேற்றளியும் முதலான கலந்தேத்தி
மண்டுபெருங் காதலினல் வணங்கிமீண் டினிதிருந்தார்"

ஷை 1001

என்றும் பாடிச் செல்கிறார். இவைகளை நோக்கினல் சம்பந்தர் காஞ்சியில் நீண்டநாள் தங்கியிருந்தமை புலனாகும். அடுத்துச் சம்பந்தர் காஞ்சியில் நீண்டநாள் தங்கியிருந்ததன் காரணத்தைக் காணவேண்டும். சம்பந்தர் காஞ்சி வந்த காலத்தில் அவருடைய வாழ்க்கையின் முதற் குறிக்கோளான புறச் சமயத்தை நீக்கித் தமிழ் நாட்டிற் பிறந்த சைவ சமயத்தை நிலைநிறுத்தும் பணி முற்றுப் பெற்றிருந்தது. காஞ்சியிலிருந்து அவர் ஊர் திரும்பியவுடன் அவருக்குத் திருமணம் நடப்பதையும் பின்னர் இறைவனோடு கலப்பதையும் பார்க்கிறோம். எடுத்துக் கொண்ட பணி முற்றுப்பெற்ற, தம் வாழ் நாளின் இறுதிக் கட்டத்தில் சம்பந்தர்

காஞ்சியில் நீண்டநாள் தங்க, வேண்டிய காலமும் ஒய்வும் இருந்தமையால், காஞ்சியில் சொல்லணிகளைப் பாடும் வாய்ப்பும் அவருக்கு இருந்தது. ஆனால் திருவேகம்பத்தில் பாடிய இயமகம், இருக்குக்குறள் ஆகியவைகளே நமக்குக் கிடைக்கின்றன. காஞ்சி நெறிக் காரைக் காட்டுக்கு அவர் பாடிய ஒரு பதிகமே நமக்குக் கிடைக்கின்றது. அப்பதிகம் சொல்லணியால் அமைந்ததன்று. திருக் கச்சி ஏகம்பத்தைப் போல், கச்சி நெறிக் காரைக் காட்டிலும் அவர் இயமகம் அமைத்துப் பாடியிருக்கலாம். கச்சி நெறிக் காரைக் காட்டில் சொல்லணி அமைத்து அவர் பாடிக் கிடைக்காமற் போன பதிகத்துள் ஒரு பாடலாக இப்பாடல் இருத்தல் வேண்டும். மேலும் சம்பந்தரின் இயமகப் பாடல்களுக் கும் இதற்கு முள்ள ஒற்றுமை உற்று நோக்கத்தக்கது. இக்கருத் தைக் கழுமலப் பதியில் சம்பந்தர் பாடிய பின்வரும் சொல்லணிப் பாடல் வலியுறுத்துகின்றது.

"உற்றுமை சேர்வது மெய்யினையே; உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே; கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பது உன்பணியே; அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே; பிரமபுரத்தை உகந்தனையே"

இப்பாடலின் பொருள் வருமாறு:-

"உமையம்மை சரிபாதியாகப் பெற்றிருப்பது உன் உடம்பையே! அடியார்கள் உணர்வது உன் அருள் உண்மையினையே!

மெய்யறிவைக் கற்றவர்கள் வெறுப்பது துன்பத்தைத் தன்னுள் வைத்துக் காக்கின்ற மனை வாழ்வையே!(கா+மனையே) நின் நெற்றிக் கண் வருத்துவது காமவேளையே! (காமனையே)

ஆடையற்ற உன் அரையை மறைப்பது உன் பாம்பே! அமரர்கள் இயற்றுவது உன் தொண்டே!

நீ மகனாகப் பெற்று மகிழ்ந்தது முருகனையே! சீர்காழியை நீ பெரிதும் விரும்பினையே!"

இப்பாடலின் நடையும் போக்கும் 'வெறிவிரவு' என்று தொடங்கும் பாடலிலும் அமைந்து கிடப்பதைக் காணலாம். எனவே 'வெறிவிரவு' என்று தொடங்கும் பாடல் சம்பந்தர் பாடலே என்று துணிந்து கூறலாம்.

இது சம்பந்தர் பாடல் என்றால் ஏன் திருமுறையில் காணப்படவில்லை என்ற வினா எழுகின்றது.

திருமுறைகள் நம்பியாண்டார் நம்பிகளால் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொகுக்கப் பட்டன என்பது ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவப்பண்டாரத் தாரின் முடிவாகும். ஆனால் யாப்பருங் கலமும் உரையும் 12-ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தியவை. எனவே 'வெறிவிரவு' என்று தொடங்கும் இப் பாடல் உண்மையில் தேவாரப் பாடலாக இருந்திருப்பின் நம்பிகள் இதனைத் தொகுக்காது இருந்திருப்பரோ? என்று ஐயுறும் சிலர், இதனைப் பிற்காலத்தார் யாரோ இயற்றிய பாட்டு என்று வாதிடலாம், ஆனால் அவ்வாதமும் சரியானதன்று என் பதை இனிப்பார்ப்போம்.

நம்பியாண்டார் நம்பிகள் தேவாரத் தீந் தமிழ்ப் பாக்கள் ஒரு தொகையாக இல்லாமல் இருந்ததால், அவைகளிற் பல மறந்தும் மறக்கப் பட்டும் நாளடைவில் மறைந்து வருவதைக் கண்டு உளம் வருந்தியே அவைகளைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவர் அக்காலத்தில் அரிதின் முயன்று திருமுறைப் பாடல்களை அரசன் துணையோடு தொகுத் ததைத் திருமுறை கண்ட புராணத்தில் காணலாம். பல வசதிக ளற்ற அக்காலத்தில் அவர் முயற்சியில் பல குறைகள் நேர்ந் திருக்கலாம். பலவிடங்களில் ஆங்காங்கே சிதறிக் கிடந்த கோயில்களைப் பற்றிய மறைந்து போன பதிகங்கள் பல அவருக்குக் கிட்டாமல் போயிருக்கும். அப்படி அவர் கைக்குக் கிட்டாமல், யாரோ சிலருடைய நினைவேட்டில் மட்டும் வாழ்ந்து இப்பாடல் யாப்பருங்கல உரையேட்டில் ஏறியிருக்கவேண்டும். நம்பியாண்டார் நம்பிகள் கைக்கு அகப்படாத சம்பந்தர் பதிகம் ஒன்று திருவிடைவாய் என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் காணப்படுகிறது. எனவே நம்பிகள் முயற்சியுள் சிக் காத பாடல்களும் உண்டு என்பதை அறியலாம்.

இதுவரை காட்டியுள்ள சான்றுகளால் யாப்பருங்கல உரையில் மேற்கோளாகக் காட்டப்பட்ட 'வெறிவிரவு' என்று தொடங்கும் நயமிக்க சொல்லணி அமைந்த பாடல் திருஞானசம் பந்தருடையதுதான் என்றுகொள்ள எவ்விதத் தடையும் எழ வில்லை. திருமுறைச் செல்வர்கள் இதனை இன்னும் ஆழ்ந்து ஆய்ந்து உண்மை காண்பார்களாக!

தமிழகத்தின் மருத்துவக் கலை மாண்பு *

பேராசிரியர். உரைவேந்தர். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை,

மதுரை.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்,
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"

என்பது திருமந்திரம் (1). இதனைச் சிறிது நினைத்தால், உயிர்க்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பு புலனாகும். உயிர்க்கு உடம்பு இன்றியமையாதது; அவ்வுடம்பினால் உயிர் ஞானம் பெற்று உய்தி பெறலாகும். "ஞானத்தால் வீடு என்றே நான் மறைகள் புராணம் நல்ல ஆகமம் சொல்ல அல்லவாம் என்னும் ஊனத்தார் என் கடவர்" (2) என்று சிவஞானசித்தியார் கூறுகிறதன்றோ? ஆகவே, உயிர்க்கு உறுதியாவது ஞானம்; ஞானம் பெறுதற்கு உடம்பு சிறந்ததோர் கருவியாவது உணரப்படும்.

இவ்வுடம்பு, உலகமும் உலகியற் பொருள்களும் போல மாயை யென்னும் சத்தியால் உருவாகிய எந்திரம் என்று கூறும் சிவஞான போதம் (3), உயிர் அவ்வுடம்பை விளக்காகக் கொண்டு செய்வன செய்வதும் அறிவன அறிவதும் செய்கின்றது என வுரைக்கின்றது.

இவ்வாறு உயிர் அறிதற்கும் செய்தற்கும் முறையே ஐந்தைந்து கருவிகள் உடம்பின்கண் உண்டு. உடம்பிலுள்ள கண் காது முதலிய கருவிகள் ஒளி ஓசை முதலியவற்றின் துணை கொண்டு காண்டல் கேட்டல் முதலிய செயல்களைச் செய்து தத்தமக்குரிய பொருள்களை அறிகின்றன. செய்வன செய்தற்கென வாய், கை, கால் முதலிய ஐந்து கருவிகள் உள்ளன. இதனால் கண் முதலியவற்றை அறிகருவியெனவும், கை, வாய் முதலியவற்றைச் செயற் கருவி எனவும் அறிஞர் பெயரிட்டுள்ளனர். இவ்விருவகைக் கருவிகளையும் முறையே ஞானேந்திரியம்

---

* A lecture delivered in "the History of medicines—Medical Association of India" in Madurai.

என்றும் கன்மேந்திரியம் என்றும் பொதுவாக வழங்குவர். இவற்றைத் தலைமை தாங்கி இயங்குவது மனம். அறிகருவிகளால் அறிந்த பொருள்களையும் செயற் கருவிகளால் செய்வன செய்யத் தோன்றும் கருத்துக்களையும் ஆராய்ந்து ஒன்றோடொன்று இயைபுபடுத்தித் தன்னகத்தே உறைவிப்பது மனத்தின்செய்கை யாதலால் அதனை அகக் கருவி (அந்தக்கரணம்) என்பது வழக்கு.

அகமும் புறமுமாகிய கருவிகளால் எய்துவது இயற்கை யறிவு. கல்வி கேள்விகளால் உண்டாவது செயற்கையறிவு; இவையிரண்டையும் முறையே பசுஞானம் பாசஞானம் எனச் சைவநூல்கள் குறிக்கும். இவ்விரண்டாலும் உளதாவது உண்மையறிவு. இக் கருவிகள் அனைத்தும் உடம்பின்கண் இருந்து செய்யும் பணிகளால் உண்மையறிவு உருவாவது பற்றியே திருமந்திரம், உடம்பழியின் உயிரார் மெய்யறிவு பெற மாட்டார் என உயர் சொற்கிளவியால் உரைக்கின்றது.

இங்ஙனம், ஞானப் பேற்றுக்குப் பெருங் கருவியாகத் திகழும் உடம்பு, மேலே கூறிய கருவிகள் யாவும் ஒழுங்குற அமைந்தாலன்றிப் பயன் படாது. கண் குருடுபடாமலும் காது செவிடு படாமலும, இவ்வாறே ஏனையவும் யாதும் குறைபடாமலும் இருந்தால் அவற்றால் பெறக்கடவ அறிவைப் பெறலாம் வாய் ஊமையாதலும் கைமுடமாதலும் ஏனைக் கருவிகள் குறையுடைய வாதலும் செயற்கருவிகளால் எய்தக் கூடிய அறிவுக்கு ஊனம் செய்யும். இவ்விருவகைக் கருவிகளும் நல்கும் உணர்வுப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டே அகக்கருவியாகிய மனம் சிந்தித்தல் தெளிதல் முதலிய தொழில்களைச் செய்கிறது.

இக்கருவிகள் மேற்கூறிய குறையில்லாமல் அமைவது ஒருபுறமிருக்க, அவை இனிது தொழிற் படுதற்கு உடம்பின் உட்கூறுகள் ஒழுங்காக அமைய வேண்டும். கண்ணாகிய அறி கருவியை எடுத்து, அதன் உட் கூறுகளை நோக்குவோமாயின், ஐந்து கூறுகள் காணப்படுகின்றன: விழியின் புறத்தே மூடிக் கொண்டிருக்கும் படலம் (Cornea), விழிநடுவிருக்கும்பாவை (Lens), அதனைச் சுருங்கவும் விரியவும் செய்யும் விசை நார் (Iris), அதன் பின்னேயுள்ள கண்ணநீர் (Humour), விழியின் பின்புறத் திரை (Retina), அதனோடு தொடர்புறும்

கண்ணரம்பு (Optic nerve). இவை நோயின்றிச் செம்மையாக இருந்தாலன்றிக் கண்ணாகிய பொறி செயல் படாது. இவ்வாறே காது மூக்கு முதலியவற்றின் உட்கூறுகளும், வாய், கை, கால் முதலியவற்றின் உட்கூறுகளும்ஒழுங்காக இருத்தல் இன்றியமையாதாகும்.

இக்கூறுகளும் இவற்றைத் தம்மகத்தே கொண்ட பொறிகளும் தத்தமக்குரிய தொழிலை நெறி பிறழாமல் செய்தற்கு நமது உடம்பு நோயில்லாத வளமுடையதாதல் வேண்டும். உடம்பின் பொதுக் கூறுகளில் சிறப்புடையவை தோலும் என்புமாகும். இவற்றால் யாக்கப்பட்டு இயங்கும் உடம்பு, தன்னகத்தே யுலவும் உயிர்- அறிவுபெறுவதும் தொழில் செய்வதும் ஆகிய இரண்டு பெருஞ் செயல் புரிதற் காகவே உருவாய் அமைந்தது. இச் செயலுக்கு ஆற்றல் (Energy) இன்றியமையாதது. அந்த ஆற்றலை உண்ணும் உணவாலும் உயிர்க்கும் காற்றாலும் உடம்பு பெறுகிறது. இவ்வயிரண்டும் உடம்பிலுள்ள ஒவ்வொரு கூறும் தனக்குரிய தொழிலைப்புரிதற்கு வேண்டிய ஆற்றலைத்தருகின்றன. மேற்கூறிய உணவையும் காற்றையும் ஆற்றலாக மாற்றுதற்கு இன்றியமையாத இடையுறவாக இருப்பது குருதி. நீர் வடிவில் செந்நிறம் கொண்டு திகழ்வதுபற்றிக் குருதி எனப்படுகிறது. குரு, சிவப்புநிறம். இக்குருதி உடற் கூறுகள் அனைத்திலும் பாய்வதால் உடல் ஆற்றல் உற்று வன்மையும் வளமும் உடையதாகின்றது. இக் குருதி, நரம்புக் குழாய்களின் வழியாக உடன் முழுதும் பாயச் செய்யும் நடுநிலைப் பொறி இதயம் மேலும் கீழும் சுருங்குவதும் விரிவதுமாக இடையறவு சிறிதுமின்றி அது துடித்த வண்ணம் இருப்பது. துடிப்பினால் உளதாகும் குருதியோட்டம் உடம்பெங்கும் பாய்ந்து ஆற்றலை விளைவிக்கிறது. இதுபோலவே நாம் உயிர்க்கும் காற்று, மார்பின்கண் உள்ள ஈரற்தட் புகுந்து குருதியொடு கலந்து அதனைத் தூய்மை செய்து, அது சுமந்து செல்லும் உணவாற்றலோடு சேர்ந்து உயிர்க்குத் துணை செய்தற்கு வேண்டிய ஆற்றலை உடம்புக்கு நல்குகிறது. உடற் கூறுகளின் உண்மை நிலையை முதன் முதலாகக் கண்டவர் பிரான்சு நாட்டவரும் செல்வக் குடியொன்றில் தோன்றியவருமான லவாய்சியர் (Lowoisier) என்பாராவர். இதுநிகழ்ந்தது கி. பி 1777 என்றும் கூறுவர்.

உயிரினது அறிவுப் பேற்றுக்கும் தொழில் செய்தற்கு

மாக வந்த உடம்பிற்கு, அவ்விரண்டையும் செய்தற்கேற்ற ஆற்றலையும் வன்மையையும் நல்கும் உணவும் காற்றும் தூய நிலைமாறிக் குற்றமுடையவாயின், உடற் கூறுகள் நோய் உறுகின்றன; உடல் ஆற்றலும் வலிமையும் இழந்து அறிவு செயல் என்ற இரண்டன் திறம் குன்றிவிடுகிறது. இதுபற்றியே முருகனை வழிபடும் மகளிர் நலம் கூறவந்த நக்கீரனார் "நோயின்றியன்ற யாக்கையர்" என்றும், அவரது மேனி நிறமும் ஒளியும் பொலிவுமுடையதாமென்றற்கு "மாவின் அவிர் தளிர்புரையும் மேனியர்";(4) என்றும புகழ்ந்துரைக்கின்றார்.

இந்நிலையில் உடம்பிற்கு ஆக்கமும் அரணுமாகிய உணவும் காற்றும் என்ற இரண்டுமே என்பது பன்னூறாண்டுகட்கு முன்பே அறிஞர்களால் அறியப்பட்டது; எனினும், யோகியர் தோன்றி உண்ணும் உணவினும் உயிர்க்கும் காற்றே உடற்கு ஆற்றலையும் உயிர்க்கு ஞானப்பேற்றையும் நல்கும் என்றொரு கொள்கையைப் பரப்பினர். அவருடைய கொள்கையும் ஒழுக்கமும் யோகசமயம் என்ற பெயர் எய்தின. சமயச் சான்றோர்களும் அதனை யேற்றுப் புறச்சமய வகைகளுள் ஒன்றாகக் கொண்டனர். சமயக் கணக்கர் மதிவழி கொள்ளாமல் உலகியற் குரிய பொருணெறி கூறிய திருவள்ளுவர் உணவுக்கே முதலிடம் தந்து அது பற்றிய நல்லறங்களையே சிறப்பித்துக் கூறுவாராயினர். பின்வந்த சைவவைணவச் சமயச் சான்றோர்களும் புத்த சமணச் சான்றோர்களும் யோக சமயக்கொள்கையை விளக்கி உலகில் ஒழுக்கநெறி வழுவாது வாழ்வாங்கு வாழ்வதையே வற்புறுத்தினர். யோக நெறியை விளக்கிக் கூறிய திருமூலரும், "எண்ணாயிரத்தாண்டு யோகம் இருப்பினும், கண்ணாரமுதனைக் கண்டறிவாரில்லை" (5) என்று மறுத்தலும் செய்தார். இவ்வாற்றால் உடம்பு நெடிதிருந்து அறிவுப் பேற்றுக்குத் துணையாக வேண்டுமாயின் உணவே சிறப்புடைத்தாம் என்ற கொள்கையே யாவர்க்கும் ஒத்ததாயிற்று. திருவள்ளுவரும் அதனையே வற்புறுத்தினர்.

உண்டவுணவு செரித்தமை பசியால் நன்குணர்ந்து அளவோடு கொள்ளப் படுமாயின் உடம்பு நெடிது வாழ்தற்கு நேரிய நெறியாம்; இதனை,

> "அற்றால் அளவறிந் துண்க, அஃதுடம்பு
> பெற்றான் நெடிதுய்க்கு மாறு"

என்று திருவள்ளுவர் கூறுகின்றார். வயிற்றில் எழும் பசித்தீயின் அளவு அவரவரும் நன்கு உணரநிற்பது "நான் மிகுதியாகவுண்டு விட்டேன்; அதனால் மயக்கம் இருக்கிறது" என்பவரையும், "உண்டது போதிய அளவு இல்லாமையால் இன்னும் சோர்வு நீங்கவில்லை" என்பவரையும்நாளும் பார்க்கின்றோம். இதனால், உண்ணுமிடத்தும் உணவுக்கு ஓர் அளவு அண்டு என்று தெளியலாம். அளவறிந்து உண்பது ஒருபுறம்இருக்க, முன்னேயுண்டது செரித்தாலன்றி மேலும் உண்பது ஒத்ததாயினும் கூடாது என்றற்காகவே, "அற்றால் உண்க; அதனையும் அளவறிந்து உண்க" என்று திருக்குறள் கூறுகிறது.

முன்னே யுண்டது செரித்ததா என்பதை எங்ஙனம் அறிவது? பலரால் அதனை அறிந்து உரைக்க முடியவில்லையே எனின், உண்டது செரித்தொழியுமாயின் பசிதோன்றி அறிவு செல்கட்குரிய கருவிகள் செயற்படாதவாறு சோர்வுறச் செய்யும். அந்தக் குறிப்பறிந்து உணவு கொள்வது முறையாகும். ஓர் அளவு உண்டதும், நல்லுணர்வு தோன்றி வேண்டாமை புலப்படுத்தும். இது சிறு குழவிகளிடத்தும் முதியவரிடத்தும் யாவரிடத்தும் ஓராங்கு அமைந்திருக்கும் உண்மை. வேண்டாமை தோன்றும் வரை உண்ணப்படுவது உணவுக்கு அளவு என அறிதல் வேண்டும். இந்த அளவில் நில்லாது மிகைப்படவுண்பது கூடாது என்பது வற்புறுத்தவே 'அளவு அறிந்து உண்க' எனத் திருவள்ளுவர் செப்புகின்றார்.

உண்ணும் உணவிலும் அவரவர்க்கு ஒத்தனவும் உண்டு; ஒவ்வாது மாறுபடுவனவும் உண்டு. தன் உடற்கு ஆகாதனவும், தன் விருப்பிற்கு மாறுபட்டனவும் உணவாகா; சூழ்நிலை காரணமாக உண்ணப்படின் அவற்றால் உடற்கு நோயுண்டாமேயன்றி நலம் எய்தாது. இதனால்,

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து" (7)

என்று திருக்குறள் அறிவுறுத்துகிறது. உண்ணப்படும் உணவு தனக்கு மாறானதாக இருத்தல் கூடாது; உண்ணும் போது நல்ல பசியிருத்தல்வேண்டும் என்பதை வற்புறுத்தவே 'மாறல்ல துய்க்க துவரப் பசித்து' என்று கூறுகின்றார்.

தனக்கு மாறுபாடு இல்லாததும் தனக்கு ஒத்ததுமாகிய உணவு எய்தியபோதும், அதனை மேன்மேலும் உண்டற்கு எழும் ஆசையை மறுத்து அளவோடு உண்பது நேரிது; அதனால் உடம்பின் நலத்துக்கு ஒருவகை ஊறும் உண்டாகாது என்பது திருவள்ளுவர் தெரிவிக்கும் மற்றொரு கருத்து. அதனை,

"மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு" (8)

என்கிறது அவருடைய திருக்குறள். இங்கே, மாறுபாடில்லாத உணவை அளவறிந்து உண்ணும்போதும் பசிவேட்கை ஒரு சிறிது நிற்குமாறு உண்பது நலம் என்று காந்தியடிகள் உரைத்திருப்பது 'மறுத்து உண்ணின்' என்பதனுள் அடங்கிக்கிடப்பது காணலாம். ஆகவே நோய்க்கெல்லாம் முதற் காரணம் பசியளவறியாது மீதூண் அருந்துதல் என்று உணர்தல் வேண்டும்.

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய்அள வின்றிப் படும்" (9)

என்று திருக்குறள் தெரிவிக்கிறது.

மேலும், பசி தோன்றியதும் உண்பதுமுறையன்று; அப்பசி பெருகுங்காறும் பொறுத்திருப்பது நன்று. பசியெடுத்ததும் குழந்தை அழும்; ஆயினும் நல்ல தாயார் பசிமிகுதற் பொருட்டு அக்குழவியைச் சிறிது போது அழவிடுவதைப் பார்க்கிறோமன்றோ. பசிமிகுந்த போது தான் அதன் அளவும் உணரப்படும். அளவை நோக்காது பெரிதுண்பது நோய்க்குக் காரணம் என்பது இக்குறட்பாவின் கருத்து. பசியளவறியாதவன், ஒத்தன ஒவ்வாதன என வேறுபாடு நோக்காது வயிற்றை நிரப்புவதே குறியாகக் கொண்டு பல வேறு நோய்கள் தோன்றுதற்குத் தன உடம்பை இடமாக்குவன். உண்டது செரிக்காமையாலும் நோயுண்டாகும்; ஒவ்வாதன உண்பதும் நோயை விளைவிக்கும். பசியளவும் உண்ணும் உணவு வகையும் அளவும் நோக்காமல் மிகைபடவுண்பதனால் நோய்கள் பெருகிவருத்தும் என்பது விளக்கவே, "பெரிது உண்ணின் நோய் அளவின்றிப்படும்" என்று உரைக்கின்றார் திருவள்ளுவர்.

இனி, அளவறிந்து ஒத்தன தேர்ந்து உண்ணும் போதும் நோய் உண்டாகிறதே, அதற்குக் காரணம் யாதாகலாம்? உண்

பவன் உறையும் நிலக்கூறும் ஆங்கு நிலவும் காலநிலையும், பரந்து திரியும் காற்றின் நிலைமையை மாற்றுகின்றன; வெயிலொளியும் தன் தன்மையில் வேறுபடுகிறது. காற்றும் உணவு போல உடற்குள்புகுந்து குருதியொடுதோயும் இயல்புடையதென்று முன்பே காணப்பட்டது. வெயிலொளி காற்றின் தட்பவெப்ப நிலையை மாற்றியமைக்கிறது. அவை உடம்பின் உட்புகுந்து அதன் உட்கூறுகளைச் செயல்படவைப்பதால் அவற்றின் பண்பளவறிந்து உடம்பைப்பேணவேண்டும்; பேணுவழி நோயுண்டாகும் என்பது உணவியலால் உய்த்துணரப்படும். நிற்க.

உடம்பினுள் பரந்துபாயும்குருதி தூய்மையுற்று ஆற்றல் பெருகுதற்குஇக்காற்றும் ஒளியும் துணை செய்வதன்றி உணவாவதில்லை. ஆகவே, உண்டது செரித்தமையறிந்து ஒத்தன தேர்ந்து உணவு கொள்ளப் படுமாயின், வேறு காரணங்களால் நோய் உண்டாயினும் மருந்து வேண்டாதே உடற்கூறுகள் எதிர்த்து அந்நோய்களின் வலியழித்துவிடும் என்று உணரலாம்.

இதனை வற்புறுத்தும் திருவள்ளுவர்,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது
அற்றது போற்றி உணின்" (10)

என்று மொழிகின்றார். இங்கே "மருந்து" என்பதில் ஒரு நயம் உண்டு. சாதலும் நோயாதலால் அதனைப் போக்கற்கெனக்கடலைக் கடைந்த எடுத்து அமுதம் சாவா மருந்து எனப்படுகிறது. தமது உடலை நெடிது உய்த்தற் பொன்றே தேவர்கள் கடல் கடைந்தனர் என்பர். எனவே, "அற்றது போற்றியுணின்," சாவாமருந்தாகிய அமுதமும் வேண்டப்படாது என்பதாயிற்று.

இனி, விரிந்தது தொகுத்தலாக,

"இழிவறிந்து உண்பான் கண், இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்" (11)

என்ற குறட்பாவால், அற்றது போற்றியுண் பார்க்கு இன்பமும், பெருந்தீனி யுண்பார்க்கு நோயால் விளையும் துன்பமும் ஒருதலை என்று தெளிவிக்கின்றார். கழிபேர் இரை என்பது பெருந்தீனி.

இது கண்டதும், அளவோடு உண்பார்க்கு இன்பமும் மிகைபடவுண்பார்க்கு நோயும் எய்துதலால், அளவறிந்துமிகவும்

குறைத்து உண்ணின் இன்பம் பெருகும் என எண்ணிவிட லாகாது. அதற்காகவே, திருவள்ளுவர் "அளவை" அடிக்கடி எடுத்துரைக்கின்றார். அளவுக்கு மிகுவது போலக் குறைப்பதும் குற்றம் என்பாராய்,

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று" (12)

என்று கூறுகின்றார். இக்குறளில் உணவு என்ற சொல்லை வருவித்து, உண்ணும் உணவு மிகினும் குறையினும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்றும் நோய் செய்யும் என்று இயைத்துக் கொள்ள வேண்டும். இக்கால உணவு நூலாரும் மிகையுணவு போலக் குறையுணவும் தீங்குபயக்கும்என்றே இசைக்கின்றார்கள். எங்ஙனம் எனின்' இவ்விருவகையுணவும் வாதம், பித்தம், ஐ (சிலேத்துமம்) என்ற மூன்றையும் தக்காங்கு எழுப்பி நோய் செய்யும் என்பது தோன்ற "வளிமுதலா எண்ணிய மூன்றும் நோய் செய்யும்" என்றுஉரைக்கின்றார். இம்மூன்றும் நோய்செய்யும் திறத்தைக் காட்டலாகாமையின் "நூலோர்" என மருத்துவ நூற்புலவர் மேல் வைத்துள்ளார்.

ஆசைவயப்பட்டுத் துன்புறுவது மக்கள் வாழ்வில் பெரும் பான்மை. எத்தனையளவு எடுத்துரைப்பினும் உணவுவகையில் மிகையும் குறையும் தோன்றி மக்கட்கு நோயை விளைத்து விடுகின்றன. அந் நோய்கட்கு மருந்து தேடியுண்பது கடமையாகிறது. ஏனை மாவும் புள்ளும் அளவறிந்துண்ணும் இயல்பில் மாறுவதில்லையாகலின், நோயுற்று மடிவது அவற்றி டையே பெரிதும் காணப் படுவதில்லை.

நோய்பற்றிய ஆராய்ச்சிகள், உணவின் அளவு காணப்படா தவாறுபோல!உண்பொருள்கள்செவ்வையாகப் பேணப் படாமை யால்நஞ்சாகித் தீமை செய்கின்றன; உணவுக்கு உறுதுணையாகும் தண்ணீரும் தீதுறாது காக்கப்படுவதில்லை; காற்றிலும் நீரிலும் கலந்து கண்ணுக்குத் தெரியாமல் பரவும் அணுவுயிர்கள் மூக்கு வாய் என்ற கருவிகளின் வழியாக உடற்குள் புகுந்து நோய் விளை விக்கின்றன என்று உரைக்கின்றன. இவ்வாற்றால் புதிய புதிய நோய்கள் தோன்றி மக்களினத்தை உயிர்ச் சூறையாடுகின்றன.

இதற்கென பருந்து கண்டு மக்களினத்தைக் காப்பது நல்லோர்க்கு அறமாகிறது.

நோய்க்கு மருந்து காணும் முறை எப்போது தோன்றிற்றென மேலை நாட்டு அறிஞர் ஆராய்ந்து, கிறித்து பிறப்பதற்கு 1500 ஆண்டுகட்கு முன்பு கிரேக்கரும் எகிப்தியரும் நோய்மருந்து காணத்தலைப்பட்டனர் என்று எழுதுகின்றார்கள். அன்றியும் அவர்கள், நோய்க்குக் காரணம் சிறு தெய்வங்கள் என்று நம்பினர்; பல நூற்றாண்டுவரை உடற் கூறுகளை ஆராய்வது நன்னெறியாக அவர்கள் கருதவில்லை. ஆடையில்லாத புறவுடலைக் காண்பதே அருவருக்கத்தக்க தாதலால் அவ்வுடம்பைத் தோல் எலும்பு தசை நரம்பு என வேறு வேறாக அறுத்துக் காண்பது நல்லியல்பாகாது என்பது அன்னோர் கொள்கையாகும். அதனைப் பிரான்சு நாட்டு லாவாய்சு அவர்களின் வரலாற்றால் நன்கு அறியலாம்.

நம் நாட்டில் வழங்கும் கடல்கடைந்த வரலாறே மக்கள் நோய் மருந்து கண்ட முயற்சி யென்று காட்டுகிறது. தமிழகத்தில் நோய்க்கு மருந்து கண்டு நல்கும் அறிவுநெறி எப்போது தோன்றிற்றெனக் காண்பதற்கு வாய்ப்பில்லை. தொல்காப்பியம் முதலாகச் சங்கவிலக்கியங்களை யுள்ளிட்ட பழந்தமிழ் நூல்கள் யாவும் நோயும் மருந்தும் கூறுதலால் நோய்மருந்தறிவு வரலாற்றுக் காலத்துக்கு முன்பே தமிழரிடையே இருந்தமை தெரிகிறது. நோய் மருந்தறியும் புலவரைத் திருவள்ளுவர் "நூலோர்" என்று குறிப்பதால் அவர் காலத்தே மருந்து நூல்கள் பெருக இருந்தமை புலனாகிறது. மருத்துவர்களை, "அறவோர்" என்பது சங்க கால மரபு. "அரும்பிணி யுறுநர்க்கு வேட்டது கொடாது, மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்" (13) என்று நற்றிணை நவில்கின்றது.

பண்டை நாளில் மருத்துவர் கல்வி, மூன்று பெரும் பிரிவுகளில் நடைபெற்றது. பிணியாளனது உடலளவையும், பொறுத்தாற்றும் திறத்தையும் அறிவது ஒருபிரிவு; பிணியின் அளவையறிவது ஒரு பிரிவு; பிணிகள் காலச் சூழ் நிலைபற்றித் தோன்றுவதால் காலநிலையறிவது ஒரு பிரிவு. இவற்றைத் துறைபோகக் கற்றவனே மருத்துவத் தொழிலை மேற்கோடல் வேண்டும். இதனை

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்" (14)

என்பர் திருவள்ளுவர்.

இத்தொழிலைச் செய்பவன் பிணியாளனைக் கண்டதும் அவன் உற்றுவருந்தும் நோயையும் அது தோன்றியதற்குரிய காரணத்தையும் நன்கு ஆராய வேண்டும். நோயை அறிந்தபின், அதற்குரிய மருந்துவகையினைச் சிந்தித்துத் தெளிவதும், அம் மருந்து உடற்குட் புகுந்து நோயறுக்கும் நெறியறிந்து கொடுப்பதும் முறையாகும். இதனைத் திருவள்ளுவர்,

> "நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்" (15)

என்று கூறுகிறார் இங்கே, "நோய் நோக்கி நோய் முதல்நோக்கி" என்னுமல், 'நாடி, நாடி' என்று பன்முறையும் கூறுவது மருத்துவனுக்குச் சிந்தனையே கண்ணும் கருவியும் செய்முறையுமாம் என்றற்கு. நோயாளனே உடன் போதரும் துணைவரோ இடையிடையே பேச்சுத் தொடுத்து மருத்துவரின் சிந்தனையைக் கலைப்பராயின், அவர்க்குச் சினமுண்டாதல் இயல்பு. பிணியாளனும் பிறரும் பேசுவது நோயின் கொடுமை பற்றி என எண்ணித் தணிந்து இன்முகமும் இன்சொல்லும் உடையராய் மருந்து நல்குவராயின், அவ்வினிமையே மருந்ினது நோய் தணிக்கும் ஆற்றலை மிகுதிப்படுத்தும்; பிணியாளன் உள்ளத்தில் நம்பிக்கை தோன்றி உண்மை மருந்தாய் உதவி புரியும்; அதனால், பிணியுற்றோன் மருத்துவன்பால் மாறாத அன்பும் நன்றியுணர்வும் உடையனாய்ப் பிணி நீங்கி இன்புறுவன்; இக்கருத்தெல்லாம் அகப்பட 'வாய்ப்பச் செயல்' என்று திருக்குறள் கூறுகிறது. நாடிவருவோர்க்கு விருந்தளிப்பதுபோல மருந்தளித்தல் வேண்டுமென மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

இம்மருத்துவம் நிகழிடம் மருத்துவச்சாலை. இது நான்கு பகுதிகளையுடையது. பிணியுற்றோர் ஒதுங்குமிடம் ஒன்று; மருத்துவர் இருக்குமிடம் ஒன்று; மருந்துகள் செய்து தொகுத்துவைக்கப்படும் இடம் ஒன்று; மருந்து கொடுப்பவன் இருக்குமிடம் ஒன்று. இவற்றையும் திருவள்ளுவர்,

> "உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான்என்று
> அப்பால்நாற் கூற்றே மருந்து" (16)

என்று கூறிக் காட்டுகின்றார். இதன்கண் இறுதியிற் கூறிய மருந்து என்னும் சொல் மருத்துவச்சாலையைக் குறிக்கிறது.

இம்முறையில் இயன்ற மருத்துவம், பழங்காலத்தில் ஊர்களின் பெருமை சிறுமைகட்கேற்ப அமைந்திருந்தது. சிற்றூராயின் மருத்துவர் வீடுகளிலும், பேரூராயின் திருமடங்களிலும் திருக்கோயில்களிலும் மருத்துவம் செய்யப்பட்டது. பெரிய பெரிய மருத்துவ நிலையங்கட்குத் திருக்கோயில்களே இடமாயின. உயிர்க்கு மருந்தாகிய ஞானம் அளிப்பதுபோல உடற்கு மருந்தளிப்பதைத் தன்னகத்தே கொண்டதாகலின், திருமடம் மருத்துவநிலையமாவது பொருத்தமாயிற்று. மக்களுயிர்க்கு மருந்தாகிய திருவருள் வழங்கும் தெய்வத் திருக்கோயில்கள் அத்தெய்வம் தந்த உடம்புக்கு வரும் நோய் தீர்த்தற்கு உரிமையுடையவாதலால், மருந்துவழங்கும் மாண்பையும் தம்மிடத்தே கொண்டன அந்த இயைபு பற்றியே பெருங்கோயில்கள் கல்விக்கும் பல்வகைக் கலைகட்கும் பண்டை நாளில் இடமாய் விளங்கின. தமிழ் வேந்தர்களும் செல்வர்களும் கோயில்கட்கு நிலமும், பொன்னும் பொருளும் நிரம்ப வழங்கினர். இடைக்காலத்தில் புகுந்த அரசியல், பொருளியல், சமுதாயச்சூழல் ஆகிபவை எய்தியமாற்றங்கள், கோயில்கள் மடங்கள் ஆகியவற்றினின்றும் கல்வி, மருத்துவம் கலைமுதலியவற்றை விலக்கி வெருட்டி விட்டன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பாலாற்றின் கரையில் உள்ள திருமுக் கூடற் கோயிற் கல்வெட்டொன்று மிகப் பெரிய மருத்துவச்சாலை அங்கே இருந்ததை எடுத்துரைக்கின்றது. இடைக்காலச் சோழபாண்டியர் காலத்தில் நாட்டிற் பல இடங்களில் மருத்துவம் நிகழ்தற்கு நிவந்தங்கள் (Endowments) விடப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்துக் கோயில் தேவராயன் பேட்டை (பண்டாரவாடை) யில் இருந்த மருத்துவச் சாலைக்குச் சுந்தர சோழ விண்ணகர ஆதுரசாலை (17) என்ற பெயர் விளங்கிற்று திருவாவடுதுறையில் "ஸ்ரீ குந்தவைப் பிராட்டியார் இராசேந்திர சிம்ம வளநாட்டுப் பழைய வானவன் மாதேவிச் சதுர்வேதமங்கலத்தில் வீடும் நிலமும் வாங்கிச் சவர்ணன் அரையன் சந்திரசேகரனை உத்தம சோழ அச்சானன் என்ற வைத்தியனுக்கு அளித்து" நோய் மருந்தளிக்கும் பணிபுரியச் செய்தார் (18). இப்பகுதியில் மருத்துவத் தொழில் மிகுதியும் வேண்டப்படுவது கண்ட அனந்தபாலன் என்பவன், திருவாவடுதுறையில் மருத்துவக்கல்லூரிஒன்றைநிறுவி, "வைத்தியம் கற்போர்க்கு இடமளித்து

நாளும் சோறளிக்க ஏற்பாடு செய்தான். அவனே, "உய்யக் கொண்டார் வளநாட்டுப் பேராவூர் நாட்டுப் பேராவூர்ச் செல்வனான சேனாபதிசங்கரன் இளங்காரிக் குடியுடையான் அம்பலம் கோயில் கொண்டானான அனந்த பாலன்" என்று அவ்வூர்க் கோயிற் கல்வெட்டுக் (19) கூறுகிறது. திருக்கோடிகாவில் உள்ள கல்வெட்டு, திருவாவடுதுறையில் நடைபெறும் மருத்துவம் இனிது நடப்பது கண்டு, மருத்துவனான சத்துருமானியன் ஆளப்பிறந்தான் என்ற செல்வன் நிலம்பலநிவந்தமளித்த செய்தியைத் தெரிவிக்கிறது(20). திருநாவுக்கரசர் வீடு பெற்ற திருப்பதியாகிய திருப்புகலூரில், "திருவழுந்தூர் நாட்டு மனதுக் கினியான் விராடராசன் மருத்துவச்சாலை நிறுவினான்" என அவ்வூர்க் கல் வெட்டு உரைக்கிறது (21). செங்கற்பட்டு மாவட்டத்துக் குண்ணத்தூரில் நடைபெற்றுவந்த மருத்துவச் சாலைக்கு "வைத்தியக்காணி" என்ற பெயரால் ஊரவர் நிலம் ஒதுக்கியதை அவ்வூக் கல்வெட்டால் (22) அறிகின்றோம்.

இங்ஙனம் அரசர்களாலும்செல்வர்களாலும்போற்றப்பட்டு வந்த மருத்துவம், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தும் பதின்மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மிக்க சிறப்படைந்தது. திருச்சிராப்பள்ளிமாவட்டத்து திருவரன்குளம் என்ற ஊரில் அந்நாளில் ஆத்திரேயன் திருச்செந்தூர் முதலியான நிம்பவன வைத்தியர் என்ற பெயருடன் அப் பகுதியில் வாழ்வார்க்கு மருந்தளிக்கும் நற்பணியை நன்கு புரிந்துவந்தார். அப்பணி பொருட்குறையுற்றுச் சோர்வடையக் கண்ட திருவரன் கோயில் "சிகாரியம் செய்வார், சிமாயேச்சுரக் கண்காணி செய்வார், தேவகன்மிகள், கோயில் கணக்கர் அனைவரும்" கூடி. மருத்துவம் சிறப்புற நடத்தற் பொருட்டு நிம்பவன வைத்தியர்க்கு 'வைத்தியக் காணி' நல்குவது என்று தீர்வு செய்து, அந்நாளில் அரசியல்ஆட்சிபுரிந்த பாண்டியன் குலசேகரதேவர்க்குத் தெரிவிக்கவும், பாண்டி வேந்தனும் அவர்கள் விரும்பியவாறே வைத்தியக் காணிதந்து, அது நின்று நிலைபெறும் பொருட்டுத் தனது ஆணையைத்திருவரன்கோயிற் சுவரில் 'கல்லில் வெட்டிக்கொடுக்க' என்று அறிவித்தான். அந்த வைத்தியக் காணிக்கு 'வைத்திய விருத்தி' என்று பெயரிட்டு, நிம்பவன வைத்தியரை 'நிம்பவன வைத்தியாச் சாரியார்' என்றுபாராட்டிக் கல்வெட்டித் தந்தனர். திருவரன்கோயிற் சுவரி நாம் இன்றும் காண நிற்கிறது (23).

இவ்வாறே காளையார் கோயிற் பகுதியில் முதலியார் அகோரசிவர் என்ற மருத்துவச் சான்றோர் 'வைத்திய சக்கர வர்த்தி' என்று சிறப்புச் செய்யப்பெற்றுள்ளார் (24). திருச்சுனை என்னுமிடத்தில்வாழ்ந்த மருத்துவப்புலவர்க்கு'வைத்தியாதிராஜன்'என்றசிறப்புநல்கப்பெற்றுளது(25).ஆனைமலைக்கல்வெட்டு ஆங்கு வாழ்ந்த மருந்து நூற் புலவரை "மதுரகவி மருத்துவர்" என்று வாழ்த்துகிறது (26). கோநேரின்மை கொண்டான் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவர் காலத்தில் வாழ்ந்த ஆதித்த தேவன் திருவம்பலப் பெருமாளின் மருத்துவப் புலமையை வியந்து "வைத்தியப்புரந்தான்" என்று பாராட்டி "வட கொங்கு நாட்டு ஏழூர் நாட்டு வானவன் மாதேவி" என்ற ஊரையே கொடுத்ததை நாமக்கல்லில் முனியப்பன் கோயில் அருகேயுள்ள பாறையில் காணப்படும் கல் வெட்டால் (27) அறிகின்றோம்.

இதனால் தமிழகத்து மன்னர்களும் செல்வர்களும் மருந்து நூற் புலமைக்கு நன்மதிப்பும் மருத்துவத் தொழிற்குப் பொருளுதவியும் செய்து வந்துள்ள திறத்தை ஒருவாறு காணலாம். இன்றும் அச்சிறப்புக் குன்றாவகையில் மருத்துவக் கல்வியும் தொழிலும் வளம் பெற்று வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மேற்கோள்:

1. திருமந்திரம். 724.
2. சிவஞானசித்தியார்: VIII 27.
3. சிவஞான போதம்: III
4. திருமுருகாற்றுப்படை: 143-4
5. திருமந்திரம்: 603.
6. திருக்குறள்: 943.
7. ௸ 944
8. ௸ 945
9. ௸ 947
10. ௸ 942
11. ௸ 946
12. ௸ 941
13. நற்றிணை: 136
14. திருக்குறள்: 943

15. ஷை 948
16. ஷை 950
17 Annual Report of the Madras Epigraphy. No. 249 of 1923
18 Do. No. 112 of 1925
19 Do. No. 159 of 1925
20 Do. No. 47 of 1930-31
21 Do. No. 97 of 1927-28
22 Do. No. 184 of 1929-30
23 P. S Ins. No. 575
24 A. R. No. 575 of 1902
25 A. R. No. 122 of 1903
26 A. R. No. 454 of 1906
27 A. R. No. 13 of 1906

தன்மையற்றது' என்று கருதும் மனப்பான்மையே இதற்குக் காரணம். ஆண்டவன் திருப்பெயர்களுக்கும், அடியவர் பெயர்களுக்கும், ஊர்ப்பெயர்களுக்கும், நூல்களுக்கும் 'திரு' என்னும் அடைமொழி தந்து போற்றி வந்த, நம் முன்னோர் செயலை நினைத்தால் இத்தகு தவருன எண்ணம் எழ வழியில்லை.

வடவெழுத்துச் செல்வாக்கு :

பல்லவர் காலக் கல்வெட்டுக்களில் தோன்றிய வடவெழுத்துக்கள், பிற்காலத்தே உரைநடை நூல்களில் மிகுதியான செல்வாக்குப் பெற்றுவிட்டன! 'கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையிருந்த சமணர்களே, தமிழில் இன்று காணும் வடசொற்களிற் பெரும்பாலானவற்றை வழக்கிற் கொண்டு வந்தவர்களாவர். ஆனல் இவை, தமிழ் ஒலிப்பியலுக்குத் தக்கபடி மாற்றப்பட்டன' என்கிருர் கால்டுவெல் பெருமகனுர். 14

உரை நடையின் தோற்றத்தைச் சிலப்பதிகார நூலிலேயே காண்கிறோம். பின்பு, இறையனுர் களவியலுரை வந்தது. தொல்காப்பியர் நூலுக்கு உரைஎழுதிய இளம்பூரணர், சேனவரையர், நச்சினர்க்கினியர், பேராசிரியர் போன்ருரும், திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகரும், வடஎழுத்துக் கலப்பல்லாத நல்ல தமிழ் நடையிலேயே எழுதியுள்ளனர். ஆனல் இடையில் தமிழும் வடமொழியும் கலந்த 'மணிப்பிரவாள நடை' என்ற ஒன்று தோன்றித் தமிழன்னையின் நல்லுடலை மாசுபடுத்தி விட்டது!

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பாடிய ஆழ்வார்கள், இருந்தமிழ் நன்மாலையை எம்பெருமான் இணையடிக் சூட்டி, இன்புற்றவர்கள். அவர்கள் பாக்களில், எங்கேனும், ஓரிடத்திலாயினும் வடவெழுத்துக் காண்டற்கில்லை. ஆனல் அத்தகு தெய்வத் தமிழ்ப் பாக்களுக்கு 'ஈடு' என்னும் உரை வகுத்தவர்

14. கால்டுவெல் ஒப்பிலக்கணம்-முன்னுரை பக் 120 (கழகம்

வடவெழுத்துக்களை அளவிறந்தவாறு கையாண்டுள்ளார். ஒரு சான்று காண்போம்.

'ரக்ஷிப்பது (தான்) அபேக்ஷிப்பாரின்றிக்கே யிருக்கத் தானே ரக்ஷிக்கும் அவன் (பொழிலேழும்) கீழும் மேலும் ஒன்றாக நினைத்துச் சொல்லுகின்றதால் ஸ்வசரீர ரக்ஷணம் பணணுவது ஸ்னேகபுரஸ்ஸரமாகையிறே (நல்கித்தான் இத்யாதி) நாமரூப விபாகாநர்ஹமாய் கிபந்தவன்று யாரிடமிருந்து அபேக்ஷிக்க இத்தை உண்டாக்கிற்று' 15.

தமிழர்களின் மொழிநலம் பேணாத் தன்மைக்கு இதனைவிட வேறு சான்று வேண்டுமோ?

நம் தமிழகத்திற்கு வந்த கிறித்தவர்களும், முகமதியர்களும், தமிழின் தனித்தன்மை தெரியாதவர்களா யிருந்தமையான், அவர்கள் எழுதிய நூல்களிலும் இத்தகு நடை காணப்படுகின்றது.

மேலைநாட்டிலிருந்து இங்கு வந்த தத்துவ போதகர் என்னுங் கிறித்தவப் பெரியார் (கி பி 1605) எழுதிய 'தூஷணத் திக்காரம்'என்ற நூலில்,'தன் இஷ்டப்பிரசாதத்தைமனுஷனுக்குக் கொடுக்கறதுக்கும் வல்லவராய் இருக்கிறாரொழிய, வேறே பொருளிலே தேவ இஷ்டப்பிரசாதமானது. மனுஷனுக்கு......' என்று எழுதுகின்றார். 16

'திரியேகத்துவ நிவாரணம்' என்ற முகமது சமய நூலில் (1876) வரும் உரைநடை: 'அல்லாஹுத்தாலா ஏகமாயும் முகம்மது ரசூல்லாவவர்கள் அல்லாஹுத்தாலாவின் தீர்க்கதரிசியென்கிற நபியாயுமிருப்பதைப் பற்றி அரபி பார்சி-ஹிந்துஸ்

15. சான்றுநூல்: 19–ஆம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி–அ. மு. பரமசிவானந்தம் (பக்: 36)

16. சான்றுநூல். 19 ஆம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி-அ. மு. பரமசிவானந்தம் (பக்கம்: 77)

தானி பாஷைகளில் அநேக கிதாபுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 17''

பிற்காலத்தே அச்சுக்கூடங்கள் தோன்றியபோது, உரைநடை நூல் ளில் மட்டுமன்றிச் செய்யுட்களிலும் வடவெழுத்துப் புகுந்துவிட்டது! நூறு ஆண்டுகட்கு முன்னிருந்த மாயூரம் வேதநாயகர்பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற உரைநடை நூலில் ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக ஓரிரு வடவெழுத்துக்களே காணப்படுகின்றன. ஆனால் சுப்பிரமணிய பாரதியாருடைய பாடல்கள் சிலவற்றில் வடவெழுத்துக் காணப்படுகின்றது. 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்பதைக் குறிப்பிடலாம். அதே வேளையில் 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றும் காணப்படுகின்றது. அவரெழுதிய கட்டுரைகளில், வடவெழுத்துக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன 'பல தேவராக உபாஸனை...வைஷ்ணவன்...ராமன் கக்ஷி, கிருஷ்ணன் கக்ஷி... லக்ஷணம்' 18.

பல தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தமிழன்னைக்கு மணிமகுடஞ்சூட்டிய தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையரவர்களும், தம் நூலில் வடவெழுத்துக்களைக் கையாண்டுள்ளனர்: 'சற்றேறக்குறைய இருநூறு வருஷங்களுக்கு முன்பு தஞ்சாவூர் ஸமஸ்தானத்தை ஆண்டுவந்த அரசர்' எனறு எழுதுகின்றனர்.19. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, 'ஆசியஜோதி' என்றே தம் நூலுக்குப்பெயரிட்டதோடன்றி. நூலில் 'சுஜாதை' போன்ற பல சொற்களில் வடவெழுத்தைக் கையாள்கின்றார்.

இவர்களனைவரும் தமிழ் இலக்கணங்கற்ற பெரும் புலவர்களாயிருந்தும், வடவெழுத்துக்களை நீக்கி எழுதவேண்டும் என்ற

---

17. சான்று நூல்: 19-ஆம் நூற்றாண்டின் தமிழ் உரை நடை வளர்ச்சி-அ. மு. பரமசிவானந்தம் (பக்கம்: 165)

18. பாரதியார் கட்டுரைகள்.
19. என் சரிதம்

எண்ணும் இல்லாதவர்களா யிருந்தமை வருந்துதற்குரியதே: இத்தகு வடவெழுத்துக் கலப்பைக் கண்ணுற்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார்,

"தனித்தியங்குந் தக்கதென்த் தமிழ்பற்றித்
தமிழ்ப்புலவர் சாற்றுகின்றார்
இனித்திடுமவ் விருநூலில் வடமொழி ஏன்?
வடவெழுத்துக் கொழுங்குதான் ஏன்?"20

என்று தமிழ்ப்புலவர்களைப் பார்த்துக் கேட்கின்றார். 'வடவெழுத்துக்கள் தமிழில் இன்ன வடிவிற் கலக்கலாம் என்று இலக்கணம் வகுத்ததே தவறு என்கிறார் கவிஞர்!

வடமொழியில் மட்டுமன்றி ஆங்கிலத்திலிருந்து வந்த சொற்களும் தமிழ்மொழியியலுக்கேற்பத் திரிந்து வழங்கி வருதல் காண்கின்றோம் Europe—ஐரோப்பா; England—இங்கிலாந்து; Jesus Christ—இயேசுகிறித்து; என்பன போன்ற பல சொற்கள் இன்றும் பயிலக் காண்கின்றோம். சீனமொழியிலும் 'கிறிஸ்து' என்ற சொல்லைக் 'கிலிசெது' என்று எழுதுகின்றனர். சப்பானிய மொழியில், லகரம் அமைந்த பிற மொழிச் சொற்களை ரகரம் ஆகத் திரித்தும் சிறிது வேறுபடுத்தியும் ஒலிக்கின்றனர் என்று அறிகின்றோம். 21

எனவே, தமிழில் எழுதுங்கால், எவ்வகைப் பிறமொழிச் சொற்களாயினும் அவற்றைத் தமிழ் இலக்கணத்திற்கேற்பத் திரித்து வழங்குவதே, தமிழன்னைக்கு நாம் செய்யுந் தொண்டாகும். இல்லையேல், காலப்போக்கில் தமிழின் தனித்தன்மை கெட்டுவிடுவதோடு, 'எல்லாச் சொற்களுமே பிறமொழிகளிலிருந்து வந்தன' என்று சொல்லும் நிலையுமுண்டாகிவிடும். ஆதலின் இச்குறைபோக்க இனியேனும் ஸ, ஷ, ஜ, க்ஷ, ஹ ஸ்ரீ முதலான வடவெழுத்துக்களைத் தமிழிற் கலந்து எழுதும் நிலையை மாற்றவேண்டும்.

---

20. தமிழியக்கம்.

21. மொழிவரலாறு-மு: வ. (பக்கம்–10)

உலக மொழிகளில் எண் பகுப்பு

———○———

டாக்டர். ச. அகத்தியலிங்கம்,
M. A., Ph. D. (Kerala), Ph. D. (Ind. U. S. A.)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

0. மொழிகளின் அமைப்பு
1. எண் இன்மை
2. ஒருமை—பன்மை
3. மனித இனத்தில் மட்டுமே பன்மை
4. வேற்றுமையிலும் எண் வேற்றுமை
5. பெயரடைகளிலும் எண் வேற்றுமை
6. சிறப்புச் சுட்டுக்களிலும் ஒருமை—பன்மை
7. தொகுதி—பகுதி
8. ஒருமை—பன்மை—கூட்டம்
9. ஒருமை—பன்மை—பெரு அளவு
10. ஒன்றுக்கு மேற்பட்ட பன்மை
11. சிறப்புச் சுட்டுடன் மட்டுமே பன்மை
12. ஆண், பெண்களுக்கெனத் தன்மை
13. பொருண்மைப் பெயர்களிலும் பன்மை
14. இருமை
15. ஓரின மொழிகளில் இருமை இன்மை
16. மூவிடப் பெயர்களில் மட்டுமே இருமை
17. ஒரே மொழியில் இருமையின் அழிவு
18. கிளைமொழியில் இருமை இன்மை
19. படர்க்கையில் இருமை இன்மை
20. ஒருமை—இருமை (பன்மை இன்மை)
21. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை
22. எண் காட்டும் முறை
23. உருபுப் பொருள்

மனிதன் பேசும் மொழிகளில் பல இலக்கணக் கூறுகளைக் காண்கிறோம். அவற்றுள் ஒன்று 'எண்' (number). உலகமொழிகள் பலவற்றின் அமைப்பினை ஆராயும்போது இவ்விலக்கணக்

கூறின் முக்கியத்துவம் நன்கு விளங்கும். பல மொழிகளில் ஒருமை, பன்மை எண்களையும் (Singular, plural) சில மொழிக ளில் ஒருமை, இருமை, பன்மை (singular, plural and dual) எண்களையும் காண்கிறோம்; சில மொழிகள் எவ்வித எண் வேற் றுமையும் காட்டுவதில்லை. இன்னும் சில மொழிகள் ஒருமை, பன்மைப் பகுப்புடன் கூட்டத்தைக் (collection) குறித்து நிற்ப தையும் வேறு சில மொழிகள் ஒருமை, பன்மை, பெரு அளவு என்ற பாகுபாடுகளைக் குறிப்பதையும்காணலாம். ஓரிருமொழிகள் தொகுதி. அதன் பகுதி என்ற வேற்றுமையைக் காட்டுகின்றன. இவற்றைக் காணும்போது உலக மொழிகள் எண்களின் அடிப் படையில் எவ்வளவு வேற்றுமைகளைக் கொண்டுள்ளன என்பது தெரியவரும்.

உலகில் காணப்படும் மொழிகளில் எல்லாம் எண்ணுப் பெயர்கள் (numerals) உள்ளன. பல மொழிகளில் எண்ணுப் பெயர்கள் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. சில மொழிகள் வளர்ச்சியடையாத நிலையிலுள்ளன. மொழிகள் 'ஒன்று' 'இரண்டு' 'மூன்று' எனப் பல எண்ணுப் பெயர்களைக்கொண்டிருந்த போதி லும் எண்களைப் (number) பொறுத்தமட்டில் ஒருமை-பன்மை, ஒருமை-இருமை-பன்மை என்ற வேற்றுமைகளையே கொண் டிருக்கக் காண்கிறோம். காரணம் மொழிகளின் அமைப்புதான்.

தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் ஒருமை, பன்மை என்ற இரு எண்களேஉள்ளன ஒருமையைக் காட்டும் பெயர்கள், பன்மையைக் காட்டும் பெயர்கள் எனப் பெயர்களை இருபிரிவாகப் பிரித்துவிடலாம். 'நாய்' என்ற சொல் நாய் ஒன்றையும் 'நாய்கள்' என்ற சொல் ஒன்றிற்கு மேற்பட்ட நாய்களையும் குறிக்கும். 'நாய் வந்தது' என்றும் 'நாய்கள் வந்தன' என்றும் ஒருமை பன்மைக் கேற்ப வினையில் மாற்றம் காண்கிறோம். 'இரு நாய்கள்' 'மூன்று நாய்கள்' எனப் பிரித்துக் கூற முடியினும் வினையிலோ, மூவிடப் பெயர்களிலோ மாற்றம் வருவதில்லை. ஒன்றைக் குறிக்கும்போது 'அது' என்றும் ஒன்றுக்கு மேல் இரண்டாயினும் மூன்றாயினும் பலவாயினும் 'அவை' என்றும் குறிப்பிடுகிறோம். அதனால்தான் தமிழ் ஒருமை, இருமை எண்களைக் கொண்டது எனக் கூறினர் இலக்கண அறிஞர்கள்.

ஆனால் உராலிக் மொழிகளில் ஒன்றான செல்கப் (Selkup மொழியின்கண் ஒருமை, இருமை, பன்மை என மூன்று எண்கள்

இருப்பதாகக் கூறுவர் இலக்கண அறிஞர்கள்.) பெயரைக் குறிக்கும் சொற்களுடன் சில பின்னொட்டுக்களை (suffix) இணைத்து இம்மொழியினர் இருமையையும் காட்டிவிடுவர். எடுத்துக் காட்டாக,

அத	ரயிண்டியர்
அதாகி	இரு ரயிண்டியர்
அதத்	ரயிண்டியர்கள்

என்ற சொற்கள் முறையே ஒருமை, இருமை, பன்மைகளைக் காட்டுகின்றன. இது போன்றே இம்மொழி வினைச்சொற்களும் காணப்படுகின்றன.

am-n-ap	உண்கிறேன்
am-n-ey	இருவர் உண்கிறோம்
am-n-ymyt	பலர் உண்கிறோம்

எனத் தன்மையில் மூன்று விகுதிகள் உள்ளன. இதனால்தான் இம்மொழியில் ஒருமை, இருமை, பன்மை எண்களைக் கண்டனர் இலக்கண அறிஞர்கள்.

இதுபோன்று மொழிகளின் அமைப்பை அடிப்படையாக வைத்து நோக்கின் சிலமொழிகள் எண் வேற்றுமை ஏதுவுமின்றி இருக்கக் காணலாம். அஸ்திரேலியாவில் வழங்கும் ஒரு சில மொழிகளும் அமெரிக்க இந்திய மொழிகளில் ஒருசிலவும் இந்நிலையில் உள்ளன 1

கொரிய மொழி, ஜப்பானிய மொழி, இந்தோனேஷிய மொழி போன்றவற்றுள்ளும் சொற்கள் பொதுவாக ஒருமை,

---

1 Similarly the Australian Dippil and Lake Macquarie languages, the Central American Nahuatl and Totonak, the South American Arawak and extinct Yunkan Mochika, etc. show no distinction between the singular and the plural.

Louis H. Gray. Foundations of Language, p. 1c0.

பன்மை காட்டுவதில்லை என்பர் சிலர்.1 எடுத்துக்காட்டாக ஜப்பானிய மொழியில் காணப்படும் 'ushi' என்ற சொல் பால், எண் பகுப்பற்று, 'பசு' காளை', 'பசுக்கள், 'காளைகள்' என்ற பல பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. இது போன்றே ஒருவினைச் சொல்லும் பல பொருள்களில் வரக் காணலாம். யுகு (Yuku) என்ற வினைச் சொல்

நான் வருகிறேன்
நீ வருகிறாய்
அவன் வருகிறான்
அவள் வருகிறாள்
அது வருகிறது
நாங்கள் வருகிறோம்
நாம் வருகிறோம்
அவர்கள் வருகிறார்கள்
நீங்கள் வருகிறீர்கள்

எனப் பல பொருளில் வரக்காண்கிறோம். இதுபோன்றே 'bruh' என்ற இந்தோனேஷியச் சொல் 'முதலாளி' 'முதலாளிகள்'எனப் பொருள்படுகிறது.

எனினும் பன்மையைக் குறித்துக் காட்டவேண்டின் மிக அரிதாக இம்மொழியின் சொற்களை இரட்டித்தும் சில ஒட்டுக்களை இணைத்தும் கூறுகின்றனர். ஜப்பானிய மொழியினர்

---

1 The Korean noun has no number in the words itself. Plurality depends on the context. However, in some cases, where plurality needs to be emphasized, the post position DUL is used.

—EDWARD W. PAI, Conversational Korean, p.11.

But such locations are somewhat exceptional, distinctions of number not being dwelt upon at every turn by the Japanese as they are by the Aryan mind.

— BASIL HALL CHAMBERLAIN, A simplified Grammar of the Japanese Language, pp. 10-11.

சொல்லுடன் சில முன்னொட்டுக்களை இணைத்தும் சொற்களை இரட்டித்தும் பன்மையைக் காட்டுகின்றனர். இந்நிலையை இந்தோனேஷியன், கொரியன் போன்ற மொழிகளிலும் காணலாம்.

ஒருமை–பன்மை

உலக மொழிகளில் பெரும்பாலானவை ஒருமை, பன்மை எண்களைக்கொண்டுள்ளன. தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ், போர்ச்சுக்கீஸ் போன்ற பல மொழிகள் இப்பண்பினைக் காட்டும். இவற்றுள் சில மூல மொழியில் ஒருமை, பன்மை, இருமையைக் கொண்டவை ஸ்பானிஷ், பிரஞ்சு போன்ற மொழிகளின் மூலமான லத்தீனில் இருமையைக் காண்கிறோம். இது போன்றே இந்தோ–ஐரோப்பிய மூல மொழியும் இருமையைக் கொண்டது. இருமைமறைந்த நிலையிலேயே இம் மொழிகள் ஒருமையையும், பன்மையையும் காட்டுகின்றன ஆனால் மூலத் திராவிடமொழியோ ஒருமை, பன்மையையே கொண்டது.

பன்மை காட்டும் மொழிகளையும் துருவி ஆராயின் பல நிலைகள் அவற்றுள் இருக்கக் காணலாம். சிலமொழிகள் (1) மனித இனத்தைக் குறிக்கும் சொற்களில் மட்டுமே பன்மையைக் காட்டுகின்றன. (2) வேறு சில மூவிடப் பெயர்களிலும் உறவுப் பெயர்களிலும் மனித இனத்தைக் குறிக்கும சிலசொற்களிலும் பன்மையைக் காட்டுகின்றன (3) சில மொழிகளில் உறவுப் பெயர்கள் மாத்திரமே பன்மையைக் கொண்டிருக்கின்றன. (4) சில மொழிகள் வேற்றுமையிலும் (5) இன்னும் சில மொழிகள் பெயரடைகளிலும் (6) வேறு சில மொழிகள் சிறப்புச் சுட்டுக்களிலும் (definite articles) பன்மையைக் காட்டுதல் உண்டு. இந்நிலை இருமை எண்ணைக்கொண்ட மொழிகள் சிலவற்றுள்ளும் உள்ளது.

மனித இனத்தில் மட்டுமே பன்மை

பிரிட்டிஷ் கொலம்பியா, வான் கூவர் போன்ற இடங்களில் வாழும் சுமார் 1000 மக்களால் பேசப்படும் குவகுதில் (Kwakiutl) மொழியின்கண் மனித இனத்தைக் குறிக்கும் சொற்களில் மட்டுமே ஒருமை, பன்மை பாகுபாடு காணப்படுகிறது. இதுபோன்றே நியூமெக்சிக்கோ காட்டுப் பகுதிகளில் வழங்கும்

(Apache) அப்பச்சே மொழியின்கண் ஒருமை பன்மை வேற்றுமையே இல்லை. வினையிலும் பன்மை குறிக்கும் விகுதிகள் இல்லை. பிரிட்டிஷ் கொலம்பியாவை யடுத்த சார்லெட் தீவின்கண் (Queen Charlette) வழங்கும் ஹைடா மொழியின்கண்ணும் (Haida) பன்மை எண் நன்கு வளரவில்லை. மூவிடப் பெயர்களிலும் உறவுப் பெயர்களிலும் ஒரு சில மனித இனத்தைக் குறிக்கும் பெயர்களிலுமே பன்மை விகுதிகள் உள்ளன. 'காக்லங்' (மாமன்மார்)என்றசொல்லில்வரும் -லங் விகுதி பன்மை காட்டும். இதைப்போலவே குறிப்பிட்ட சில வினைச் சொற்களே பன்மை காட்டுகின்றன 1. திலிங்கித் மொழியில் உறவுப் பெயர்கள் 'அவர்கள்' என்ற சொல்லுடன் இணைந்து பன்மையைக் காட்டப் பிறபெயர்கள் தொகுதி அல்லது குழுத்தன்மையைக் குறிக்கின்றனவேயன்றிப் பன்மையைத் தருவதில்லை என்பர் 2. இன்னும் சில மொழிகள் பன்மையைக் குறிப்பிடாமல் அங்கும் இங்கும் கிடக்கின்ற பொருட்களின் தொகுதியைக் காட்டி நிற்கின்றன. இதனால்தான் அமெரிக்க இந்திய மொழிகளில் பொதுவாகப் பன்மை எண் நன்கு வளரவில்லையெனக் கருதுகின்றனர் சில மொழியியல் அறிஞர்கள் 3.

---

1 Consequently there are only a few cases in which the verbal stem differs in the singular and plural. This agrees also with the fact that in the noun the idea of plurality is only weakly developed. It occurs only in terms of relationship and a few other terms designating human beings.

—Boas A. H. A. I. L. Vol.I, p. 217.

2 Plurality is not expressed in the noun, but there is suffix indicating the collective. The plural of terms of relationship is formed by the same element that expresses the third person plural of the personal pronoun.

—Boas. ibid. p. 166.

3 It would seem on the whole, American languages are rather indifferent in regard to the clear expression of plurality, but they tend to express much more rigidly

வேற்றுமை உருபுகளிலும் எண் வேற்றுமை

தமிழைப் போன்ற மொழிகளில் பெயர்களின் ஒருமை, பன்மை எண்களுக்கேற்ப வேற்றுமை உருபுகள் மாறுபடுவதில்லை. ஒருமையோ பன்மையோ பெயர்களைப் பொறுத்து அமைகின்றனவேயன்றி வேற்றுமை உருபுகளைப் பொறுத்து அமைவதில்லை. வேற்றுமை உருபுகள் இரண்டிற்கும் பொதுவாகவே இருக்கக் காண்கிறோம். ஒருமை காட்டும் 'மரம்' என்ற சொல்லுக்கும் பன்மை காட்டும் 'மரங்கள்' என்ற சொல்லுக்கும் பொதுவாக -ஐ என்ற ஒரே வேற்றுமை உருபே இருக்கக் காண்கிறோம்.

ஆனால் சில மொழிகளில் பெயர்ச்சொற்கள் ஒருமையாயின் ஒரு வேற்றுமை உருபும் பன்மையாயின் வேறொரு வேற்றுமை உருபும் வரக்காணலாம். இம்மொழிகளில் வேற்றுமையும் எண் வேற்றுமை உடையது எனக் கூறுவர் மொழியியல் அறிஞர்கள். இந்தோ—ஐரோப்பிய மொழி இந்நிலையைக் கொண்டிருந்தது. இதனை வடமொழி, லத்தீன், ஐஸ்லாண்டிக், ஜெர்மன், போலிஷ், லுசேஷியன், செக், செர்போகிரோஷியன், ரஷ்யன் போன்ற பல மொழிகளில் இன்றும் காணலாம்.

ஐஸ்லாண்டிக்

dag	நாள்
dag-ar	நாட்கள்
dag-s	நாளின்
dag-a	நாட்களின்
deg-i	நாட்கு
dog-um	நாட்களுக்கு
dag	நாளை
dag-a	நாட்களை

இவண் 'அது' வேற்றுமை உருபுகளாக ஒருமையில் -s

---

the ideas of collectivity or distribution. Thus the Kwakiutl, who are rather indifferent to the expression of plurality, are very particular denoting whether the objects spoken of are distributed here or there.

—Boas. ibid. p. 37.

உருபும் பன்மையில் –a உருபும் வருதல் காணத்தக்கது. இது போன்றே பிற வேற்றுமை உருபுகளும் உள்ளன.

போலிஷ்

pan-	(நல்ல) மனிதன் [gentleman]
pan-a	நல்ல மனிதனின்
pan-u	நல்ல மனிதனுக்கு
pan-a	நல்ல மனிதனை
pan-em	நல்ல மனிதனால்
pan-u	நல்ல மனிதனிடம்
pan-ie	நல்ல மனிதனே!

பன்மை

pan-owie	நல்ல மனிதர்கள்
pan-ow	நல்ல மனிதர்களின்
pan-om	நல்ல மனிதர்களுக்கு
pan-ow	நல்ல மனிதர்களை
pan-ami	நல்ல மனிதர்களால்
pan-ach	நல்ல மனிதர்களிடம்

லுசேஷியன்

ஒருமை

nan	தந்தை
nan-a	தந்தையின்
nan-ey	தந்தைக்கு
nan-a	தந்தையை
nan-om	தந்தையால்
nan-je	தந்தையிடம்
nan-o	தந்தையே!

இருமை

nan-aj	இருதந்தையர், தந்தையரே!
nan-ow	இரு தந்தையரின்
nan-omaj	இரு தந்தையர்க்கு இரு தந்தையரால் இரு தந்தையரிடம்

பன்மை

nan-ojo	தந்தையர், தந்தையரே!
nan-ow	தந்தையரின்
nan-am	தந்தையர்க்கு
nan-ow	தந்தையரை
nan-ami	தந்தையரால்
nan-ach	தந்தையர்களிடம்

தமிழ் போன்ற மொழிகளில் "என்னுடைய வள்ளம்", "எங்களுடைய வள்ளம்" "என்னுடைய வள்ளங்கள்", "எங்களுடைய வள்ளங்கள்" போன்று இருசொற்களால் உடைமைப் பொருள்களைக் காட்டுகிறோம். ஆனால் யுரக் (Yurak) போன்ற மொழிகள் சொற்களுடன் சில உடைமை காட்டும் ஒட்டுக்களை இணைத்து உடைமையைக் காட்டும். "லம்பா" என்ற சொல்லுடன் "வ்" என்ற ஒட்டினை இணைத்து "லம்பா-வ்" என்ற ஒரே சொல்லால் "என்னுடைய ஸ்கீ" என்ற பொருளைக் காட்டிவிடுகின்றனர் இம்மொழியினர். இந்நிலையிலும் ஒருமை, இருமை, பன்மை எண்கள் வேற்றுமை இருப்பதால் உடைமை காட்டுவனவாக இருபத்தேழு சொற்கள் இம்மொழிகளில் காணப்படுகின்றன.

lamba-w	என் ஸ்கீ
lamba-haju-n	என் (இரு) ஸ்கீகள்
lamba-i-n	என் (பல) ஸ்கீகள்

போன்ற பல சொற்கள் உள்ளன.

பெயரடைகளிலும் எண் வேற்றுமை

தமிழ் ஆங்கிலம் போன்றபலமொழிகளில் பெயரடைகள் எண் வேற்றுமையைக் காட்டுவதில்லை. பெயரடைகள் ஒருமைப் பெயர்களுடன் வரினும் பன்மைப் பெயர்களுடன் வரினும் ஒரே மாதிரியாக எந்தவித வேற்றுமையுமின்றி வருதல் காண்கிறோம்.

நல்ல பையன்
நல்ல பையன்கள்
good boy
good boys

ஆனல் சிலமொழிகளில் பெயரடைகள், வருகின்ற பெயர்களின் எண்களுக்கேற்ப மாறி வருகின்றன. ஐஸ்லாண்டிக், ருசேஷியன், போலிஷ் போன்ற பல மொழிகள் இந்நிலையில் உள்ளன. ஐஸ்லாண்டிக் மொழியின்கண் 'செல்வமுடைய' என்னும் பொருளில் வரும் பெயரடை பல உருவங்களில் வரக்காணலாம் 1.

rikur	(ஆண்)
rik	(பெண்)
rikt	(அஃறிணை)
rikir	(ஆண், பன்மை)
rikar	(பெண், பன்மை)
rik	(அஃறிணை, பன்மை)

இதுபோன்றே ஸ்லாவிக் மொழியான ருசேஷியன் மொழிப் பெயரடைகளும் ஒருமை, இருமை, பன்மை எண் காட்டுகின்றன.

dobry	நல்ல (ஆண்)
dobre	நல்ல (அஃறிணை)
dobra	நல்ல (பெண்)
dobraj	நல்ல (ஆண், இருமை)
dobrej	நல்ல (அஃறிணை, இருமை)
dobrej	நல்ல (பெண், இருமை)
dobri	(நல்ல (ஆண், பன்கை)
dobre	(அஃறிணை, பன்மை)
dobre	(பெண், பன்மை)

இன்னுஞ்சில மொழிகளின் வரலாற்றினை நோக்கின்

1 Adjectives agree in gender and number and cases with the noun they qualify.

—S. Jonsson, A Prioner of Icelandic p, 21.

The adjective [possessive or relative, declinable participle and ordinal numeral] agrees in gender, number and case with the noun when it qualifies.

—Joseph Andrew Teslar, A New Polish Grammar, p.235.

ச. அகத்தியலிங்கம், உலக மொழிகள், முதல் பகுதி, (பாரி நிலையம்)

பெயரடைகள் பண்டு இத்தகைய வேற்றுமையைக் காட்டி வந்தன என்பதும், பின்னர்ப் படிப்படியாக எண் வேற்றுமை பெயரடைகளில் வழக்கற்றுவிட்டன என்பதும் தெரியவரும். பழைய மேங்ஸ் மொழியில் இந்நிலை இருந்துவந்தது என்றும் பின்னர்ப் படிப்படியாக வழக்கற்று விட்டது என்றும் கூறுவர் 1. வெல்ஷ், ஸ்லாவக், மாசிடோனியன் போன்ற பல மொழிகளில் இத்தன்மை உள்ளது.

gial ஒளியுள்ள (ஆண்பால்)
ghial ஒளியுள்ள (பெண்பால்)
gialley ஒளியுள்ள (பன்மை)

சிறப்புச் சுட்டுக்களிலும் ஒருமை-பன்மை

ஆங்கில மொழியில் காணப்படும் சிறப்புச் சுட்டில் (Definite article) எந்த எண் வேற்றுமையும் காணப்படுவதில்லை. சிறப்புச் சுட்டு வருகின்ற பெயர்க்கேற்ப மாற்றம் எதையும் அடைவதில்லை. பெயர் ஒருமையாயினும் பன்மையாயினும் 'the' என்ற சொல்லே சிறப்புச் சுட்டாகப் பயன்படுகிறது.

the lion
the man
the lions
the men

ஆனால் பல மொழிகள் எண் வேற்றுமையைச் சிறப்புச்சுட்டிலும்கொண்டுள்ளன. ஜெர்மானிக் மொழிகளான ஜெர்மன், ஐஸ்லாண்டிக், சுவீடிஷ் போன்ற மொழிகள் சிறப்புச் சுட்டிலும் ஒருமை, பன்மை எண்களைக் காட்டுகின்றன.

---

1 Formerly in Manx the adjectives would agree with the noun which it qualified in gender, number and case.
—J. J. Kween, A Grammar of the Manx Language, p. 62.

		ஆண்	பெண்	அஃறிணை	பன்மை
ஜெர்மன்	the	der	die	das	die
ப. நோர்ஸ்	the	inn	in	it	inir, inar, in
ஐஸ்லாண்டிக்	the	-nn	-n	—	-nir, nar, n
சுவிடிஷ்	the	den	—	det	de
டேனிஷ்	the	den,det	—	—	de
நார்வேஜியன்	the	en	a	et	ene

சில மொழிகளில் சிறப்புச் சுட்டுக்கள் ஆங்கிலத்தைப் போல் தனிச் சொல்லாகவும் சில மொழிகளில் ஒட்டுக்களாகவும் வருதல் காணத் தக்கது. இன்னும் சில மொழிகளில் சில இடங்களில் தனி மொழியாகவும் சில இடங்களில் ஒட்டாகவும் வரக் காணலாம்1 .

தொகுதி-பகுதி

பல மொழிகளில் ஒருமை, பன்மை என்ற பாகுபாடு காணப்பட ஓரிரு மொழிகளில் தொகுதி அதன் பகுதி என்ற பாகுபாடு இருக்கக் காணலாம். பொருள்கள் முழுவதும் ஒரு தொகுதியாகவும் ஒன்றைப் பொருள் அதன் பகுதியாகவும் காட்டப்படுகின்றன. ஆப்பிரிக்க நாட்டில் வழங்கும் நந்தி மொழியில் இப் பண்பைக் காணலாம்.

per	(பெர்) பட்டை (தொகுதி)
per-to	(பெர்தொ) ஒரு பட்டை

ஒருமை-பன்மை-கூட்டம்

சில மொழிகளில் ஒருமை, பன்மையைக் காட்டுவதுடன் கூட்டத்தினையும் குறிப்பிடுகின்றன. 'யானை' 'யானைகள்' 'யானைக் கூட்டம்' எனக் கூறுவதை ஆப்பிரிக்க நாட்டில் வழங்கும் சுவாகிளி மொழியினர் ஒட்டுக்களினாலேயே கூறிவிடுவர்.

simba சிங்கம்

1 The definite article inn was normally suffixed to its noun, unless an adj. preceded the noun.

—E. V. Gordon, An Introduction to Old Norse, p. 262

simba	சிங்கங்கள்
masimba	ஒரு கூட்டம் சிங்கங்கள்
unyasi	புல்
nyasi	புற்கள்
manyasi	ஒரு கூட்டம் புற்கள்

ஒருமை-பன்மை-பெரு அளவு

ஆப்பிரிக்க நாட்டில் காணப்படும் வேறு சில மொழிகள் ஒருமை-பன்மை-பெரு அளவு என்ற வேற்றுமையைக் காட்டுகின்றன. சுவாஹு மொழியின்கண் இப்பண்பினைக் காணலாம். எத்தியோப்பியாவின் வடபகுதியில் வழங்கும் திக்ரெ (Tigre) மொழியிலும் எத்தியோபியாவில் வழங்கும் கமீன் மொழியிலும் இப்பண்பு காணப்படுகிறது.

nku	ஆடு
linku	ஆடுகள்
ma-nku	மிகப்பல ஆடுகள் (சுவாஹு)
bill	பூச்சி
bil-a	பூச்சிகள்
bil-le	பூச்சிக் கூட்டம் (கமீர்)
nalat	(ஒருவகை) மான்
nalat	மான்கள்
nalatat	அதிகமான்கள் (திக்ரெ)

ஒன்றுக்கு மேற்பட்ட பன்மை

தேவர் வந்தனர்

தேவர்கள் வந்தார்கள் (double plural)

இவைபோன்ற சொற்களில் இருமைப் பன்மையைக் (double plural) காண்கிறோம். ஆனல் அவற்றிடையே) எந்தவிதமான பொருள் மாற்றத்தினையும் காண்பதில்லை. சுவாகிளிச் சொற்சள் சிலவற்றில் இருவிதமான பன்மைகள் உள்ளன. ஒரு பன்மை சாதாரணப் பன்மையைக் குறிப்பதாகவும் மற்றொரு பன்மை, கூட்டத்தைக் குறிப்ப

தாகவுமிருப்பது காணத்தக்கதாம் 1.

சிறப்புச் சுட்டுள் மட்டுமே பன்மை

ஸ்பெயினில் பேசப்படும் பாஸ்க் மொழியின்கண் தமிழ் மொழியைப் போன்று ஒருமை-பன்மை காணப்படுகின்றது. ஆனால் பன்மை எப்போதும் சிறப்புச் சுட்டுக்களுடன் மட்டுமே வருகின்றது. ஆங்கிலத்தில் man-men, the man-the men எனப் பன்மையைச் சிறப்புச் சுட்டுடனும் தனியாகவும் கூறுதல் இயலும். ஆனால் பாஸ்க் மொழியிலோ "the men" என்று கூறமுடியுமேயன்றி "men" எனக்கூறமுடியாது. 2

ஆப்பிரிக்காவில் நைஜீரியா, கானா, சூடான் போன்ற இடங்களில் பேசப்படும் ஹாஸா (Hausa) மொழியின்கண்ணும ஒன்றுக்கு மேற்பட்ட பன்மைகள் உள்ளன. இவை சில பொருட்களைக் குறிப்பனவாகவும், அல்லது பலபொருள்களைக் (Plural of abundance) குறிப்பனவாகவும் பெரும்பொருள் (augmentation) அல்லது சிறுபொருள் வேற்றுமையைக் காட்டுவன

---

1 Chwana, which has one plural denoting merely "more than one" of thing, another to mean a great quantity of it.

—A. Werner, The Language-families of Africa, p 89
—F. W. Taylor, A Practical Hausa Grammar, p.106

The double plural or 'pig plural' is a distinct morphological class in Tigre, though only the example quoted above was noted. Whether this is to be treated together with the plurals or the derivatives, is a matter that can be decided only artitarity.

—August Dillmann, Ethropic grammar, p. 39

2 Number is either singular or plural. The suffix of the plural is k; eg. gizona 'the man' gizona-k 'the men'; emakumea 'the woman' emakumea-k 'the women'. The plural noun is never without the article 'men' cannot be expressed.

—W. J. Eys, The Besgue Language, pp. 8-9

வாகவும் இருந்தன வென்றும் 1 இன்று அந்நிலை மாறி ஒரு சொல்லுக்கு ஒரு பன்மை என்ற நிலை உருவாகி வருகிறது என்றும் கூறுவர்.

ஆண்-பெண்களுக்கென்று தனித்தனிப் பன்மை விகுதிகள்

அமெரிக்க நாட்டில் ஜியாஜியாவில் சாவன்னா நதிக்கரையிலும் ஒக்கலஹோமாவின் நடுப்பகுதியிலும் வழங்கும் யுச்சி மொழியில் இரண்டு விதமான பன்மை விகுதிகள் காணப்படுகின்றன 2. யுச்சி இனத்தாரின் பன்மையினைக் குறிக்கும் போது ஆண்கள் henɔ என்று விகுதியையும் பெண்கள் -onɔ, -inɔ என்ற விகுதிகளையும் பயன்படுத்துகின்றனர்.

பொருண்மைப் பெயர்களிலும் பன்மை

ஆங்கில இலக்கண அறிஞர்கள் சொற்கள் பன்மையை ஏற்கும் அடிப்படையில் பெயர்ச் சொற்களை 'mass nouns', 'count nouns' எனப் பிரித்தல் காணலாம். பெண், கண்ணாடி, புத்தகம் போன்ற தமிழ்ச் சொற்களைப் 'பெண்கள்', 'கண்ணாடி' எனப் பன்மை விகுதி இணைத்துப் பன்மையாக்குதல் இயலும். ஆனால் 'தண்ணீர்' 'சாராயம்' போன்ற சொற்களில் "கள்" விகுதியினை இணைத்துப் பன்மை காட்டுதல் முடியாது. இதே நிலைதான் ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் காணக்கிடக்கின்றது. ஆனால் வடஅமெரிக்க மொழிகளில் ஒன்றான சூனி மொழியில் தண்ணீரைக் குறிக்கும் சொல்லும் பன்மை விகுதியினை ஏற்றுவருதல் உண்டு. இந்நிலையை ஆப்பிரிக்க மொழிகள் சிலவற்றிலும் காணலாம்.

---

1 There are two numbers, the singular and the plural. Most nouns have more than one plural form, and the probability is that these plural forms were originally divided into two classes, the plural of paucity of small numbers of things, say up to ten, and the plural of abundance, used of large quantities.
—F. W. Taylor: A Practical Hausa Grammar p. 106

2. Boas. A.H.A.I.L. P. 322

ஷா	த்ண்ணீர்
ஷாங்	அதிகம் தண்ணீர் (புஷ்மன்)

இருமை (Dual)

உலகில் காணப்படும் பெரும்பான்மையான மொழிகளில் ஒருமை, பன்மை எண்கள் காணப்படினும் சில மொழிகளில் ஒருமை, இருமை, பன்மை எண் வேற்றுமை உள்ளது. ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு போன்ற மொழிகளில் இருமை இன்று இல்லையாயினும் அம்மொழிகளுக்கெல்லாம் தாயக மொழியான இஐ மொழி இருமை எண்ணைக் கொண்டது. இன்று வழக்கிலிருக்கும் இவ்வின மொழிகள் பல இருமை எண்ணை இழந்துவிட்ட நிலையில் லத்தீன், வடமொழி போன்ற சில மொழிகள் இருமை எண்ணினைக் கொண்டுள்ளமை காணத்தக்கது. சில மொழிகளில் இருமை எண் வழக்கிறந்து விட்டாலும் இருமைக்கூறுகள் ஆங்காங்கே காணக் கிடக்கின்றன. கி. பி. பதினான்காம் நூற்றாண்டு வரையிலும் இருமையைக் கொண்டிருந்த ரஷ்யன் இன்று ஒருமை, பன்மை மட்டுமே கொண்டிருக்கக் காண்கிறோம்.

முன்னர்க் குறிப்பிட்டது போன்று மொழிகளின் அமைப்பின் (structure) அடிப்படையிலேதான் இருமையும் அமைந்துள்ளது. தமிழில் 'இரு வீடுகள்' என இரு சொற்களில் கூறுவதை வோகுல் (Vogul) மொழியினர் (உராலிக் இனம்) 'க்வலி' என்ற ஒரே சொல்லினால் கூறிவிடுவர். இது போன்ற 'க்வல்' என்ற சொல்லால் 'வீடு' என்ற பொருளையும் 'க்வலித்' என்ற சொல்லால் 'வீடுகள்' என்பதையும் காட்டுவர். இதுபோன்றே நாம் 'என்னுடைய வீடு', 'என்னுடைய இரு வீடுகள்' 'என்னுடைய வீடுகள்' 'எங்கள் இருவருடைய வீடு', 'எங்கள் இருவருடைய இரு வீடுகள்' எனப் பல சொற்களால் கூறுவதை ஒரே சொற்களால் கூறிவிடுவர்.

kwalam	என்னுடைய வீடு
kwalam	என்னுடைய இரு வீடுகள்
kwalam	என்னுடைய வீடுகள்
kwalam	எங்கள் இருவருடைய வீடு

போன்ற சொற்கள் பல உள்ளன.

தமிழ் மொழியில் வினையில் பன்மையாக ஒரு சொல்லே

வழங்க இம்மொழியின்கண் இருமையும் பன்மையும் உள்ளன.

tote-g-um	கொண்டு வருகிறேன்.
tote-i-men	இருவர் கொண்டுவருகிறோம்.
tote-w	கொண்டுவருகிறோம்.

ஓரின மொழிகளில் இருமை இன்மை

உலகில் காணப்படும் சில மொழிகளில் இருமை இன்று காணப்படினும் காலப் போக்கில் இருமை எண் அழிந்துவருகின்ற நிலையிலேயே உள்ளது. பல வேறு மொழியினங்களின் வரலாற்றை நோக்கின் இவ்வுண்மை புலப்படும்.

இந்தோ-ஐரோப்பிய மொழி இருமை எண்ணைக் கொண்டது. ஆனால் அதிலிருந்து பிறந்த மொழிகள் பல இருமை எண்ணின்றியே காணப்படுகின்றன. ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளில் இருமை இல்லை.

இலத்தீன் மொழி இருமையைக்கொண்டது. ஆனால் அதிலிருந்து பிறந்த ரொமான்ஸ் மொழிகளோ ஒருமை, பன்மையை மட்டும் கொண்டுள்ளன.

மூவிடப் பெயர்களில் மட்டுமே இருமை

சில மொழிகளில் மூவிடப் பெயர்கள் மட்டுமே இருமையைக் காட்டுகின்றன. சாதாரணப் பெயர்கள் ஒருமை, பன்மையையே சுட்டும். ஜெர்மானிக் மொழிகளில் ஒன்றான ஐஸ்லாண்டிக், சினூக் (அமெரிக்க இந்திய மொழி) போன்றவற்றில் இப்பண்பைக் காணலாம.

உராலிக் மொழிகளுள் பெரும்பான்மையான மொழிகளில் ஒருமை பன்மையே காணப்படுகின்றன. லாட்பிஷ், வோகுல் (vogul), ஒஸ்தயக்போன்ற ஒருசில மொழிகளே இருமையையும் குறிக்கும். இவற்றுள்ளும் லாப்பிஷ் போன்ற மொழிகள் மூவிடப் பெயர்களில் மட்டுமே இருமையைக் காட்டுகின்றன. இத்தன்மை காலப் போக்கில் உராலிக் மொழிகளில் இருமை அழிந்துவருகின்ற நிலையைக் காட்டும்.

ஒரே மொழியில் இருமையின் அழிவு

இருமை எண்ணைக்கொண்டிருந்த சில மொழிகள் இன்று அவ்வெண்ணை இழந்துவிட்ட நிலையைக் காணலாம். ரஷ்ய மொழியின் வரலாற்றை நோக்கின் இவ்வுண்மை புலப்படும். பழைய ரஷ்யனில் இருமை காணப்பட இன்றை ரஷ்ய மொழியில் அது அழிந்துவிட்ட நிலையைக் காண்கிறோம். கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டு முதல் இருமை எண்ணில் மயக்கம் ஏற்பட ஆரம்பித்துப் பதினான்காம் நூற்றாண்டில் இவ்வெண் அழிந்துவிட்டது எனக்கூறுவர் இலக்கண அறிஞர்கள்.

கிளைமொழியின் இருமை இன்மை

சோவியத் நாட்டில் ஆர்க்டிக் கடலோரத்தில் கனின் பகுதிகளிலும் அதையொட்டிய பிற பகுதிகளிலும் வழங்கும் யுரக் (yurak) மொழியின்கண் ஒருமை, இருமை, பன்மை எண் வேற்றுமையைக் காணலாம். ஆனால் இதன்கண் காணப்படும் சில கிளை மொழிகளில் இருமை காணப்படுவதில்லை. 1

படர்க்கையில் இருமை இன்மை

இருமை காட்டும் சில மொழிகள் படர்க்கையில் இருமை காட்டுவதில்லை. கோதிக், ஐஸ்லாண்டிக் போன்ற மொழிகள், தன்மை, முன்னிலையில் ஒருமை, இருமை, பன்மை எண்களைக் கொண்டிருக்கப் படர்க்கையில், ஒருமை, பன்மை வேற்றுமையையே கொண்டுள்ளன.

இக்	(ik)	நான்
விற்ற	(wit)	நாங்கள்/நாம் இருவர்
வெய்ல்	(weiz)	நாங்கள்/நாம்
து	(tu)	நீ

---

1 There are three numbers: singular, dual and plural. Note The dialects of the kanin peninsula and Malaya Zembya lost the dual both in the declension of nouns and in the conjugation.

—B. Collinder, Survey of the Uralic Language, p. 427

யுஸ்	(yus)	நீங்கள்
இக்கர	(iggara)	உங்கள் இருவருடைய

எனத் தன்மையிலும் முன்னிலையிலும் இருமை காட்டும் கோதிக் மொழி, படர்க்கையில்

எய்ஸ் (eiz) அவர்கள்

எனப் பன்மை மட்டுமே காட்டி நிற்கின்றது.

ஒருமை-இருமை

உலக மொழிகளில் பெரும்பான்மையானவை ஒருமை, பன்மை எண்களைக் கொண்டிருக்க வடஅமெரிக்காவில் நியூ மெக்ஸிக்கோ காட்டுப்பகுதிகளில் வாழும் ஒரு சில அமெரிக்க இந்தியர்களால் பேசப்படும் அபச்சே (Chiricahua Apache) போன்ற ஓரிரு மொழிகளில் ஒருமையும் இருமையுமே காணப்படுகின்றன. ஒருமையையும் இருமையையும் குறிப்பதற்கெனத் தனித் தனி ஒட்டுக்கள் உள்ளன. ஆனால் பன்மையைக் குறிக்க வேண்டின் 'இவனும் அவனும்' 'இங்குள்ளவனும் அங்குள்ளவனும்' என இணைத்துக் கூறுதல் வேண்டும். வினைச் சொற்களிலும் பன்மையைக் குறிக்கவெனத் தனி விகுதிகள் இல்லை. மூவிடப் பெயர்களும் பன்மை காட்டுவதில்லை.

ஷி	(si)	நான்
ன்தி	(ndi)	நீ
பி	(bi)	அவர், அவள், அது
கொபி	(gobi)	அவர்கள் இருவர், அவைகள் இரண்டு
நகி	(nahi)	நீங்கள் இருவர்

அமெரிக்க மொழிகளில் ஒன்றான மைதுவில் (Maidu) பன்மையும் இருமையும் காணப்படினும் பன்மையை விட இருமையே அதிகமாகக் காணப்படுகிறது என்பர். பன்மையைக் காட்டும் சொற்கள் எல்லாம் இருமை ஒட்டினையும் ஏற்கின்றன. ஆனால் இருமை காட்டும் சொற்கள் பன்மையைக் காட்டும் ஒட்டினை ஏற்பதில்லை. மூவிடப் பெயர்கள் தவிரப் பன்மைச் சொற்களாக ஒரு சிலவே உள்ளன. பால் பகுப்பினைப் போன்று

எண் பகுப்பும் இம்மொழியில் வளராத இலக்கணக்கூறு ஆகும். 1 ஒரு சில பெயர்களைத் தவிரப் பிற பெயர்கள் எப்பாலையும் காட்டுவதில்லை. இது போன்று ஒரு சில பெயர்களே ஒருமை, இருமை பன்மை காட்டுகின்றன.

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

தமிழில் 'நாம்' 'நாங்கள் 'என இருதன்மைப் பன்மைகள் உள்ளன. 'நாம்' எனக்கூறும் போது யாருடன் பேசுகிறோமோ அவர்களையும் உட்படுத்துதலால் இதனை உளப்பாட்டுத்தன்மைப் பன்மை (inclusive plural) என்பர் இலக்கண ஆசிரியர்கள். 'நாங்கள்' என்ற சொல் யாருடன் பேசுகிறோமோ அவர்களை நீக்கிப் பிறரைச் சுட்டுதலால் 'exclusive plural' என்றழைப்பர். இத்தகைய இரு பன்மைகள் உலக மொழிகளில் ஒரு சிலவற்றிலேயே காணப்படுகின்றன. திபேத்தோ-பர்மிய மொழிகள் முண்டா மொழிகள், திராவிட மொழிகள், அமெரிக்க இந்திய மொழிகளான சினூக், குவகுதில் சியொவென், பாக்ஸ் போன்ற ஒரு சில மொழிகளிலேயே இத்தகைய இரு தன்மைப் பன்மைகள் காணக்கிடக்கின்றன.

மேலும் சில மொழிகளில் "நாம்" "நாங்கள்" "நாம் இருவர்" "நாங்கள் இருவர்" என இருமையும் தன்மையில் காணப்படுகின்றது. சினூக் மொழியில்

ntaika	நாங்கள் இருவர்
txaika	நாம் இருவர்
ntcaika	நாங்கள்
lxaika	நாம்

என இருமையும் உள்ளது.

---

1 Ideas of number are unequally developed in Maidu. In nouns, the exact expression of number seems to have been felt as a minor deed; whereas, in the case of pronominal forms, number is clearly aud accurately expressed.

—Franz Boas: Hand Book of American Indian Languages, vol. 1. p. 68 3

தமிழ் போன்ற மொழிகள் மூவிடப்பெயரைப் பொறுத்த மட்டில் இவ்வேற்றுமையைக் கொண்டிருந்த போதிலும் வினையில் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் இருக்கக் காண்கிறோம்.

நாம் வந்தோம்

நாங்கள் வந்தோம்

என்ற வாக்கியங்களில் "நாம்", "நாங்கள்" என்ற இரு எழுவாய்களும் "வந்தோம்" என்ற ஒரே விகுதியைக் கொண்டே முடிகின்றன. ஆனால் பாக்ஸ் போன்ற மொழிகள் வினையிலும் இவ்வேற்றுமையைக் கொண்டுள்ளன.

நெனெசாபென	நாங்கள் அவனைக் கொன்றோம்
தெனசாபென	நாம் அவனைக் கொன்றோம்

என்ற வினைச் சொற்கள் இத்தன்மையைக் காட்டும். இதே நிலையைத் தெலுங்கு போன்ற திராவிட மொழிகளிலும் காணலாம்.

எண் காட்டும் முறை

மொழிகள் பல வேறு முறைகளில் பன்மை இருமை எண்களைக் காட்டுகின்றன. தமிழ் மொழிப் பெயர்ச் சொற்கள் பல பின்னொட்டுக்களால் (suffixes) பன்மை காட்டுவது (மரம்–கள்) இவண் குறிப்பிடத்தக்கது. இதே நிலையை ஆங்கிலத்திலும் காணலாம. –s, –z, –əz போன்ற பின்னொட்டுக்களாலும் 'man' 'men' என்ற சொற்களில் உயிர் மாற்றத்தாலும் பன்மை குறிக்கப்படுகிறது. இதே போன்று உலக மொழிகள் பலமுறைகளில் பன்மை காட்டுகின்றன.

பின்னொட்டு (suffix)

தமிழ், ஆங்கிலம், நாமா, ஹாட்டன் போட் போன்ற பல மொழிகள் பின்னொட்டால் பன்மை காட்டும். இம்முறையே மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

han-sa	பேரரசர்கள்
age-sa	அண்ணன்மார் (மஞ்சு)
iklu-k	வீடுகள்

iklu-t	இரு வீடுகள்
iklu	வீடு (எஸ்கிமோ)

இரட்டிப்பு (Duplication)

kuni	நாடு
kuniguni	நாடுகள் (ஜப்பானிய மொழி)
duri	முள்
duriduri	முட்கள் (மலாய்)
tu	மாதம்
tutu	மாதங்கள் (புஷ்மன்)

முன்னொட்டு (prefix)

சுவெ	தம்பி
ஆ-சுவெ	தம்பியர் (சூனி)
ம்-து	மனிதன்
வ-து	மனிதர்கள் (சுவாகிளி)

உயிர் மாற்றம்

ஹறுக்	பெண்
ஹானக்	பெண்கள் (திசிம்ஷியன்)
பாய்	கிராமம்
பேய்	கிராமங்கள் (திங்கா)

ஒரே சொல்

வன்	பால்
வன்	பற்கள் (திசிம்ஷியன்)

முன்னொட்டு & முன்னொட்டு

வக்	தம்பி
கவக்கு	தம்பியர் (திசிம்ஷியன்)

தனிச் சொல்

உ நக்	காளை
இ நக்	காளைகள் (உலாப்)

இறுதி ஒலிமாற்றம்

இச்	காது
இத்	காதுகள் (திங்கா)

உருபுப் பெயர்

தமிழில்-கள் விகுதிபன்மையைக்காட்டும். 'கள்' பன்மை காட்டும் உருபாக நிற்கிறதேயன்றி இதற்கெனத் தனிப் பொருள் எதுவும் இல்லை. ஆனால் உலகமொழிகள் பலவற்றில் காணப் படும் பன்மை உருபுகள் சில தமக்கெனத் தனிப் பொருள் கொண்டிருப்பதைக் காணலாம். 'அவர்கள்', 'மக்கள்,' 'ஆள்,' 'பல', 'எல்லாம்' போன்ற பொருள்தரும் சொற்கள் தங்கள் பொருளை இழந்து வெறும் பன்மை உருபுகளாக நிற்கின்றன. ஆப்பிரிக்க நாட்டில் வழங்கும் எவெ (Ewe) அமெரிக்க நாட்டில் வழங்கும் திலிகித் (Tligit) போன்ற மொழிகளில் பெயர்ச்சொற் களுடன் 'அவர்கள்' எனப் பொருள்படும் சொல்லை ஒட்டாக இணைத்துப் பன்மை காட்டப்படுகிறது. இதுபோன்று ஆப்பிரிக் காவில் வழங்கும் திஷி (Tshi) மொழியில் 'மக்கள்' எனப்பொருள் படும் 'nom' என்ற சொல்லைப் பன்மை உருபாகப் பயன்படுத்து கின்றனர்.

அவர்கள்

wo	அவர்கள்
ati	மரம்
ati-wo	மரங்கள் (Ewe)

மக்கள்

nom	மக்கள்
aga	தந்தை
aga-nom	தந்தையர் (Tshi)

ஆள்

fo	ஆள்
afe	துணைவன்
afe-fo	துணைவர்கள் (Tshi)

பல

mae	பல
aba	தந்தை
aba-mae	தந்தையர் (Gurung)

எல்லாம்

jaga	எல்லாம்
naki	நாய்
naki-jaga	நாய்கள் (Ibo)

சிலம்பில், கொலையும் வழக்கும் ஒரு நாட் கூத்தே! *

தி. சு. நடராசன்,

தமிழ் ஆராய்ச்சி மாணவர், மதுரைப் பல்கலைக்கழகம்.

காப்பியம், கவிதை வடிவில் கதை கூறும் ஓர் இலக்கிய வகை. நிகழ்ச்சிகளும், அவற்றைச் சுற்றிச் சூழ்ந்த புனைந்துரைகளும், அக்காப்பியத்தில் பின்னிப் பிணைந்து கிடத்தல் இயல்பு. கதையைக் கூறும் முறையில் விறுவிறுப்பிற்கும் கவர்ச்சிக்குமெனத் தனிப்போக்குகள் சில அமைந்திருத்தலுமுண்டு. நிகழ்ச்சிகள் பலவற்றைக் கூறும்போது, சில விடங்களில் ஒரே நிகழ்ச்சி அல்லது செய்தி, பலகாலப் பகுதிகளுள் இணைந்துகிடப்பது போலக் காட்டப்படலாம்; சிலபோது, நிகழ்ச்சிகள் பல, ஒரே காலம் அல்லது நேரத்தில் நடப்பது போலக் குவித்துக்காட்டப் படலாம். இவ்வாறு காட்டப்படுவதன் நோக்கமெலாம், காப்பியத்திற்குரிய நாடகப் போக்கினை ஒட்டிய ஓர் அமைப்பினைத் தரமுயல்வதேயாம். நிகழ்ச்சி, காலம், இடம்—என்ற மூன்றும் அமைந்துகிடக்கும் முறையினைப் புரிந்துகொண்டால்தான் குறிப்பிட்ட காப்பியத்தை நன்றாகச் சுவைக்க முடியும். இன்றையத் திரைப்படக்காட்சிகளைமனத்தில்வைத்துக்கொண்டு,இலக்கியத்திலும் அதனையே எதிர்பார்த்தால் இடர்ப்பாடும் குழப்பமுமே மிஞ்சும். ஆந்தந்த இலக்கியத்தைச் சுவைக்க, அதனதன் மரபையும் அமைப்பையும் புரிந்துகொண்டே அணுகவேண்டும். அதிலும் குறிப்பாக, நிகழ்ச்சி, காலம், இடம், என்ற மும்முனையியல்பினை யுணர, அந்தச் சுவைப்பு முறை மிக இன்றியமையாதது. இல்லையென்றால், ஐயங்களே எழும்; தெளிவு காண முடியாது.

சிலம்பினை யணுகும் போதும் இந்த அடிப்படையை மறந்துவிடக்கூடாது. இளங்கோவடிகள், சிலபோது, 'யாண்டு

---

* இதனைஎழுதுவதிற் பங்குகொண்டவர் திரு.செ.இரவீந்திரன், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

சில கழிந்தன' (மனையறம் படுத்த காதை) என்று மூன்றே சொற்களில் காலத்தைத் தள்ளுவார். சிலபோது, இருவேறு நிகழ்ச்சிகளை அல்லது அவைதரும் உணர்ச்சிகளை ஒரே காதையில் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டி முடிப்பார். (எ. கா: அந்திமாலைச் சிறப்பு செய் காதை, இந்திரவிழவூரெடுத்த காதை) அதேபோல்; சில சமயம் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளை-தொடர்ந்த நிகழ்ச்சிகளாகவே இருப்பினும் சரி - தனித் தனிக் காதைகளில் கூறுவதுண்டு. (பல, இவ்வாறு). எனவே, ஒரு காதையில் ஒரே நிகழ்ச்சிதான் வரும் என்றோ, ஒரு காலத்திற்கு அல்லது ஓர் இடத்திற்கு உரியன மட்டுமே தனித்தனியாக ஒவ்வொரு காதையிலும் வருமென்றோ விதி கிடையாது; அந்த விதி அறிவியலுக்கு ஒருவேளை பொருந்திவரலாம்; காப்பியத்திற்குப் பொருந்துவதில்லை. கதைப்போக்கு, தேவை-முதலியவற்றை ஒட்டியே சொல்லும் முறையும் அமையும். சிலம்பின் இயல்பும் அதுவேயாம்,

கண்ணகி, மதுரையின் கீழ்த் திசை வாயிலில் கணவனோடு புகுந்து, மேற்றிசை வாயிலில் தமியளாய்ப் பெயர்கின்ற இடைப் போதில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளும் திருப்பங்களும் எண்ணிக்கையில் மிகுதி. அந்த நிகழ்ச்சிகளுக்கெனவே மதுரைக் காண்டம் விரிந்துநிற்கின்றது; காதைகள் பல அவற்றைத் தாங்கிநிற்கின்றன. நிகழ்ச்சிகளின் செறிவையும் சரிதைகளின் எண்ணிக்கையையும், திருப்பங்களின் விரைவையும் காணும் சிலருக்கு, அணுகுமுறை வேறுபாட்டால் மலைப்பு ஏற்படுவது இயல்பே. தமக்கேற்படும் மயக்கத்தைக் காப்பிய ஆசிரியர் மேலேற்றி விவரிக்க முனைவோர், தெளிவைக் காண்பதற்குப் பதில் வீணாகக் குழம்பிக்கொள்ளவே செய்கிறார்கள்.

இடர்ப்படும் பலரும் கொலைக்களக் காதையில் வரும் நிகழ்ச்சிக் குவியல்களையும், திருப்பங்களையும் கண்டுதான் மலைக்கிறார்கள். அக்காதையில் நுட்பமாகக் கணக்கிட்டால், கூற்றுக்களாகவும் நிகழ்ச்சிகளாகவும் வருவனமொத்தம், இருபத்தைந்து. அந்தக்காதை முடிந்த பின் ஆய்ச்சியர் குரவை வருகிறது. தனிக் காதையாக வருவதால் வேறொரு தனி நாளாகவுமிருக்குமோ என ஐயுறுகிறார்கள். அதாவது, கோவலன் இறந்த மறுநாள், ஆய்ச்சியர் குரவை நடப்பதாகவும், பின், கண்ணகி செய்தியறிவதாகவும் சொல்லுகிறார்கள். வழக்குரை காதை, அதற்கும் அடுத்த

நாள் என்றும் அத்திறத்தார் விவாதிக்கின்றனர். எனவே, அவர்கள் கருத்துப்படி, கொலையுண்டது ஒருநாள், கண்ணகி கண்டது மறுநாள்; வழக்குரைத்தது மூன்றும் நாள் - என்பதாகும். அதனாற்றான், அவ்வழியிலே சென்று,

> "வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேல்
> கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
> புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
> கண்டா ளவன்தன்னைக் காணாக் கடுந்துயரம்"
>
> (19: 35—38)

என்ற அடிகளைப், புதிர் என்றும், மயக்கமென்றும், பிழையென்றும், இடைச்செருகல் என்றும்கூடச் சொல்லத்துணிந்துவிடுகின்றனர்கள், அவர்கள். காலை - மாலை என்ற காலவரையறையை உணரமுடியாமல், காப்பியத்தை வரலாற்று நூலோ, நாட்குறிப்பேடோ என மனத்தில்கொண்டு மயங்கினால், காப்பிய நயம் கண்ணில்படாது. நிகழ்ச்சிக்குவியல்களைக் கண்டு மலைக்காமல், அவற்றின் போக்கையும், அமைந்துகிடக்கும் அமைப்பு முறையையும் வரிசைப்படுத்திக் கண்டால்தான் காப்பிய நயத்தைக் காணமுடியும்; தெளிவும் பிறக்கும்.

பொதுவாக, மதுரை நகரினுள் நடந்த நிகழ்ச்சிகளின் கூட்டு மொத்தத்தை முக்கூறுகளாகப் பிரித்துக்கொள்ளலாம். கோவலன் கொலையுண்டதுவரை நடப்பன ஒருகூறு. அச்செய்தியைக் கண்ணகி அறிவதும், அறிந்து அவனுடலைக்காண்பதுவும் வரை உள்ளன இரண்டாம் கூறு. கண்டபின் வழக்குரைத்தல், மூன்றும் கூறு. இந்த இறுதிக் கூற்றில், அழற்படுத்தலும்பிறவும கூட அடக்கப்பெறலாம். இந்த முப்பெருங்கூறுகளும் ஒரே நாளில் நடந்தன என்பதுதான் தீர்க்கப்படவேண்டிய சிக்கல்.

அடைக்கலக்காதையில், சென்ற ஞாயிற்றுச் செல் சுடர் அமயத்தில், மாதரி, கண்ணகியையும் கோவலனையும் அடைக்கலமாகக் கொள்ளுகிறாள். நகரினுள், காவற்சிற்றில்லில் (ஆயர் வீட்டிலல்லாமல், தனி வீட்டில்) இருத்தப்படும் அவ்விருவரையும் சாவக நோன்பிகள் எனக் (கவுந்தியடிகள் தொடர்பால்) கருதும் மாதரி, உண்கலங்கள் தந்து, 'நாள்வழிப் படூஉம் அடிசிலாக்கு தற்கு' (16:19-20) வசதிசெய்து தருகிறாள். வைகறைப் போதில்,

உணவு சமைத்து உண்ணப்படுகிறது. பொழுது புலருமுன் நடக்கும் நிகழ்ச்சி, இது. 'அமலை வெஞ்சோறு......... விடியல் வைகறையிடுவது, பற்றி அகநானூறும் (196) பேசுகிறது. கண்ணகியின் சமையலோடு மறுநாள் தொடங்குவதாகவே அடியார்க்குநல்லாரும் கருதுகிறார். அவ்வாறு உண்டு, சுட்டுரை பல பாராட்டிச் சிலம்பு கொண்டு மாறி வருவதாகச் சென்ற கோவலன், பீடிகை வீதியில் கொலையுண்டான்.

இதற்கிடையில், காலம் தொடர்ந்து சென்றாலும், இடமும், காட்சியும், நிகழ்ச்சிகளும் மாறி வருகின்றன. கண்ணகியைப் பிரிந்தபின், கோவலன், தாதெரு மன்றங் கழிந்து மாதர் வீதி மறுகிடைநடந்து பீடிகை வீதியடைகிறான். அங்கே தான், பொற்கொல்லனை அவன் சந்திக்கிறான். அதுவரை, நிகழ்ச்சி, கோவலனையே பின் தொடருகிறது. கோவலனையிருத்தி விட்டு உடனே அரசனைக் காணப் பொற்கொல்லன், அரண்மனை செல்கிறான். இப்போது, காட்சி, இடமாறுகிறது. மனைவியின் ஊடல் தணிக்கும் வேகத்திலிருந்து அரசனைக் காணுகிறான், பொற்கொல்லன். நிகழ்ச்சியும் காட்சியும் (தற்காலிகமாக, இடையில்) பொற்கொல்லன் பின்னால் செல்லுகின்றன. இடம் மாறினாலும், நிகழ்ச்சி மாறினாலும், காலம், தாவி மாறாமல், தொடர்ந்து நகரவே செய்கிறது. நிகழ்ச்சி உடன்தொடரப், பொற்கொல்லன் கோவலனிடம் வருகிறான். கோவலன் கொலை செய்யப்படுகிறான். காதை முடிகிறது. ஆனால் கதை முடியவில்லை; தொடருகிறது. அடுத்த காதையாகிய ஆய்ச்சியர்குரவையில், முந்திய காதை நடந்த ஓர் இடத்திற்கு நிகழ்ச்சி செல்லுகிறது; காலமும் பின்னால் செல்லுகிறது.

காதையின் மாற்றத்தைக் கண்டவுடன், முந்திய காதைக்கு அப்பால், அது முடிந்த பின்னரே, அடுத்த காதையின் தொடக்கம் அமைந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. அத்தகைய கட்டுப்பாடு எதுவும் காப்பியத்திற்குக் கிடையாது. காலம் பின்னோக்கிச் செல்வதாகக் காட்டுதல் நாடகப்போக்கின் இயல்பேயன்றிப் புதுவதன்று. ஒரே காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தையும், இயல்பில் வேறுபட்டிருப்பினும், ஒட்டு மொத்தமாக ஒன்றாக்கிக் கூறுவது நாட்குறிப்பேட்டின் இயல்பாக இருக்கலாம்; நாடகப் போக்கமைந்த காப்பியத்தின் இயல்பாக இருக்கமுடியாது. குறிப்பிட்ட ஒரு

நிகழ்ச்சியைத் தொடர்ந்து காட்டி, அதே காலத்தில் நடந்திருந்தாலும், பிறிதொன்றை அதன் பின்னர்க் காட்டுவது. சிலம்பில் வேறு இடங்களில்கூட வுண்டு. மணிமேகலையின் பிறப்புப்பற்றிக் கூறும் இடமும், கண்ணகி தன் கணவனின் பெற்றோரிடம் தன் துயர்மறைத்து வாயல் முறுவல் காட்டுவதாகக் கூறும் இடமும்› இந்த அமைப்பு முறையினை ஒட்டியனவாம்.

எனவே, கோவலன் கொலையுண்ட பின்னர்த் தான் ஆய்ச்சியர் குரவை நடந்திருக்க வேண்டும் என்று விவாதிக்க முற்படுவது பொருந்தாது முந்திய காதையில், கோவலனோடு சென்று நிகழ்ச்சிகள் முடிகின்றன. அதற்கு இடையே அமைப்பினால் சிறிது வேறுபட்ட ஆய்ச்சியர் குரவை கூறப்பட்டால் காப்பியத்தின் அமைப்பில் குழப்பமே ஏற்படும். எனவே, ஒரே நிகழ்ச்சிப்போக்கில் நோக்கங்கொண்டு செல்லும் கோவலன் செய்திகூறி முடித்தவுடன், காட்சி, மீண்டும் பழைய இடமாகிய ஆயர்சேரிக்கே வருகிறது. அங்கு, அப்பெண்களைச் சுற்றிச் சுழலும் நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றன. கண்ணகி கோவலனுக்கு உணவு அளிக்க இருவரும் அமர்ந்திருக்கும் தோற்றங் கண்டு, ஐயையும் மாதரியும் வியந்து புகழ்கின்ற நிகழ்ச்சியோடு, (16:44-53) ஆய்ச்சியர் காட்சி, கொலைக்களக் காதையில் நிறுத்தி வைக்கப்படுகிறது. அடுத்த காதையில், அந்த இடத்திலிருந்து நிகழ்ச்சி மீண்டும் துவக்கப்படுகிறது. அப்போது வைகறை முடிந்து விடியல் தொடங்கியிருக்கவேண்டும். கண்ணகி–கோவலன் காட்சியைக் கண்டு திளைத்த அவ்விடைச்சியர், அரண்மனையின் காலை முரசங்கேட்டனர். (அன்றுட நிகழ்ச்சி, அரண்மனையில் அப்போது தொடங்கியது எனலாம்). காலை முரசங் கேட்டவர்களுக்கு, அப்போதுதான் செய்முறை நினைவிற்கு வந்தது (கண்ணகி-கோவலன் வரவால், விருந்தோம்புதல் செய்யும் சுறுசுறுப்பில், முன்பு அது மறந்து விட்டிருக்கவும் செய்யலாம்). அண்மையிலிருந்த தனதுவீட்டினுள் நுழைந்து, அவசரம் அவசரமாகக் கடைகயிறும் மத்துங்கொண்டு மோர்கடையப் புறப்படுகிறாள், மாதரி; அங்கே, குடப்பால் உறையாமையும், உரிநறு வெண்ணெய் உருகாமையும் காணுகிறாள்; வருவதோர் தீங்குண்டென அஞ்சுகிறாள்; தன் மகளிடம் விரைகிறாள்.

இந்த வேளையில்தான், கட்டுரை பல பாராட்டிய கோவலன், பனிநீர் கரப்பக் கண்ணகியிடமிருந்து விடைபெற்று

வெளியே சென்றிருக்க வேண்டும். அவன் வெளியேறிய போது, இமிலேறு எதிரும் ஒரு தீச்சகுனம் தனிப்பட அவனுக்கும் ஏற்பட்டது. இங்கே, பால் உறையாத்தீச்சகுனங் கண்ட மாதிரி பதறி 'அமைதிக்காப்பு'ச் செய்துகொள்ள முனைகிறாள். தீச்சகுனம் காட்டுவது, குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்த பின்தான் இருக்கவேண்டுமென்பதில்லை. நடப்பதற்கு முன்பே' அது காட்டப்படலாம்; அது தான் பெரும்பான்மைகூட. எனவே தான், பாலுறையாமை கண்டவுடன் 'வருவதோர் தீங்குண்டெென' (17:5, கருப்பம்) மாதரி கருதுவதாக ஆசிரியர் கூறுகிறார். எனவே' அடைக்கலப் பொருளுக்கோ, அடைக்கலம் பெற்ற மாதரிக்கோ தொடர்புடைய பிறருக்கோ—ஏதோ ஒருவகையில் தீங்கு வரப் போகிறது என்பதனைக் காட்டுவனவாகவே 'வருவதோர் தீங்கு உண்டென' என்ற சொற்களைக் கருதலாம். இந்தத் தீங்கை உணர்த்தத் தொடங்கிய நேரம்—உறையாமை தெரிந்த நேரம் வைகறையின் இறுதி, இல்லையேல் விடியலின் தொடக்கம் எனலாம்.

பாலுறையாமை கண்ட நேரத்தில், கோவலன் வெளியேறிச் சென்றவுடன், கண்ணகி தனியே இருந்தாள். மாதரி, மகளை அழைத்துச் சேதி கூறி 'அமைதிக் காப்பின்' பொருட்டுக் குரவைக் கூத்தாட ஏற்பாடு பண்ண ஏவினாள். ஐயை தன்னொத்த பெண்கள் பலரைத் திரட்ட, ஆய்ச்சியர் குரவை தொடங்கியது அந்தக் கூத்தினைத் தனியே இருந்த கண்ணகியும் கண்டாள் என்றே காதையின் கருப்பத்தில் 'மண்ணின் மாதர்க்கணியாகிய கண்ணகியும்தான் காண' என்று மாதரியின் வாயிலாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆய்ச்சியர் ஆடிய குரவைக் கூத்துக் குறுகிய ஒன்றன்று. ஏழுபெண்கள் அணிவகுத்து எழுவகைப் பண்களில் பாட்டிசைத்துக் கைகோத்துப் பலவகை ஆடல்களை ஆடியதாக ஆசிரியர் காட்டுகிறார். எனவே, அதுமுடிய நீண்ட நேரம் ஆகியிருக்கவேண்டும் என்பதில் ஐயமிருக்க முடியாது. இங்கு, ஆடிப்பாடும் ஆய்ச்சியர் குரவை நடந்துகொண்டிருந்த இடை நேரத்தில், அங்கே பீடிகைத் தெருவில் கோவலன் கொலையுண்ணப்பட்டிருக்கிறான்.

பீடிகைத் தெருவில் கோவலனைப் பொற்கொல்லன் சந்தித்தது, பின்னர் அக்கொல்லன் ஊடல் தீர்க்கும் வேசத்திலிருந்த மன்னவனைக் கண்டது, பின்னர்த் திரும்பிவந்தது— முதலிய

செயல்கள் விரைந்த செயல்களேயன்றிக் கால நீட்டிப்பையுடையன அல்ல. அரண்மனையில் ஆடல் பாடல் செய்தியைக்கூடக் கூறாமல், அதிலிருந்து வெளியேறிக்கொண்டிருந்த மன்னவனையே ஆசிரியர் காட்டுகிறார், என்பதனை மறந்துவிடக்கூடாது. தவிரவும் மன்னர் பின்னோர் வாழும் பீடிகைத் தெரு, அரசனின் அரண்மனையை அடுத்தே இருக்குமல்லவா! அவசரமாகப்போய்க் கொண்டிருந்த மன்னனிடம் அவசரமாக ஆணை பெற்று விரைகிறான், பொற்கொல்லன். ஊர்காப்பாளருக்குத் திருடரியல்பு கூறியவுடன், கொலைநடந்து முடிகிறது. இது நடந்த இடமே மக்கள் அதிகம் நடமாடும் பீடிகைத் தெரு. நடந்த செய்தியோ, கொலைச் செய்தி! கொல்லப்பட்டவனோ, வேற்றூர்க்காரன்! அந்த ஊருக்கு அவனும் புதியவன். அத்தகைய செய்தியும் மிகவும் புதுமையானது! அந்தச் செய்தி, அந்தத் தெரு முழுக்க ஊரரவமாகக் காட்டுத் தீப் போல ஒரே வினாடியில் பரவிவிடுவதில் வியப்பென்ன? அதுவும், பெண்களிடையே...! அந்தச் செய்தி தெரிந்த சில பெண்களைத்தான், குரவை முடிந்து சென்ற ஆய்ச்சியர் துறையில் சந்தித்தனர்.

குரவை முடிந்தவுடன்தான், அதன் மூடிவர்கத் துறையாடி நெடுமாலடியேத்த அந்த ஆய்ச்சியர்கள் சென்றார்கள். சென்றஇடத்தில் பெண்களிடையே அந்தச்செய்தி-அவலச்செய்தி, பேசப்பட்டது. செய்திகேட்ட ஐயை ஓடிவந்தாள் கண்ணகியிடம் செய்தி சொல்ல. ஆனால் நேரடியாகச் செய்தியை எப்படித் துணிந்து தெரிவிப்பது? தயங்கினாள். ஆனால் இரக்கத்தோடும நடுக்கத்தோடும், அவள் கண்ணகியைப் பார்க்கும் பார்வையும், காட்டும் மெய்ப்பாட்டுணர்வுகளும் ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டது-என்பதனை யுணர்த்துகின்றன, குறிப்பால். அதனால் அந்த இடத்தில் ஆசிரியர்,

> "சொல்லாடாள் சொல்லாடா நின்றாளங் நங்கைக்குச்
> சொல்லாடுஞ் சொல்லாடுந் தான்" (18: 9-10)

என்று அழகாக, அந்தப் பெண்ணின் மெய்ப்பாட்டையும், அவலத்தின் நிலைமையையும் விளக்குகிறார். ஐயையின் மெய்ப்பாடுகண்டு தனக்கு ஏதோ நடந்துவிட்டதுஎன்பதைக்கண்ணகி உணர்கிறாள். ஏற்கெனவே, முன்பு கணவனைப்பற்றிய தீக்கனவு கண்டிருப்பவளாயிற்றே அவள்! தவிரவும் கணவன் பிரியும்போதே இரங்கிய

வள் அல்லவா, அவள்! வேற்றூரில் எதுவும் நடந்துவிடுமோ என்று அஞ்சிக் கொண்டிருப்பவள் அவள் ஆதலால் ஐயையின் மெய்ப்பாட்டுணர்வு கண்டவுடன், 'காதலற்காண்கிலேன் கலங்கி நோய்கைம்மிகும்' என்கிருள். (18: 12)

இந்த இடத்தில், கணவனை ஒருநாள் முழுதும் பிரிந்து அவனைக் காணுமல், மறுநாள் வருந்தினுள்-என்றவாறு சிலர் எண்ணத் தொடங்கி விடுகிருர்கள். ஒருநாள் பிரிவுதான், பிரிவு' சிலகண நேரம் பிரிவெல்லாம் பிரிவில்லையா? தம்மனைக்கருகே யுள்ள ஓர் இடத்தின் பொருட்டுக் குறுகிய நேரத்துப் பிரிந்தாலும் அதுவும் பிரிவுதான் என்ற கருத்தில், தொல்காப்பியரும் "அய லோராயினும் அகற்சிமேற்றே" (அகத்.38) என்று பிரிவின் நுட்பங் காட்டுவதை நாம் மறந்துவிடக்கூடாது. விளக்கற்றம் பார்க்கும் இருள்போல் விரைந்து வாட்டக் கூடியதல்லவோ அது. மாதவி யின் பொருட்டுக் கண்ணகியைப் பிரிந்தபோதெல்லாம் துன்பங் காணுத கோவலனே, பின்னர் மீண்டும் கூடியபின், சிலம்புவிற்று வரும் சிறிதுநேரப் பிரிவைக் கூடத் தாங்காமல் "வருபனிகரந்த கண்ணணுகித்" (16 · 97) துன்புறுகிருன். உலகமறிந்த அவனே அப்படியென்ருல் புகாரைவிட்டு நீங்கியவுடனே 'மதுரை மூதூர் யாதென' (10:41) வினவிய பேதையாகிய கண்ணகி, திருந்தித் திரும்பிவந்த கணவனது சிலகணப் பிரிவையும்-அதுவும், துன்பம் நேருமோ என அஞ்சிக் கொண்டிருக்கும் நேரத்தில்-எவ்வாறு தாங்கியிருப்பாள்?அதனுற்ருன், 'காதலற் காணுமல் கலங்கி நோய் கைம்மிகும்' எனத் துன்பமாலையில் கூறப்படுகிறது.

அவ்வாறு வருந்தும்போது, 'நண்பகற் போதே நடுக்கு நோய் கைம்மிகும்' (18:16) என்று கூறுகிருள். 'நண்பகற் போதே' என்பதனை விளக்கும் அடியார்க்கு-நல்லார் "கோவலன் போனபோதே தன்னெஞ்சு கலங்குதலால் நண்பகற் போதே யென்ருள்-" என்று குறிப்பது இங்கு நினைவு கூரத்தக்கது. எனவே அவளுடைய மூன்னுள் கனவு, பெண்மைக்கே யுரிய பேதைமை, அடிமனத்தில் பதிந்து விட்ட ஓர் அச்சம், வெளியூர்ச் சூழலில் ஏற்பட்ட புதுமை-முதலியபலவற்றின் காரணமாக அவள் தொடக்கத்திலிருந்தே பிரிவினுல் வருந்திக் கொண்டிருந்தாள் என்பது தெளிவாகும். ஐயையைக் கண்டவுடன் அந்த வருத்தம் மேலோங்கி வெளிப்படையாகிறது.

முதலிற் சொல்லாடா நின்ற ஐயை, பின்னர்த் துணிந்து ஒருவகையாகச் செய்தியைத் தெரிவிக்கிறாள். செய்தியை அறிந்தவுடன், கண்ணகி, பொங்கி யெழுந்தாள்; அழுதாள்; அடுக்குமோ என அரற்றிருள். அந்த நேரம், 'நண்பகற் பொழுது' என்பதில் ஐயமிருக்க முடியாது. அழுது புலம்பும் கண்ணகி அதே நேரத்தில், 'காய்கதிர்ச் செல்வனைப்' பார்த்துக் 'கள்வனோ என் கணவன்' (18:50–51) என அரற்றுவதாக ஆசிரியர் காட்டுகிறார். எனவே, அது, கதிர் காயும் நண்பகலாகும். அந்த நேரத்தில்தான் கண்ணகி செய்தியறிந்து அழுகிறாள். அதற்குச் சிறிது முன்னர்–ஊரரவம் பரவியிருக்க வேண்டும். அதற்கும் சிறிது முன், கோவலன் கொலையுண்டிருக்கிறான். வைகறையிறுதியில் தன்னை விட்டுப் பிரிந்த கணவனின் சாவுச் செய்தி நண்பகலில் கண்ணகிக்குத் தெரிந்து பொங்கி யெழுகிறாள். துன்பமாலை என்ற காதை அவ்வளவில் முடிகிறது. இடையில் ஆய்ச்சியர் குரவை அவலச் சுவை நாடகத்தினிடையே, சுவைமாற்றத்திற்காகவும், முன்னும் பின்னுள்ள அவலத்தை மிகுவிப் பதற்காகவும் அமைக்கப் பெற்ற ஒரு காதை. இத்தகைய அமைப்பு, காப்பியங்களின் பொதுப் போக்கு. நிற்க.

துன்பமாலையில், செய்தியறிந்து பொங்கி யெழும் கண்ணகி, ஊர்சூழ்வரியில் ஊரெல்லாம் அரற்றிப் புலம்பிச் செல்கிறாள். நிகழ்ச்சியும் பாத்திரத்தோடு தொடர்ந்து செல்லும் அமைப்பு முறையில் இங்கு, இளங்கோவடிகள் அவல உணர்ச்சியின் தெளிவுக்காக இரண்டுகாதைகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பையும் காட்டுகிறார். துன்பமாலையில்,

> "கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
> ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்" (18.52-53)

என்று கூறும் ஆசிரியர், அதனை அங்கேயே முடிக்காமல், அடுத்த காதையில் (ஊர் சூழ் வரி) நிகழ்ச்சியளவில் மட்டுமல்லாமல் வாக்கிய அமைப்பிலும்,

> " என்றனன் வெய்யோன், இலங்கீர் வளைத்தோளி
> நின்றிலள்......... " (19:1–2)

என்று தொடங்கித் தொடர்பு காட்டி முடிக்கிறார். இளங்கோவடிகள் அமைத்துள்ள இந்த அமைப்பு முறை-ஒருநிகழ்ச்சி

ஒருகாதை அல்லது ஒரு காதை-ஒருநிகழ்ச்சி-என்று எண்ணுவது தவறு, என்பதைச் சுட்டிக் காட்டுவதுபோல் அமைந்துள்ளது. துன்பமாலையின் நிகழ்ச்சி, மாருமல் அப்படியே ஊர் சூழ் வரியிலும் தொடர்கிறது.

ஆற்றுவார் தேற்றுவாரிலாது, கணவனையிழந்து, கணவன் கள்வன் என்ற பொய்யான பழி சுமந்து ஒரு சிறிதும் பழக்கமில்லாத அந்த ஊரின் தெருக்களிலே, தமியளாய்க், கையிலே தனிச் சிலம்பொன்றேந்தித், துன்பமே வடிவினளாக அரற்றிச்செல்கிருள். கண்ணகி. முன்பின் வழிதெரியாத அவள், தெருக்கள் பலவற்றிலே புலம்பிச் செல்லுகிருள். 'வளையாத செங்கோல் வளைந்ததே' என ஊரார் வருந்துகிருர்கள். இறுதியில், கம்பலைமாக்கள் சிலர், அவளுடைய கணவன் கொலைப்பட்ட இடத்தை அவளுக்குக் காட்டுகின்றனர். அவள், வீழ்ந்து கிடக்கும் தன்கணவனைக் காணுகிருள். அவ்வாறு காணும் நேரம் ஞாயிறுபடும் நேரம் என்பதனைத் தெளிவாக உணர்த்துகிருர், ஆசிரியர்.

"மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற்
செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
புல்லென் மருண்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
ஒல்லென் ஞெலிபடைத்த தூர்', (19;31-34)

சூரியன் மறைகின்ற நேரத்தில், பகற்பொழுதும் மாலைப் பொழுதும் சந்தித்து மயங்கும் நேரத்தில், அவள் அவனுடலைக் காணுகிருள். அவ்வாறு காணுகின்ற நேரத்தை ஆசிரியர், தம் கூற்ருகத் தெளிவுபடக் கூறுகிருர்.

காணுகின்ற நேரத்தைக்கூறி, அதன் தன்மைகூறி, நமது உள்ளத்தை அதனேடு ஒன்றும்படி ஆக்கும் ஆசிரியர், தொடர்ந்து, காணுகின்ற காட்சியையும், அந்தக் காட்சியின் உள்ளே கிடக்கும் அவலப்பிழம்பையும் காட்டமுற்படுகிருர்; மலர் முகம் பொலியப் பூமணம் சிறக்கும் ஒரு பெண், இறந்த தன் கணவனின் உடலைக்கண்டு, பூவழிய மங்கலமிழக்கும் அவலத்தை நம் மனக்கண்முன் நிறுத்துகிருர். காலையிலே அவளோடு அவன் இருக்கிருன்; அவளைத் தழுவுகிருன்; அவள் மகிழ்கிருள். அவன் சூடியிருந்த பூவைத் தான் எடுத்துத் தன் தலையில் சூடிக் கொள்ளுகிருள். அதனைக்கண்டு அவன் மகிழ, அவள் மகிழ்கிருள்.

அன்று காலையிலே வைகறையிலே இந்த மகிழ்ச்சி! ஆனால், மாலையில்......? அவள் இருக்கிறாள். ஆனால் அவன், அவளுக இல்லை. குருதி சோர வீழ்ந்து கிடக்கிறான். அவனைத்தழுவி. அவளது மகிழ்ச்சியைக் காலையில் கண்டு பூரித்த அவன், இப்போது, வாடிய அவ்ளைக் காணமுடியாது. வீழ்ந்து, குருதியில் கிடக்கிறான்! அந்த முரண்பட்ட நிகழ்ச்சி காட்டிப், பெண்மை படும் துயரங் காட்டி, நம்மையும் அந்தஅவலத்தில் ஒன்றச்செய்கிறார் ஆசிரியர்.

''வண்டா ரிருங்குஞ்சி மாலைதன் வார்குழன்மேல்
கொண்டா டழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர, மாலைவாய்க்
கண்டா ளவன்தன்னைக் காணக் கடுந்துயரம்''

(19:35-38)

காலைக்கும் மாலைக்குமிடையே தான் எத்தனை முரண்! இரண்டின் முரண்பாட்டிலேதான் எத்தனை அவலம்! மாலையிலே இழவு காட்டி, அந்த இழப்பின் ஆழம் காட்ட அதற்கு முந்திய மகிழ்ச்சியைச் சேர்ந்து காட்டுவதால், அவலம் எவ்வளவு பெருகுகிறது! பூச்சூடிய நிகழ்ச்சியினை, நடந்த போதே கூறியிருக்கலாம். ஆனால், அதனை அங்கே கூறாமல், இங்கே கூறுவதன் நோக்கம், உணர்ச்சி முரண்பாட்டைக் காட்டி அவலச்சுவையை நுண்மையாகப் பெருக்குவதற்கேயாம். ஆசிரியர் தம் கூற்றின் வழியாகவே அதில் நம்மை ஈடுபடுத்திப் பங்குபெறச் செய்கிறார். இதனால் அவலச்சுவை கூடுகிறதேயன்றிக் குறையவில்லை. இந்த நான்கு வரிகளுக்கு முந்திய நான்கு வரிகள் மூலம் எவ்வாறு ஆசிரியர், கண்ணகி, வீழ்ந்து கிடக்கும் தன் கணவனைக் காணும் நேரத்தைக் கூறி ஒரு பின்னணியைக் காட்டுகிறாரோ, அவ்வாறே இங்கும் தமது கூற்றின் வழியாகவே இருவேறு நிகழ்ச்சிகளையும், அவற்றின், முரண்பாட்டையும் காட்டி அவலத்தை உணரச் செய்கிறார். 'கண்டாள்-அவன், தன்னைக்காணக் கடுந்துயரம்' என்று படர்க்கையிலேயே கூறப்படுவது; இது. ஆசிரியர்கூற்றே என்பதனையுணர்த்தும். அடுத்தவரியிலேதான் கண்ணகி, தனது துயரினைத் தனது புலம்பலின் வாயிலாக 'என்னுறு துயர்கண்டும், இடருறும் இவள்', என்று தேற்ற மாட்டீரோ என்று பலவாறு சொல்லி அழுவதாக ஆசிரியர் அமைக்கிறார்.

கணவன் வீழ்ந்து கிடக்கும் நிலைகண்டு பலம்பிய அவளை 'இருந்தைக்க' எனப்போனான் கோவலன் கணவன் உயிர்தேடி

அவளது உயிர் பிரிந்துசெல்லவில்லை; காரணம் இருந்தது. தனது கணவனது கொலைக்குக் கூறப்பட்ட பழியை அவள் துடைத்தாக வேண்டும். அதனைத் துடைக்க அவளன்றி வேறு யாரிருக்கிருர்கள் அங்கே? எனவே அதனை நினைவு கூறுகிருள். கணவனையிழந்த நேரத்திலேயே புதிய கண்ணகியாக அல்லவா அவள் உருப்பெறுகிருள்! எனவே வாளாகிடக்காமல். அழுது புலம்பினுலும் மயங்கிச் சோர்ந்து கிடக்காமல், சூட்டோடு சூடாக வழக்காட எழுகிருள்; பொங்கி எழுகிருள். கணவன் மேல் விழுந்த மாசு துடைக்கத் தான் வழக்காடுவதாக முன்பு கண்ட கனவையும் நினைவு கூர்கிருள். அந்தக் கனவு புகார்க் காண்டத்தில் கூறப்படுகிறது:

"கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோடு
ஊர்க்குற்ற தீங்குமொன் றுண்டால்" (9: 49–51)

என்று கண்ணகி, தன் தோழியிடம் கூறுகிருள். அந்தக் கனவையே இங்கு ஊர் சூழ் வரியினிறுதியில் நினைவுபடுத்திக்கொள்வதாக ஆசிரியர் காட்டுகிருர்.

சினம் பொங்குகிறது. அந்தக் 'காய் சினம்தணிந்தன்றிக் கணவனைக் கைகூடமாட்டேன்' என்று கூறி எழுகிருள். பொங்கியெழும் இந்த நிகழ்ச்சி, கணவனுடலைக் கண்டு புலம்பியவுடன் நடக்கும் நிகழ்ச்சியேயன்றி, இடையே மயங்கிக்கிடந்தாள்–அந்தப் பீடிகை வீதியிலேயே பொழுது போக்கினுள்-என்று கூறுவது பொருந்தாது. 'விரைவு' தொடர்கிறது. தேங்கவில்லை. நிகழ்ச்சியுடனும், காட்சியுடனும் கண்ணகியைப் பின் தொடர்ந்து காலமும் செல்கிறது. அவளது பொங்கித் தவித்துப் புறப்படும் நிலையை மிக அழகாகக் கூறுகிருர், ஆசிரியர்.

"காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் தனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்ருள்
என்ரு வெழுந்தா ளிடருற்ற தீக்கனு
நின்ருள் நினைந்தாள் நெடுங்கயற்க ணீர்சோர
நின்ருள் நினைந்தாள் நெடுங்கயற்க ணீர்துடையாச்
சென்ருள் அரசன் செழுங்கோயில் வாயின்முன்"
(19: 70—75)

குமும்பித் தத்தளிக்கும் நிலையையும், கொண்ட கருத்தில் காட்டும் வேகத்தையும், இந்த வரிகள் சொற்கோவையளவினும் சரி, பொருட்கிடக்கையிலும் சரி, தெளிவாகக் காட்டுகின்றன.

'என்ருள்-நின்ருள்' என்று அடுக்கிவருவதெல்லாம், அவலத்தினுல் தடுமாறுவதையே காட்டுகின்றன. இரண்டாவது 'வரும் என்ருள்' (என்றவள்) என்பது, இறுதியில் வரும் 'சென்ருள்' என்பதற்கு எழுவாயாகும். முதலில் வரும் 'என்ருள்' என்பது பயனிலையாக வரும் வினைமுற்றுத்தான்! ஆனுல் நிகழ்ச்சியோ காட்சியோ முற்றவில்லை - காலமும் தாவவில்லை - என்பதனைக் காட்டவே, அடுத்த வரியில் தொடர்ந்து 'என்ருள்' என்ற சொல் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. முன்பு, துன்பமாலையையும் ஊர்சூழ்வரியையும் தொடர்புபடுத்தி முறையே, அவற்றின் இறுதியிலும் தொடக்கத்திலும், 'ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்றது ஒரு குரல்' என்றும் 'என்றனன் வெய்யோன்' என்றும் கூறித் தொடர்பினை வலியுறுத்துவதுபோல், இங்கும் தொடர்பு காட்டவே செய்கிருர். எனவே வினைமுற்று நிகழ்ச்சி அல்லது காலத்தின் முடிவாகாது. இங்கே பலவினை முற்றுக்களை கையாளுவது, அவலத்தின் கொடுமையையும், தடுமாற்றத்திற்கிடையே அவள் பொங்கி எழுந்து செல்லும் துடிப்பையும், காட்டுவதற்குக் கையாளும் ஓர் உத்தியேயன்றி வேறில்லை. இவ்வாறு தெளிவாகக் கிடக்கும் தொடர் நிகழ்ச்சியைப் புரிந்து கொள்ளாமல், அன்றிரவு அங்கேயே இருந்துவிட்டு மறுநாள் காலை அரசவை செல்வதாக, இல்லாத ஒன்றைக் கற்பித்துச் சொல்வது, இலக்கியத்தை அணுகத் தெரியாத நிலையேயன்றி வேறில்லை. 'மாலை' என்று கூறுவதையும், அந்த நேரத்தில் வழக்குரைத்தல் நடந்தது-என்பதையும் கண்டு அவற்றின் இயல்பு தெரியாமல், அத்திறத்தார் மயங்கிக் கூறுகின்றனர்.

'மாலை'-என்றவுடன் தற்கால நினைப்பு வந்து, 'சாயுங்-காலம்' என்று பொருள் கொள்வதால் அந்தமயக்கம் அவர்களுக்கு ஏற்படுகிறது. சிலம்பு தோன்றிய காலத்தின் மரபினைப் பார்த்தால் அந்த மயக்கம் தீரும். முன்னைய இலக்கணங்களும் பிறவும் ஒரு நாளை ஆறுசிறு பொழுதுகளாகப் பகுக்கும். இன்றைய மணிக்கணக்கின்படி ஒரு சிறு பொழுதுக்கு நான்கு மணி நேரமாம். அந்த முறைப்படிப் பார்த்தால், மாலைப்பொழுது, இரவு 6 மணிமுதல் 10 மணிமுடிய, ஆகும். அதாவது, ஞாயிறுபடுகின்ற

நேரத்திலிருந்து தொடங்கிப்பின் நான்கு மணி நேரம் மாலைப் பொழுதே ஆகும். சிலம்பே இதனை உணர்த்தவும் செய்கிறது.

> ''மல்லன்மா ஞால மிருளூட்டி மாமலைமேற்
> செவ்வென் கதிர்சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்பப்
> புல்லென் மருண்மாலை......'' (19:31–33)

பிற இலக்கியங்களும் இவ்வாறே கூறும். காட்டாக;

''மதிமாலை மாவிருள் கால்சிப்ப''-(பரிபாடல் 10:112)

''மாசில் வீணையும் மாலை மதியமும்'' (அப்பர் தேவாரம்)

என்று, சிலம்பிற்கு முன்னும் பின்னுமான இலக்கியங்கள் பேசும். இந்த மாலைக்குப் பின்னர் யாமம் வருகிறது. மாலைக்கு முன்னர், எற்பாடு, அதற்குமுன் நண்பகல், அதற்குமுன் விடியல், அதற்கு முன் வைகறை. எனவே, எற்பாடு முடிந்து மாலை தொடங்கும் நேரத்தில்-புல்லென் மருண்மாலையில், குருதி சோரக் கிடக்கும் கோவலனைக் கண்ட கண்ணகி, அதே மாலையின் முற்பகுதியில் வழக்குரைத்தாள் என்று கூறலாம். மாலையின் பிற்பகுதியில் மதுரையை அழற்படுத்தினாள்-என்பதும் தெளிவு.

இனி, அரசன் முன்னிலையில், கண்ணகி வழக்குரைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது காலையா, மாலையா-என்று ஒரு சிக்கலை எழுப்பிக் கொண்டு குழப்புவோருமுண்டு. அவர்களது தெளிவின்மைக்குக் காரணம், காலையிலே அவை கூட்டிக்குறை தீர்ப்பதுவும் மாலையிலே ஆடல்பாடல் களிப்பதுவும் அரசர் வழக்கம் என்ற பிற்காலச் சான்றையே உறுதியாகக் கொண்டு வாதாடுவர். சங்க காலத்திலும் அதனையடுத்த காலத்திலும் அப்படியொரு கால வரையறை இருந்தது என்பதற்குச் சான்று காட்ட முடியாது. பொதுமக்கள் குறைகேட்டு எந்நேரம் வந்தாலும், அடையா நெடுங்கதவினனாய் மனங்கோணாமல், முறைசெய்வதே அக்கால மன்னரது பெருவழக்கு. எளிமைபறிபோன பிற்காலத்திலே வேண்டுமானால், அரசன், தன் வசதிக்கென ஒவ்வொன்றிற்கும் காலஅட்டவணை போட்டுச் செயல்பட்டிருக்கக் கூடும்.

முற்காலத்தே, காலையிலும் ஆடல்பாடல் நிகழ்ச்சிகள் வேத்தவையாகிய அரண்மனையில்நடந்திருக்கின்றன.பொருநர்கள், கரிகாற்பெரு வளத்தானை விடியற்காலையில் கண்டு அவனால் பேணப்பட்டுத் தம் பாடல் வல்லமையைக் காட்டியதாக

முடத்தாமக்கண்ணியார் காட்டுகிறார்.

"இருசிர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்
வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்
ஒன்றியான் பெட்பி அளவையி ஞென்றிய
கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி"
(பொருநர்: 71-74)

இதே போல், புறநானூற்றில் கடும் பகற்போதில் பாணரைவரவேற்கும் மன்னவன் செய்தியும் பேசப்படுகிறது.

"ஓம்பி யுடுத்த வுயவற் பாண
....
ஒள்ளெரி விரையு முருகெழு பசும்பூட்
கிள்ளி வளவற் படர்குவை யாயின்
நெடுங்கடை நிற்றலு மிலையே கடும்பகல்
தேர்வீ சிருக்கை யார நோக்கி
நீயவற் கண்ட பின்றை..."
(புறம்: 69)

சிலம்பிலும்கூட அதனைக் காணப் பொற்கொல்லன் சென்ற போது; அங்கு அரண்மனையில் மந்திரச் சுற்றம் உடனிருக்கத் தேவியும் அருகிருக்கக் கூடன் மகளிர் ஆடற்றோற்றமும், பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும் நடைபெற–அவை அரசனுள்ளங் கவர்ந்தன எனக்கொண்டு தேவி ஊடல் உள்ளம் உள்கரந்து செல்ல, அதைத் தணிக்க அரசன் மந்திரச் சுற்றம் நீங்கிக் கோப் பெருந்தேவியின் கோயில் நோக்கி விரைகிறான்; அங்கேதான் பொற்கொல்லன் சந்திக்கிறான். (16:131–140) இது நடைபெற்ற நேரம, கோவலன் பீடிகைத் தெருவிலே காத்திருக்கும் விடியல் நேரமேயாகும். எனவே, காலைப்போதிலேயும் களியாட்டம் நடந்தது என்பதற்குச் சிலம்பே சான்றுகிறது. எனவே, மாலையில்தான் ஆடல்பாடல் நடக்கவேண்டும் என்றோ, அதேபோல் அவைகூடிக் குறைதீர்ப்பது காலையிலே நடக்கவேண்டும் என்றோ வரையறை எதுவும இருந்ததில்லை என்பது புலனாகும்.

பாண்டியனது அரண்மனைக்குக் கண்ணகி மாலை நேரத்தில் வழக்குரைக்க வருகிறாள். புல்லென் மருண் மாலையில்கோவலனுடலைக் கண்டபின் அழுது புலம்பிய கண்ணகி நீர்வார் கண்ணினளாக அரண்மனை நோக்கிச் செல்கிறாள். இடையில், அரண்

மனையில் கோப்பெருந்தேவி அரசனிடம் தான் கண்ட கனவைச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். முன்பு, பொற்கொல்லன் அரண்மனை நோக்கிச் சென்றபோது, தேவையின் பொருட்டு, இடையே தேவியின் கனவுச் செய்தியும் கூறப்படுகிறது. கண்ணகி அரண்மனை நோக்கி வந்ததைச் 'சென்றா ளரசன்செழுங் கோயில் வாயின் முன்' என்று ஊர்சூழ்வரியில் கூறிமுடிக்கும் ஆசிரியர், அடுத்த காதையாகிய வழக்குரை காதையின் தொடக்கத்தில், கனவு கூறும் செய்தியைக் கூறுகிறார். வேறுவேறு நிகழ்ச்சி, இடம், காட்சி எனினும் காலம் ஒன்றே—என்பதனைக் காட்டுவது போல், காதையின் தொடக்கத்தில் 'ஆங்கு' என்று கூறுகிறார். அதன் பின்னர், அரசியின் கனவுச் செய்தி கூறப்படுகிறது. அது முடிந்த பின், கண்ணகி அரண்மனையுள் நுழைகிறாள்.

அரண்மனையில் அரசி, அரசனிடம் கனவு சொல்லும் நிகழ்ச்சியைக் காலையிலேயே நடந்திருக்க வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். கண்ட மாத்திரத்திலேயே கனவைச் சொல்லிவிடுவார்கள்—அதுவே வழக்கம் என மயங்கும் மயக்கமே அதற்குக் காரணம். ஆனால், உண்மை அதுவன்று கனவியல்பு, கண்டவுடன் முதலில் அடிமனத்திலே சென்று பதிந்து, அதன் தொடர்பான நிகழ்ச்சி அல்லது பொருள் தென்படும்போதோ—ஒய்வாக இருக்கும்போதோ மீண்டும் நினைவிற்கு வருவதாகும். இதனடிப்படையில் முந்திய இரவினிறுதியில் கண்ட கனவு அடிமனத்தில் பதிந்து கிடக்கக், காலையில் ஆடல் பாடலாலும் ஊடலாலும் நினைவிற்கு வாராமல், ஒய்வாக இருந்த மாலையில், கண்ணகியின அவலங்குறித் தெழுந்த ஊரரவத்தாலும் பிறவற்றாலும் அக்கனவு நினைவிற்கு வந்தது எனலாம். அக்கனவை அமளிமிசையிருந்த கணவனிடம் கூறுகிறாள். கனவு காண்பதும் வெளியே சொல்லுவதும் வேறுவேறு நேரங்களில் நடந்தன என்பதற்குச் சிலம்பில்வரும் மற்றைய இருகனவுச் செய்திகளும் கூடச்சான்றாகின்றன.

முதற்கனவைக் காணும் கண்ணகி, தான் கண்ட கனவை மாலையில் தான் கூறுகிறாள். அதுவும் அவளுடைய தோழிவந்து, கணவனது பிரிவுச் செய்தியைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் தான், அடிமனத்தே அதுகாறும் படிந்துகிடந்த கனவு நினைவுக்கு வர அதனைக் கூறுகிறாள். கனவை வெளியே சொல்லத் தொடங்

கியவுடன் அதற்குரிய பலனும் வெளிப்படையாக நடைபெறத் தொடங்கி விடுகிறது. தோழி வெளியே போன சிறிது நேரத்தி லெல்லாம், கானல்வரியினால் மாதவியைப் பிரிந்த கோவலன், கண்ணகியை நாடி வருகிறான் விடியுமுன் இருவரும் புகாரை விட்டகலுகின்றனர். இரண்டாவது கனவைக் காண்பவன், கோவலன். அவனும் கண்டவுடன் கனவைக்கூறி விடவில்லை. பகலிலெல்லாம் மதுரை நகர வீதிகளைக் கண்டு விட்டுத் திரும்பிப் புறஞ்சேரிக்கு வர, அங்கு மாடல மறையவன் கோவலனைக் கண்டு அவனைப் புகழ்ந்து, துன்பத்திற்கு வருத்தம் தெரிவிக்கும் போது தான கோவலனுக்கு முன்னாள் இரவிறுதியில் கண்ட கனவு நினைவிற்கு வரக்கூறுகிறான். இக்கூற்றும் மாலைப் போதுதான். இங்கும் கனவின் பலன் வேகமாகச் செயல்படத்தொடங்குகிறது. ஞாயிறுபடுமுன் புறஞ்சேரி விட்டகலவேண்டுகிறார், கவுந்தியடிகள்; அடைக்கலமும் படுத்துகிறார். கோவலன் கண்ணகியுடன் உள்நகர் செல்கிறான். மூன்றாவது கனவைக்கண்டவள் கோப் பெருந்தேவி ஆடல் பாடல் போன்றவற்றாலும் பிறவற்றாலும் காலையிலே கனவினைச் சொல்லவில்லை; நினைவிற்கு வர வாய்ப் பில்லையாதலால். மாலையில், கோவலனையிழந்த கண்ணகி துடித்து நிற்க, ஊரரவம் பெருக—அறை அடியுள்மனத்தை அரிக்க ஓய்வாக இருக்கையில் அரசிக்குக் கனவு நினைவிற்கு வர அதனைக் கூறு கிறாள். இங்கும் கனவின் பலன் உடனே தொடருகிறது.

கண்ணகி அரண்மனை வருகிறாள். வாயிலோன் மூலம் வரவு கூறி அனுப்புகிறாள் வாயிலோன் அரசனை அணுகுகிறான். அந்த நேரத்தில் அரசனுடன் அரசி தவிரப் பிறர் யாரும் இருந்த தாகக் கூறவில்லை. 'அரிமா னேந்திய அமளிமிசை யிருந்தனன்' (20: 22) என்றே குறிப்பிடுகிறார் ஆசிரியர். அந்தப்புரத்து மகளிர் சிலனும் பிறவும் ஏந்தக் கனவு நினைவிற்கு வந்த அரசி அதனைச் சொல்லவரும்போது அரசன் அமளிமிசையிருந்ததாகவே ஆசிரி யர் குறிப்பிடுகிறார் எனவே படுக்கைக் கட்டிலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான் என்றே கொள்ளலாம். அது, மாலைநேர முற்பகுதியாதலால் ஓய்வாக அமர்ந்து பேசிக்கொண்டிருக்கலா மல்லவா? அந்த நேரத்தில் வாயிலோன் வந்து தகவல்கூறக், கொற்றவை போன்ற வடிவில் முறைகேட்டுவரும் நங்கையின் குறைதீர்க்கும் கடமை முந்துறுத்த, காட்சிக்கெளியனான அம் மன்னன் அவளைத் தருக 'ஈங்கென'ப் பணிக்கிறான். உடனே அவன் தன் மனைவியும் உடன்வர முறைகேட்பதற்குரிய இடத்

திற்கு வந்திருக்கவேண்டும். அதனுற்ருன், 'வாயில் வந்து கோயில் காட்டக் கோயில் மன்னனைக் குறுகிய, தாகக் கண்ணகி கூறப்படுகிருள். (20: 46—47) பின்னர்ப் பழிதுடைக்க மாண்ட போதுகூட அவ்வரசன் 'அரசு கட்டிலில்' துஞ்சியதாகத்தான் கூறப்படுகிறது. (22: 7)

இவ்வாறு, வழக்குரைக்குங் காலம். மாலைப் பொழுது ஆனமையால்தான், அந்த முறை கேட்குமிடத்தே அரசன் அரசி தவிர வேறு ஆயமோ, மந்திரக் கணக்கரோ, அங்கில்லை. தனியாக வந்த பெண்ணொருத்தியின் குறைகேட்டு முறை செய்ய எப்போதுமே ஆயமும் குழுவும் இருந்தாக வேண்டும் என்பதில்லையே. சிக்கலில் குழப்பமிருப்பதாக நினைத்தால் பின்னர் மன்னன் பிறரையும் அழைத்துக்கொள்ளலாம் ஆனல் அரசனல் சாதாரணம் எனக் கருதப்படும் குறைகளை அவனே அந்த அந்த நேரத்தில் கேட்டுமுடிவுசெய்துவிடுவதுபுதியதல்லவே. சிலம்பிலேயே, இதே அரசனே, அன்று காலையில் பொற்கொல்லன் வந்து திருட்டு நிகழ்ச்சி யொன்று (கோவலனைப்பற்றி) கூற அதற்கு ஆயம் கூட்டாது, தீர்ப்புத் தந்திருக்கிருனே! எனவே, மந்திரச் சுற்றம் உடனிருக்கும்போதுதான் குறை கேட்கவேண்டும் என்பதில்லை என்பது தெளிவு. கண்ணகி வழக்காடுவது, மன்னனுக்கு முன்பின் அறிவிக்காத, அப்போதுதான் அங்கு வந்த ஒரு நிகழ்ச்சி. அந்த நேரத்தில் அரசனுடன் (அரசிதவிர) மந்திரச் சுற்றமோ, பிற ஆயமோ இல்லை என்பதனைப் பின்னர் ஒரு காதையில் தெளிவாகவே இளங்கோவடிகள் காட்டிவிடுகிருர். அழற்படுகாதையில், அழல் உண்ணும் மதுரை நகரையும், அங்குள்ள மக்களையும்பற்றிக் கூறும்போது; மந்திரச்சுற்றம் கலங்குவதையும் காட்டுகிருர் ஆசிரியர். அதுபோது, அந்த மந்திரச் சுற்றம் அரசனும் அரசியும் துஞ்சினுர்கள் என்பதை யறிந்திருக்கவில்லை என்றே குறிப்பிட்டுக் கூறுகிருர்.

"அரைசர் பெருமா னடுபோர்ச் செழியன்
....
புரைதீர் கற்பிற் றேவி தன்னுடன்
அரைசு கட்டிலிற் றுஞ்சிய தறியா
தாசான் பெருங்கணி யறக்களத் தந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு
கோயின் மாக்களுங் குறுந்தொடி மகளிரும்

ஓவியச் சுற்றத் துரையவிங் திருப்ப...''

(22: 3—11)

அறக்களத்தோரும், காவிதியும், கணக்கரும் அரசன் உயிர் துஞ்சியமை யறியார்கள் - என்ற அளவிலேயே கண்ணகி வழக்குரைக்கும் நேரத்தில் அரசனுடன் அவர்களில்லை என்பது போதரும். படுத்துத் துயிலத் தொடங்குவதற்கு முந்திய ஓய்வு நேரத்திடையேதான் வழக்குரைத்தல் நடந்ததாதலாலே அந்த நேரத்தில், வேறுயாருமில்லாது அரசனும் அரசியும் மட்டுமேஇருந்து அவலமிக்குத்தனியளாய் வந்த மங்கையொருத்திக்கு முறை செய்ய, மனங்கோணுது காட்சிக்கெளியனாய் வந்து குறைகேட்டான் என்று கொள்ளுவதே பொருந்தும்.

வழக்குரை முடிகிறது. மன்னனும் தேவியும் உயிர் துறக்கின்றனர். இன்னும் சினம் தணியவில்லை கண்ணகிக்கு. மதுரையையே தீக்கிரையாக்குகிருள். அழல் எங்கணும் எழுகிறது. அந்த நேரத்தில்தான் பல வீடுகளில் காதலர்களும் காதலிகளும் கொஞ்சி முடிந்து பஞ்சணை செல்லத் தொடங்குகின்றூர்கள். மாலையயர்தல் அவிந்த நேரம் அது. மணிவிளக்குகள் அணைக்கப்படும் நேரம் அது அந்த நாளின் இறுதிமுரசு ஒலித்து மடிந்த நேரம் அது. அந்த நேரத்தில் அந்த மதுரையில் தீயெழுகிறது. அந்தக் காட்சியினை அழற்படு காதையில் விரிவாகப் பேசுகிருர், இளங்கோவடிகள். இவ்வாறு அழல்பாயத் தொடங்கிய நேரம், மாலைப்போதினிறுதி யென்று கூறலாம். யாமத்தில் தீ யெரிந்துகொண்டிருந்த நேரத்தில்தான் காவல் தெய்வம் தோன்றிக் கண்ணகியிடம் கட்டுரை செய்கிறது.

காலையிலே-வைகறையிலே-கணவனுக்கு உணவிட்டு, அவன் உண்ணத் தான் மகிழும் இல்லறத்துக் கண்ணகியைக் காட்டினூர். மாலையில் சீற்றமே வடிவான கண்ணகியைக் காட்டுகிருர் காலை-மாலை வேளைகளில்தான் எத்துணை முரண்பாடு! காலையில், தன் கணவனின் வண்டார் இருங்குஞ்சி மாலையைத் தன்வார்குழல்மேல் சூடிக்கொள்ள அவன் தழுவ அவள் மகிழ்ந்தாள்! ஆனுல், மாலையில்? அவனைக் காணவும் முடியாத நிலையில் புண்டாழ் குருதி புறஞ்சோர அவன்மேனி பொடியாடிக் கிடக்கிறது. சிலம்பு விற்றுவரச் சென்றவனை உயிரிழந்த கோலத்தில் கண்டாள். மீளாத பெருந்துயரம வந்துற்றது. அவலம் பெருகியது. இது, ஊழ்வினையுருத்து வந்தூட்டிய அவலம். ஒவ்வொரு

பெருந்திருப்பத்திலும் பிறவற்றிலும் ஊழ்வலியே தன்வேலையைச் செய்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகப் பலவிடங்களில் விரட்டிய ஊழ், இறுதியில் மதுரைக்கே விரட்டி அங்குக் கோவலனைப் பலி கொள்கிறது. அந்த ஊழின் வலியை அறியாததால்தான் முன்னைய புகார்ப்பிரிவில் தானுற்ற இழப்பினைக் காட்டிக் கணவனை இடித்துரைக்கும் கண்ணகி, அந்தக் காலை போய் மாலை வந்த போது பெரும்பிரிவை—வாராத பெரும் பிரிவைக் கண்டு கலங்கினள் ஊழ்தந்த அவலம்தான் எத்தனைக் கொடுமை! காலை-மாலைக் கிடையேதான் எத்தனை முரண்பாடு!

இதே காலை-மாலை நிகழ்ச்சிகளின் முரண்பாட்டினைப் பாண்டியன் தன்தேவியுடன் வீழ்ந்து கிடக்கும்போதும், ஆசிரியர் உணர்த்துகிருர். காலையிலே பாண்டியன் பெற்ற மகிழ்ச்சி எங்கே, மாலையில் பெற்ற முடிபெங்கே! காலையில் ஆடல்பாடல் களிலே மனங்களித்தான்; ஊடிச்செல்லும் மனைவியின் ஊடல் தணிக்கக் காதல் உள்ளத்தினனுய் முனைந்து நின்ருன்; வழியில் பொற்கொல்லன் சொற்கேட்டுக் களவு போன சிலம்பை மனைவிக் குத் திரும்பித்தரும் வாய்ப்பு வரக்கண்டு மகிழ்ந்து, அந்த மகிழ்ச்சி யில் ஆழச்சிந்திக்காது ஆணையுமிட்டான். அதே அரசன்தான், பெண்ணொருத்தியால் வழக்காடப்பெற்று, உயிருந்துறக்கிருன். முற்பகலில் பிறர்க்கின்னு செய்தான், ஆராயாமல்; பிற்பகலில் அவன் அதன்பலனை அனுபவிக்கிருன். கண்ணகியின் கூற்ருகவே இதனைக்கூறுகிருர், ஆசிரியர்:

"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்" (21:3-4)

குறள் காட்டிய விதிக்கு (319) இணங்க நடந்துவிட்டதே அறத்தின் ஆற்றல்தான் என்னே! சிலம்பு உணர்த்துவதாகக் கூறப் படும் இரண்டாம் நீதியாகிய 'அரைசியல் பிழைத்தோர்க்கறங் கூற்ருவதூஉம்' என்பதற்கு இலக்கணமாக அன்ருே, அரசனது அவலம் அமைகிறது! அறத்தின் வலிமை, எவ்வளவு வேகமாகச் செயல்படுகிறது! அரசனேடு அது அரசியையுமல்லவா பலி கொள்கிறது.

ஊழ் துரத்துவதாலும், அறக்கூற்றம் வலுவானதாலும், நிகழ்ச்சிகள் ஒன்றின் பின் ஒன்ருக வேகமாக நிகழ்ந்து ஒரே நாளுக்குள் பேரவலத்தை உண்டுபண்ணி, முடிவடைகின்றன.

முந்திய நாள் வைகறையின் தொடக்கத்திலேதான் கவுந்தியடிகளுடன் இருவரும் புறஞ்சேரி வந்து சேர்ந்தனர். பின்னர், வைகறையின் கழிவாகிய 'புலரி' வைகறை'யில் கவுந்தியடிகளிடம் கண்ணகியைப் பாதக்காப்பினளாக விட்டுவிட்டு, மதுரை நகரைக் காணச் சென்றான், கோவலன். பலவீதிகளைச் சுற்றி ஊர் கண்டு, எற்பாடு நேரத்தே மீண்டு வருகிறான். அங்கே, மாடலமறையோன், கோவலனது துயரத்திற்கு 'உம்மைப் பயன்கொல்' என விதிவலி கூறி வருந்துகிறான். கோவலன் தான் கண்ட தீக்கனவு நினைவு கூர்கிறான். கவுந்தியடிகள், அறத்துறை மக்கட்கேயுரிய புறஞ்சேரியை விட்டுக் கோவலனைக், காதலி தன்னொடு கதிர்செல்வதன் முன் மாடமதுரை மாநகர் புகுமாறு கூறுகிறார்; மாதரிவர, அவளிடம் அவர்களை அடைக்கலப்படுத்துகிறார்' சென்ற ஞாயிற்றுச் செல்சுடர் அமயத்து மாதிரியோடு இருவரும் மதுரை சேருகின்றனர். அங்கே, இருவரையும் மாதரி, காவற்சிற்றிற்கடிமனையில்தங்கச்செய்கிறாள். கவுந்தியடிகள்தொடர்பால் சாவக நோன்பிகள் என அவர்களைக்கருதி, இரவிருக்கச் செய்து நாள்வழிப்படூஉம் அடிசிலாக்குதற்கு வசதிசெய்து தருகிறாள். வைகறையின் கழிவிலே ஐயையின் துணையுடன் சமைத்துக் கணவனை உண்ணச் செய்கிறாள், கண்ணகி. கோவலன்—கண்ணகி உடனிருக்குந் தோற்றங்கண்டு (அன்றைய நாள் வேலையைத் தொடங்கவிருக்கும்) ஆயர்பெண்கள் பாராட்டி மகிழ்கின்றனர். உண்டு, பாராட்டிப், பனிநீர் கரப்பக்கண்ணகியிடம் விடைபெற்றுச்செல்லுகிறான், கோவலன். சென்றவிடத்தில், பொற்கொல்லன் சூழ்ச்சியினால் கொலையுண்கிறான்; குருதி சோரக்கிடக்கிறான்.

இங்கே, ஆயர்சேரியில், காலைமுரசங்கேட்டு அன்றைய வேலையைத் தொடங்கும் மாதரி, பாலுறையாமை கண்டு, வருவதோர் தீங்கொன்றுண்டு எனக்கருதுகிறாள் ஐயையையழைத்துக் குரவைக்கூத்தாட ஏற்பாடு பண்ணுகிறாள். கண்ணகி காண ஆயர்பெண்கள் பலவகைப் பாடல்களைப்பாடி ஆடுகிறார்கள். முடிந்தபின், மாதரியும் ஐயையும் 'நீடுநீர் வையை நெடுமாலடியேத்தச்' சென்றவிடத்தே, துறையில், பெண்டிர்சிலர் ஊரரவமாகப்பேசும் கோவலன் கொலைச் செய்தியைக் கேட்கின்றனர். ஐயை விரைந்து வந்து செய்தியைத் தயங்கித் தயங்கிக் கூறுகிறாள். முன்பே கனவினாலும், அடியுள்ளத்தே படிந்துள்ள வேதனையாலும் தாக்குண்டிருந்த கண்ணகி செய்தியறிந்து துடிக்கிறாள். காய்ந்து கொண்டிருக்கும் பகலவனை நோக்கிக் 'கள்வனோ என் கணவன்,

என அரற்றுகிருள். ஊர்முழுதும் புலம்பிச் சென்று, இறுதியில் கம்பலைமாக்கள் காட்ட, மல்லன் மாஞாலம் இருளூட்டி மாமலை மேல் செவ்வென் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளித்த புல்லெண் மருண் மாலையில், கணவனுடலைக் குருதி சோரக், காணுகிருள். அழும் அவனை, 'இருந்தைக்க' என விட்டுப்பிரி கிறது, அவன் ஆவி. கோவலற்குற்றது தீங்கெனக்கேட்டு காவலன்முன், தான் கட்டுரைத்ததாக, முன்பு தான் கண்ட கனவை, நினைந்து எழுகிருள், அவள். நெடுங்கயற்கண் நீர்துடை யாது அரசனது செழுங்கோயில் வாயில் முன் செல்கிருள்.

அங்கே, அரண்மனையில் அமளிமிசை அரசன் ஒய்வாக இருக்கத் தான் முந்திய இரவு கண்ட கனவு நினைவில்வர, உரைத் துக்கொண்டிருக்கிருள், கோப்பெருந்தேவி. வாயிலோன் முறை கேட்டு வந்த கண்ணகியின் வரவு கூறுகிருன், மன்னனிடம்: குறைகேட்டு முறைசெய்யத, தான் ஒருவனே போதுமாதலால் மந்திரச்சுற்றம் அருகேயில்லாத் அந்த முன்னிரவாகிய மாலை நேரத்தே, தன்மனைவி உடனிருக்க வழக்கினைக் கேட்கத் தயாரா கிருன், மன்னன். முற்பகல் செய்த வினையைப் பிற்பகலின் முடி விலே அனுபவிக்கிருன். சினந்தீராத கண்ணகி, பின்னர் மதுரை யையே அழலூட்டுகிருள். காதலர் பள்ளிமிசைச் செல்லும் அந்த நேரத்தில் எரிபரவுகிறது. காவல்தெய்வம் தோன்றிக் கண்ணகியை அமைதிப்படுத்துகிறது. கண்ணகி அந்த இரவின் பிற்பகுதியிலே, அதன் இருளைப் பொருட்படுத்தாது, பகலுக்கும் அதற்கும் வேறுபாடு காணுது பெண்களுக்குரிய அச்சம் சிறிது மின்றி வெளியேறுகிருள், மதுரையை விட்டு. மதுரை நகரினுள் முந்தியநாள் மாலையின் தொடக்கத்தே கீழ்த்திசை வாயிற் கணவ ஞெடு புகுந்தவள், மறுநாள் பின்னிரவில் மேற்றிசை வாயில், வறியளாய், மதுரையை விட்டகன்ருள். இதுவே மதுரையில் நிகழ்வுற்ற சிலம்பின்கதை; அவலத்தின் உச்சமாய் இரக்கத்தின் உறைவிடமாய், விரைந்து நடந்து முடிந்துவிட்ட ஒரு நாள் கதை!

புகார் நகரில் கதை நீண்ட நாள் நடக்கிறது. ஆயினும் தேவையான செய்திகள் மட்டுமே (சில வருணனைகளும் உண்டு; அவையும் காப்பியத்தின் போக்கே) செயல்களாகவும் உரையாடல் களாகவும் சுருக்கித் தரப்படுகின்றன. தெளிவிற்காக, 'யாண்டு பல கழிந்தன' என்றெல்லாம் குறிப்பிட்டுக் கூறப்படுகிறது, அங்கே. அது, நாடகப் போக்கிற்காக-அவசியத்திற்காகக் கையா

ளப்பட்ட இயல்பு. வஞ்சிக்காண்டத்திலும் பலநாள் நிகழ்ச்சி களே கூறப்படுகின்றன. அதையும் தெளிவாகவே, பல நிகழ்ச்சி களின் வாயிலாக இளங்கோ வடிகள் அங்கே குறிப்பிட்டுச் செல் கிறார். இரண்டிற்குமிடையே, சிலம்பின் உயிர்நாடியாக, மைய மாக, உச்சமாக விளக்குகின்ற மதுரை நிகழ்ச்சிகளில் காலநீட் டமே இல்லை. விரைவாக நிகழ்ச்சிகள் நடந்து முடியவிருக்கின்றன என்பதனைக் காட்டுவது போலவும், மதுரைநகர் அடைவதற்கு முன்பு, காடும், நாடும் கண்டு கடந்து வருவதை விரிவாக விளக்க மாகக் கூறுகிறார், இளங்கோவடிகள், மதுரைக் காண்டத்தின் தொடக்கத்தில்! நகரை நெருங்க நெருங்க நிகழ்ச்சிகள் விரைந்து சூழலுகின்றன. நகரினுள் வந்ததும், ஒரேநாளில், கோவலன் சாவ, கண்ணகி துடிக்க, அரசன் இறக்க, அரசி பின்தொடர மதுரையில் தீத்திறத்தார் பக்கம்தீச்சேர-எல்லாம் நடந்து முடி வடைகின்றன. அந்த வேகம், பின்னர் வஞ்சிக்காண்டத்தில்தான் அமைதிபெறுகிறது.

கதையின் போக்கிலே கிடக்கும் அமைதியையும், வேகத் தையும், தென்றலையும் புயலையும் மாறி மாறிக் கண்டவுடன் மயங்கவேண்டியதில்லை. அதுவே நாடகப் போக்கமைந்த காப் பியத்தின் சிறந்த இயல்பு. இன்னும் ஆழமாகப் போனால், சிலம்பின் அமைப்பு, நாடகம்-காப்பியம் என்ற இரண்டின் அமைப்பை மட்டுமே கொண்டதன்றி, இன்னுமொரு நுட்ப மான போக்கையும் கொண்டுள்ளதையறியலாம் ஆடலும் பாட லும் வல்ல சிறுகுழுவொன்று ஆடியும் பாடியும் காட்டச், சில காட்சிகளையும் உரையாடல்களையும், வல்லவன் ஒருவன் வருணித் துக்கூறும் போக்கினையுடையதாகச் சிலம்பு அமையப் பெற்றிருக் கிறது என்பதனையறியலாம். இதனைப் பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். (A History of Tamil Literature, Annamalai Nagar, 1955 P. 38) கதைப்போக்கும் உரையாடற் கூறுகளும் அமைந்தசங்கப்பாடல்கள், கலித்தொகை பத்துப்பாட்டு-முதலியவற்றின் மரபையடிப்படையாகக்கொண்டு வளர்ச்சி பெற்ற போக்கும் இந்த அமைப்பினுள் அடங்கும் எனலாம்.

உரையாடல்களில் சிலவற்றை இன்னார்க்குரியன என்று வெளிப்படையாகக் கூறாமல் விடுவது, இந்த அமைப்புப் போக் கினால்தான். உரையாடல்கள் பல, 'என' என்று சொல்லுவதாய்

முடிகின்றன. காட்சி, இடமாற்றங்கள் பல, "கூற, கொடுப்ப, பின், ஆங்கு, அப்பால், எங்கென" முதலிய சொற்களால் காட்டப் படுகின்றன. பெரிய நீளமான உரையாடல்கள் பலவும் பேசும் மாந்தரையும் சுட்டி, உரைத்ததாகத் தனியே குறிப்பிடவும் செய் கின்றன (காட்டு 16:165–202). சில நிகழ்ச்சிகளை ஆசிரியரே தம் கூற்றின் வழியாகக் கூறுவதுமுண்டு. இவையெல்லாம், தேவை, சூழல், இனிமை முதலியவற்றின் நோக்கத்தாலெழுந்தவையே யாம். இவையேயன்றிக் குறிப்பிட்ட தனிச் சொல்லாலன்றிப், பொருட்கிடக்கை காட்டும் காட்சியுருக்களாலேயே, 'மாற்றங்கள்' காட்டப்படுவதுமுண்டு. காட்டாகப் பொற்கொல்லன், அரண் மனை நோக்கிச் செல்லும்போது உணர்த்தப்படும் காட்சிமாற்றம்.

"புலம்பெயர்ப் புதுவனிற் போசக்குவ னியானெனக்
கலங்கா வுள்ளங் கரந்தனன் செல்வோன்
கூடன் மகளி ராடற் றோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவல னுள்ளங் கவர்ந்தன..." (16:125–134)

என்று கூறப்படுகிறது. அது முடியும் போது, உள்ளங்கரந்து செல்லும் கொல்லும்–மனைவியின் ஊடலைத் தணிக்கும் நோக்கத் தினனாய் விரையும் மன்னனை–எதிர்ப்பட்டான் என்றே சென்று: முடிகிறது.

காதைகள் ஒன்றையொன்று தொடர்புபடுத்தி வருவதி லும், தனித்து வருவதிலும்கூட இத்தகைய அமைப்புக்கள் உண்டு. துன்பமாலையிலும் வழக்குரை காதையிலும் முன் காதைகள் நடக்கும் இடமும், இக்காதை நிகழ்ச்சிகள் நடக்கும் இடமும், வேறு, என்பதனைச் சுட்டி–ஆனால் நிகழ்ச்சித் தொடர்பு ஒன்றே என்பதனையும் சுட்ட–'ஆங்கு' என்ற சொல் பயன்படுத்தப்படு கிறது, அங்கே. துன்பமாலைக்கும் ஊர்சூழ்வரிக்கும், நிகழ்ச்சி, காட்சி, இடம், கதை மாந்தர்–முதலிய பலவகைகளிலும் தொடர் புண்டு. எனவே, சொற்றொடரியல்பிலேயே தொடர்பு இருக்கு மாறு அமைக்கப்பட்டுள்ளது. கொலைக்களக்காதையினிடையே, வேறு தேவையின் பொருட்டு, நிறுத்திவைக்கப்பட்ட ஆயர் செய்தி–முந்தைய நிகழ்ச்சித் தொடர் முடிந்தபின் மீண்டும் தனிக் காதையில் (ஆய்ச்சியர் குரவை) தொடரப்படுகிறது. இந்த ஆய்ச் சியர் குரவையில், தனிநிகழ்ச்சிகள்–செயல்களில்லை; ஆடல் பாட

லேயுண்டு. ஆயின், இந்தக் காதைக்குச் சிறப்பான தேவை யுண்டு. கோவலன் கொலையுண்டதாகிய மிகப்பெரிய அவலத்தைக் கேட்போரது உணர்ச்சியை அமைதியுறுத்தும் பொருட்டுக் கதை சொல்பவன் கொஞ்சம் திசை திருப்ப வேண்டுமல்லவா? தவிரவும், கோவலன் கொலையுண்ணவும் தெருவிலுள்ளோர் அறியவும் சிறிது நேரம் பிடிக்குமே; அந்த நேரத்தில் குரவை நடந்து, அதுமுடிந்த பின்னர்த்தானே கண்ணகி செய்தியறிய முடியும். கதை சொல்லுவோன் திறனுக்கேற்பவே காதை அமைந்திருக்கிறது.

இவ்வாறு சிலம்பின் ஒட்டு மொத்தமான போக்கினையும் அமைப்பு முறையினையும் மரபினையும் கண்டால், மதுரையில் நடக்கும் நிகழ்ச்சிகளின் தொடர்பு, ஒரே நாளில் நடந்து, ஊழின் வலியுணர்த்தி, அறக்கூற்றத்தின் சீற்றம் காட்டி, அவலத்தின் உச்சங்காட்டுவதைத் தெளிவாகவுணரலாம். காட்சி, நிகழ்ச்சி ஆகியவற்றின் திருப்பமும் பெருக்கமும், நடந்தவற்றின் வேகங் காட்டுவனவேயன்றிப் பிறிதில்லை. ஒவ்வொரு காதையும் நிகழ்ச்சி, காட்சி, இடம்-என்பனவற்றைத் தேவைக்கேற்றாற் போல் தொடரச் செய்தும் பெயரச் செய்தும் காலத்தை வேகமாகப் பின்பற்றி இழுத்துச் செல்வது போல அமைக்கப் பெற்றிருக்கின்றன. மதுரை நகரில் நடந்த இந்த ஒருநாள் அவலநாடகம், இளங்கோவடிகளின் சிறந்த நுட்பமான பின்னலில் மிகச் சிறப்பாக விளங்குகிறது என்பது இதனால் தெளிவாகும்.

---

* இக்கட்டுரை எழுதத் தூண்டியவர், பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் திரு. மொ. அ. துரையரங்கனார் ஆவார்.

சங்கச் செய்திகள்

பள்ளியிறுதி வகுப்பு, கல்லூரி மாணவர்கட்குரிய சங்கத்தமிழ்த் தேர்வுகள்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், சென்ற 66 ஆண்டுகட்கு மேலாகச் செந்தமிழ் வளர்க்கும் திருத்தொண்டில் ஈடுபட்டுள்ளதைத் தமிழ் உலகம் நன்கறியும்.

(உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப்பள்ளி, கல்லூரிகளிற் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியில் போதிய புலமைபெறுவதற்கு இத்தேர்வுகள் துணைபுரிகின்றன.)

(அரசாங்கத் தேர்வுகளும் (S. S. L. C. & Training Schools) பல்கலைக்கழகத் தேர்வுகளும் எந்த முறையில் நடைபெறுகின்றனவோ, அந்த முறையிலேயே இச்சங்கத் தேர்வுகளும் நடைபெறுகின்றன. பல்கலைக் கழகத்தினர், அரசாங்கத்தினர், கேட்கும் முறைகளைப் பின்பற்றியே, வினாத்தாளின் நேரம், வினாக்களின் அமைப்பு முறை முதலியனகொண்டு இச்சங்க வினாத்தாட்கள் அமைக்கப்படுகின்றன. எனவே, மாணவர்கட்குத் தேர்வு எழுதுவதில் நல்லபயிற்சியும், அனுபவமும் ஏற்பட்டுவிடுகின்றன.)

(அரசாங்கத் தேர்வு, பல்கலைக் கழகத் தேர்வு இவற்றிற்கு முன்னதாகவே இச்சங்கத் தேர்வுகள் நடத்தப்பெற்று, உரிய மதிப்பெண்களும், சான்றிதழ்களும் அனுப்பப்படுகின்றன.) ஆதலின் மாணவர்கள், அவற்றைக்கொண்டு மேலும் படித்து நிறைய மதிப்பெண்கள் பெறுவதற்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்படுகின்றது

(இச்சங்கத்துச் சான்றிதழ் பெற்றிருப்போர், படிப்பைமுடித்த பின், அரசாங்க அலுவலுக்கோ அன்றி வேறு வேலைக்கோ செல்லுங்காலத்து, அவர்கள் மிகுந்த தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர்.)

மேலும், (இச்சங்கத்துச் சான்றிதழ் வைத்திருப்போர்க்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

தேர்வு நடைபெறும் இடங்கள் :

ஒரு தேர்வில் பதினைந்து மாணவர்கட்குக்குறையாமல் கலந்து கொள்பவர்களாயிருந்தால், அந்தப் பள்ளியை அல்லது கல்லூரியைத்தேர்வு நடைபெறும் இடமாக அமைத்துக்கொள்ளலாம். அதற்கான செலவுத் தொகையை இச்சங்கம் ஏற்றுக்கொள்ளும்.

தேர்வு முடிவுகள்:

இத்தேர்வின் முடிவுகள், அரசாங்கம் அல்லது பல்கலைக் கழகத்தார் நடத்தும் தேர்வுகட்கு முன்னதாகவே, மாணவர்கட்கு அறிவிக்கப்படும்.

சான்றிதழ்கள்:

தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கட்குரிய சான்றிதழ்கள் பள்ளி அல்லது கல்லூரி விடுமுறைக் காலத்திற்கு முன்னதாகவே தலைமையாசிரியர் அல்லது முதல்வருக்கு அனுப்பிவைக்கப்படும். மாணவர்கள், தங்களுக்குரிய சான்றிதழ்களை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பரிசுகள்:

வெற்றி அடைந்த மாணவர்களில் மாநிலத்தில்,மாவட்டத்தில் பள்ளியில் மிகுதியாக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு முறையே பரிசுகள் வழங்கப்படும்.

இங்ஙனம்,
கி. பழநியப்பன்,
செயலாளர்.

1968 பள்ளி இறுதிப் பாடப்புத்தகத்தில் மறைமலையடிகளார் எழுதிய "தமிழ்த்தாய்" என்ற பாடம் பற்றித் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார் சென்னை, வெளியிட்டுள்ள அறிக்கை.

"தமிழ்த்தாய்" என்ற கட்டுரை மறைமலையடிகளாரால் தனிச் சிறு நூலாக 1921-ஆம் ஆண்டுக்கு முன் எழுதி வெளியிடப் பெற்றது. அது 1921-ஆம் ஆண்டில் அடிகளார் வெளியிட்ட "அறிவுரைக் கொத்து" என்ற கட்டுரைத் தொகுப்பில் சேர்க்கப் பட்டுள்ளது. அத்தொகுப்பில் 13 கட்டுரைகள் அடங்கியுள்ளன. பின் 1931-ஆம் ஆண்டில் மேலும் 5 கட்டுரைகளைச் சேர்த்து "அறிவுரைக் கொத்து" இரண்டாம் பதிப்பினை வெளியிட் டுள்ளார்கள்.

1937-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் (இண்டர் மீடியட்) இடைநிலைத் தேர்வுக்குப் பாடமாக 1934இல் பல்கலைக் கழகக் கல்விக் குழுவினரால் "அறிவுரைக் கொத்து" வைக்கப் பெற்றது. அந்தக் குழுவிலே திரு. டி. சிவராமசேதுப் பிள்ளை, எம். ஏ., பி. எல், அவர்கள் தலைவராகவும், டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களும், பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் S. அனவரதவிநாயகம் பிள்ளை அவர்களும் உறுப்பினர் களாகவும் இருந்தனர். அந்த நூலில் "தமிழ்த் தாய்" 10ஆவது கட்டுரையாகவும், "தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்" 14ஆவது கட்டுரையாகவும் உள்ளன.

193-ஆம் ஆண்டில் இடைநிலை வகுப்பு மாணவர்கள் அறிவுரைக் கொத்தை வாங்கியபோது அதன்கண் உள்ள "தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்" என்ற கட்டுரையில் ஒரு குறிப் பிட்ட வகுப்பினரைத் தாக்குவதான குறிப்புக்கள் இருப்பதாகவும் அறிவுரைக் கொத்தைப் பாடமாக வைக்கக் கூடாதென்றும் அதனை நீக்க வேண்டுமென்றும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரும், அவர்கட்குச் சார்பான இதழ்களும் கிளர்ச்சி செய்தனர். அக் கிளர்ச்சிக்கு மிகவும் மும்முரமாக எதிர்ப்பு ஏற்பட்டது. அதன் பின் பல்கலைக் கழகத்தினர் அறிவுரைக் கொத்தை அப்படியே பாடமாக நடத்தலாம் என்று முடிவுசெய்துவிட்டனர். "தமிழ்த்

தாய்'' என்ற கட்டுரை அதே அறிவுரைக் கொத்திலேயே உள்ளது தான். அப்போது தமிழ்த்தாய் என்ற கட்டுரையிலுள்ள குறிப்புக்களைப் பற்றிக் கிளர்ச்சியோ எதிர்ப்போ கிடையா. ஆனல் இப்போது அந்தக் கட்டுரை பற்றிய கிளர்ச்சிக்குக் காரணம் யாதோ?

"தமிழ்த் தாய்" என்ற கட்டுரை எழுதிய காலத்திலே "தமிழ் மொழி" முதன் மொழியாக இல்லை. தமிழர்களே தமிழைப் புறக்கணித்து வந்த காலம். வடமொழிக் கலப்பில்லாமல் தமிழ் தனித்து இயங்கும் ஆற்றலில்லாத மொழி என்று பேசிய காலம். தமிழைச் 'சூத்திர மொழி' யென்றும் வடமொழியைத் 'தேவ மொழி' யென்றும் வாய் கூசாமல் ஒரு சிலர் பேசி வந்த காலம்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளையும் துறைபோகக் கற்ற மறைத்திரு மறைமலையடிகளார் தமிழர்கட்கு எச்சரிக்கையூட்டும் வகையில் 'தமிழ்த் தாய்' என்ற கட்டுரையினை எழுதினர்கள். அதில் தவறு ஒன்றும் இருப்பதாக இல்லை. தம்மைத் தமிழர் என்று கருதுபவர்களுக்கு அக் கட்டுரைமீது வெறுப்பும் சினமும் ஏற்படுமா?

தத்தம் தாயினிடம் ஒருவர்க்கு அன்புண்டாவது யாண்டும் நிகழ்ந்துவரும் மாற்றமுடியாத மறுக்க முடியாத இயற்கையேயாகும். அதுபோல் அவரவர் வாழும் வீட்டில் பற்று வைப்பதும் இயற்கையேயாகும். ஒருவரையொருவர் இனப்படுத்தி அழைப்பது அவரவர் தாய் மொழியினைக் கொண்டேயாம். பன்மொழிப் புலவர்களும் தம் தாய்மொழிப் பற்றும் அம்மொழி வளமும் புலமையும் பெருகப் பணிபுரிந்தே வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் அதற்கு மாருகத் தமிழைச் சிறிதுங் கற்காது புறக்கணித்து ஆங்கிலத்தைப் பெரிதுங் கற்றுச் சிலர் பெருமைபேசி வந்ததைக் கண்டு உளம் நொந்த அடிகள் உண்மை உணர்த்தினர். அதே நிலை இப்பொழுதும் இருக்கின்றதென எண்ணல் எங்ஙனம் பொருந்தும்? விடிந்தும் இருள் நீங்கவில்லையென்று ஒருவர் நினைந்து சொல்வதோடொக்கும் இப்பொழுது தோன்றிய இவ்வெதிர்ப்பு.

எனவே, எக்காரணம் பற்றியும் இப் பாடத்தையோ இதன் எப்பகுதியையோ நீக்குதல் வேண்டாவெனத் தமிழக அரசினரைக் கேட்டுக்கொள்கிருேம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

1969-தேர்வு—கால அட்டவணை

வகுப்புகள்	தேர்வுநாள்		நேரம்
1. உயர்பள்ளி இறுதி வகுப்பு S. S. L. C. or Standard XI	25—1—69	காலை	10—12½
		மாலை	2— 4½
2. பயிற்சிப் பள்ளி (முதியோர் இளையோர்)	25—1—69	காலை	10—12
3. கல்லூரி முதனிலை வகுப்பு (P.U.C.) B.A. (I,II Papers)	1—2—69	காலை	10— 1
		மாலை	2— 5
முதனிலை (Adv) B.A., III Paper	3—2—69	காலை	10— 1

தேர்வுக் கட்டணங்கள்

1. பள்ளியிறுதி வகுப்பு	
பொதுத் தமிழ் (Academic Course)	1—75
தொழிற் பிரிவு (Diversified Course)	1—00
2. பயிற்சிப் பள்ளி	1—00
3. கல்லூரி—முதனிலை (P.U.C.)	
இரண்டாம் பிரிவு	2—00
சிறப்புத் தமிழ் (Adv)	1—25
பட்டப்படிப்பு (B. A., B. Sc ,)	3—50

கட்டணங்கள் செலுத்த வேண்டிய இறுதி நாள்

உயர்பள்ளி, பயிற்சிப் பள்ளிகள்	7—1—69
கல்லூரிகள்	14—1—69

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :-

மேலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை-1.

மதிப்புரை

நூல்: பாரதி, கவித்துவம் ஒரு மதிப்பீடு.

ஆசிரியர்: இராசேசுவரி நீலமணி.

கிடைக்குமிடம்: இதழ்பதிப்பகம், சென்னை-5.

விலை: ரூபாய் ஒன்று; பக்கங்கள் 84.

"பாரதி கவித்துவம் ஒரு மதிப்பீடு" என்னும் நூல் திறனாய்வு முறையில் வெளிவந்த, ஒரு நூலாகும். 'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' எனப்பாரெங்கும் பாரதி விழா எடுக்கும் வேளையில் இந்நூல் அவரை ஒரு கவிஞரா? என அலசி ஆராய்கிறது. சுவைபுதிது, பொருள்புதிது வளம்புதிது சொற்புதிது சோதிமிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மகாகவிதை எனத் தன்கவிதைக்குத் தானே மணி மகுடமிட்டுக்கொண்ட பாரதியின் கவிதைகளை இந்நூல் ஆறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. 1 பாரதி கவிஞரா? 2 சொல் அறியாத பாரதி 3 பொருள் அறியாத பாரதி 4 யாப்பு அறியாத பாரதி 5 அணி அறியாத பாரதி 6 பாரதி கவிஞர் அல்லர் என்பனவே அத்தலைப்புக்களாகும்.

பாரதியின் கவிதைகளை மேற்கண்ட ஆறு முறைகளில் அமைத்துக் கொண்டு அவற்றில் காணப்படும் முரண்பாடுகளையும் குறைபாடுகளையும் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. சிற்சில இடங்களில் ஆசிரியர் எடுத்துக் காட்டியிருப்பது சிந்தனைக்குரியதாக இருக்கின்றது. சிற்சில இடங்களில் ஆசிரியரின் கூற்று கவிஞனின் கற்பனைக்குத் தடை விதிப்பதாக அமைந்துள்ளது. பாரதியார் கவிஞர் அல்லர் என்பதற்கு ஆசிரியர் காட்டியிருக்கும் காரணங்கள் பலவாகும். கவிஞனின் கவிதையில் மொழித்தூய்மைக்குச் சிறப்பிடம் இருத்தல் வேண்டும். பாரதியாரின் பாட

லில் ஸரிநிகர் ஸமானம், ஜாதி, ஸ்நேஹம், மஹாத்மா, ஸ்ரீதேவி, ரூபம், யோகம், மஹிமை, கஷ்டம், தோஷம் என்பன போன்ற நூற்றுக்கணக்கான வடமொழிச் சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. மேலும் சாதாரண மக்கள் பேசிக்கொள்ளும் சங்கேதச் சொற்களும் அதிகம். கண்ணாலம், வசக்கி, கும்பி, அமுங்குதல், சூரத்தனம், கோரம் போன்றவைகள் ஒரு சில. மேலும் பண்டிதச் சொற்களும், சொல்லை விகாரப்படுத்தியிருத்தலும், சொல்லைத் தவறாகப் பயன்படுத்தியிருத்தலும், மரபறியாது எழுதியிருத்தலும் பாரதியின் கவிதைகளில் அதிகம் காணப்படுகின்றன என்று மிகுதியாகச் சான்றுகள் காட்டப்பட்டுள்ளன. கூறியது கூறலும், முரண்படுதலும் கருத்தில் தவறலும், யாப்பில் தவறலும் அணியில் தவறலும் எனப் பல தவறுகள் எடுத்துக் காட்டப்பட்டு முடிவில் பாரதியார் ஒரு கவிஞர் அல்லர் என இந்நூல் முடிவு கூறுகிறது. பாரதியாரின் கவிதைகளைப் பற்றி நூலாசிரியர் கூறும் பல கருத்துக்கள் ஒத்துக் கொள்ளத்தக்கனவே யென்றாலும் மொத்தத்தில் 'அவர் ஒரு கவிஞரே அல்லர்' என்று கூறுவது ஏற்புடைத்தா என்பது சிந்தித்தற்குரியது. ஆசிரியரின் திறனாய்வு போற்றத்தக்கது. அனைவரும் படித்து, உண்மைக்கு விடைகாண முயல வேண்டும்.

—மு. உலகநாதன்.

ஃ ஃ ஃ ஃ

நூல்: எண்ணியல்
ஆசிரியர்: புலவர் S. நடராசன்
வெளியீடு: இலக்கிய நூலகம், வடக்கு இராசவீதி, புதுக்கோட்டை.

பக்: 68. விலை: ரூ. 1.

புலவர் S. நடேசன் எழுதியுள்ள "எண்ணியல்" என்ற நூல், ஓர் ஆராய்ச்சி நூல். தமிழ் எண்களின் தோற்றம், வளர்ச்சி, மாறுதல் ஆகியவைகளைப் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சியால் உண்டான முடிவுகளை இந்நூல் விளக்குகிறது.

தொல்காப்பியம் முதல் பிற்கால நூல்கள் வரை ஆராய்ந்த இந்நூல் ஆசிரியர் "எண்முறையை உலகுக்களித்தது தமிழே. தமிழ் எண்களே, உலக எண்கள்" என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்.

மொழியியல் ஆராய்ச்சியில் எண்களைப் பற்றிய ஆராய்ச்சி விரிவாக இல்லை. புலவர் நடேசன் எழுதியுள்ள இந்நூல் போற்றத்தக்க ஒரு நன் முயற்சி. ஓர் ஆராய்ச்சியாளருக்கு வேண்டிய துணிவும் அடக்கமும் இந்நூலில் பரக்கக் காணலாம்.

இந்நூலின் 40வது பக்கத்தில், ஒன்பது என்ற எண்ணைப் பற்றிய ஆராய்ச்சியில், "இதுவே முடிவு எனக் கூறவில்லை; ஆய்வு வளர்ச்சியுடையது. ஆதலின் இன்னும் நல்ல ஆய்வு காண, இது ஒரு முதற்படி எனக்கொள்க" என்று குறிப்பிட்டிருப்பது மொழி ஆராய்ச்சியாளர்கள் மிகவும் கவனிக்கத்தக்க கருத்து.

புலவர் நடேசன் அவர்களின் இந்நூல், இன்னும் பல ஆராய்ச்சி நூல்களை அவர் வெளியிடுவார் என்ற நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது. "எண்" தொடர்பான ஆராய்ச்சிக்கு, இந்நூல் ஒரு தூண்டுகோலாக அமையும் என்பது எனது துணிவு.

—A. P. M. சுல்தான் M. A., B.L.,

'செந்தமிழ்' ஆண்டுறுப்பினர்கட்கு (சந்தாதாரர்கட்கு) வேண்டுகோள்.

அன்புடையீர்,

சென்ற இதழுடன் 'செந்தமிழ்' ஆண்டுறுப்பினர் கட்டணத் தொகை நிறைவுறுகின்றது. அன்பர்கள் ரூபாய் மூன்று, பணவிடை வழி அனுப்பி, இதனைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். மதுரைத் தமிழ்ச் சங்க வளர்ச்சியில் தாங்கள் கொள்ளும் அரிய பங்கு இது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கி. பழநியப்பன்,
செயலர்.

அமரர் பாசுகர சேதுபதி அவர்கள்

(மறைவு: 1903)